# உதயன்

விலை ரூபா 20

பக்கங்கள் 28

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 205 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 04, சனிக்கிழமை 18.06.2016



சிரிய அரசுக்கு எதிராக களமிறங்குகிறது அமெ.



பக்கம் 14 -15


## உதவிகளைத் துரிதப்படுத்துங்கள்!

### கொஸ்கமவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜுன் 18
சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தால் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் துரிதமாக வழங்கவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளை மதிப்பீடுசெய்யும்பணிகளையும் துரிதப்படுத்தவேண்டும் என்று பணிப்புரை விடுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
கொஸ்கம சலாவ ஆயுதக் களஞ்சிய பக்.23

## வாக்காளருக்கு எஸ்.எம்.எஸ். பதிவை நினைவூட்டுவதற்காக

### தேர்தல்கள் திணைக்களம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம், ஜுன் 18
"வாக்காளர் பெயர் பதிவுக்கான விண்ணப்பப் படிவத்தை முழுமைப்படுத்திக் கையளித்துவிட்டீர்களா?" என்று சகல அலைபேசி மற்றும் சி.டி.எம்.ஏ. பாவனையாளர்களுக்கும் குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) அனுப்பப்படவுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இவ்வாறு குறுந்தகவலை அனுப்பித் தகுதியுள்ள அனைவரையும் வாக்காளராகப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பக்.24

# கொழும்பு மீதான அழுத்தம் தொடரவேண்டும்

### போர்க் குற்றங்களுக்கு ஆதாரம் உண்டு என்கிறார் ஸ்ரீபன் ராப்



லண்டன், ஜுன் 18
இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்பதனை உறுதி செய்வதற்கான ஆதாரங்களுடன் கூடிய பாரதூரமான குற்றச்சாட்டுகள் உள்ளன. எனவே அதனை விசாரிப்பதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும். அதை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப்.
இலங்கையின் பொறுப்புக்கூறும் பொறி பக்.23

## பொலிஸார் மீது மக்களுக்கு முழு நம்பிக்கை வரவேண்டும்

### அதற்கமையச் செயற்படுமாறு பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜுன் 18
வடக்கில்தற்போதுள்ள அமைதியான சூழ்நிலையை மேலும் உறுதிப்படுத்துமளவுக்குப் பொலிஸார் இன்னும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். பொலிஸார் மீது பொதுமக்கள் இனிமேல் சந்தேகம் கொள்ளக்கூடாது. பதிலாக முழு நம்பிக்கை ஏற்படுமளவுக்கு பக்.23

## ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும்

### பிரிட்டன் மீண்டும் வலியுறுத்து

ஜெனிவா, ஜுன் 18
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துவது அவசியமானது.
இவ்வாறு வலியுறுத்தினார் ஐ.நாவுக்கான பிரிட்டனின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜுலியன் பிறெத்வெய்ட்.
சிக்கலான அந்தப் பணியை நிறைவேற்ற பிரிட்டன்தனது முழுமையான ஆதரவை வழங்கத் பக்.25

## பிணக்குத் தீர்க்க நடந்த கூட்டத்திலும் குழப்பம்



முல்லைத்தீவு, ஜுன் 18
தென்பகுதி மீனவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் மீனவர்களுக்கும் இடையில்ஏற்பட்ட பிணக்கைச் சுமுகமாகத் தீர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் குழப்பம் ஏற்பட்டது. இதனால் அந்தக் கூட்டம் நேற்று நடைபெறவில்லை.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட தென்பகுதி மீனவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் மீனவர்களுக்கும் இடையில்நேற்றுமுன்தினம்கைகலப்பு ஏற்பட்டது. இதையடுத்து, "இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்காகக் கடற்படையினரின் ஏற்பாட்டில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கூட்டம் இடம்பெறும் என்று தமக்குத் தெரிவிக்கப்பட்டது" என்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். ஊடகவியலாளர்களும் அங்கு கூடியிருந்தனர்.
மீனவர் சங்கங்களின் பிரதிநிதி பக்.23

முச்சந்தி முரளி



தனக்கு தனக்கு எண்டா – சுளகு படக்கு படக்கு எண்டு அடிக்குமாம்...


## அரசியல் தீர்வைக் கண்டால் மிகப் பெரிய நன்மை கிட்டும்

### பிரதமர் ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஜுன் 18
இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலக நாடுகள் எமக்கு ஆதரவு வழங்குகின்றன. புதிய அரசமைப்பைஉருவாக்குவதன் ஊடாக நிரந்தர அரசியல் தீர்வைக் காண்போமாயின் உலக அரங்கில் இலங்கைக்கு மிகப் பெரிய நன்மைகள் கிடைக்கும்.
இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீதான மீன் ஏற்றுமதித் தடையை நேற்றுமுன்தினம் நீக்கியது. இது குறித்து அலரிமாளிகையிலிருந்து நேற்று விடுத்த விசேட அறிவிப்பு ஒன்றை நாட்டு மக்களுக்கு விடுத்தார் ரணில் விக்கிரமசிங்க. அவர் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து நாம் தேசிய அரசை அமைத்தோம். இனப்பிரச்சினை மற்றும் சமயங்களுக்கு இடையிலான பிரச்சினை பக்.24

## துரையப்பா விளையாட்டரங்கு ஜனாதிபதியால் இன்று திறப்பு

### காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக நிகழ்வில் மோடியும் இணைவார்



யாழ்ப்பாணம், ஜுன் 18
இந்திய அரசின் நிதி உதவியில் சீரமைப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர். நிகழ்வில் மைத்திரிபால நேரடியாகப் பங்கேற்க பக்.24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அப்துல் கலாமின் வாழ்க்கை எமக்கு சிறந்த முன்னுதாரணம்

## வடக்கு முதலமைச்சர் மாணவருக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஒவ்வொரு மாணவனும் மாணவியரும் தாம் என்னவாக வர வேண்டும் என்பதை முன்னரே தீர்மானித்துக் கொண்டு அந்த் நிலையை அடையும்வரை ஊண் உறக்கம் மறந்து பாடுபடவேண்டும். அப்போது இலக்கைச் சுலபமாக அடைய முடியும் என்ற அப்துல் கலாமின் கருத்தை அனைவரும் நினைவில் கொள்ள வேண் டும். "உறக்கத்தில் வருவதல்ல கனவு. உன்னை உறங்க விடாமல் செய்வதுதான் கனவு" என்பது அப்துல் கலாமின் கருத்து. அவ ரின் வாழ்க்கை எம் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறந்த முன் உதாரணமாக அமைய வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பொதுநூலக வளாகத்தில் அமைக்கப்பட்ட இந்தியாவின் முன்னைநாள் குடியரசுத் தலைவரும் தலை சிறந்த விஞ்ஞானியுமான கலாநிதி அப்துல் கலாமின் திருவுருவச் சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கலாநிதி அப்துல் கலாம் தமிழ் நாட்டில் இராமேஸ்வரத்தில் பிறந்து வளர்ந்த ஓர் இந்தியராக இருந்தபோதும் அவர் இந்திய மண்ணுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் தமிழை நன்கு பேசக்கூடிய ஒரு தமிழ்ப் பேசும் உலகத் தலைவராகத் திகழ்ந்தார். அந்தவகையில் அவர் எமது வட பகுதி மக்களுக்கும் சொந்தக்காரராக எமது தமிழ் பேசும் மக்களின் தலைசிறந்த தலைவனாக, எம் மாணவர்களின் வழி காட்டியாக எம்முள் என்றும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றார். இவர் மாணவர்களை விளிக்கும் போது "அன்பான மாணவர்களேகனவு காணுங்கள்" என விளித்தே தமது உரையைத் தொடங்குவார்.



அவரின் உரையில் கனவு என்பதற்கு மிகச் சிறப்பானதொரு விளக்கத்தை அளித்திருந்தார். அதாவது ஒவ்வொரு மாணவனும் மாணவியுந் தனது எதிர் காலம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவை அல்லது எதிர்பார்ப்பை முற்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு அதன் அடிப்படையில் செயலாற்ற முற்படல் வேண்டும் என்பதே மாணவருக்கான அன்னாரின் முக்கிய கருத்தாக இருந்தது. அவரின் சிந்தனைகள் எப்போதும் உயர்வானவையாக இருந்தன. நீ, நீயாகவே இருக்கப் பழகிக் கொள் என்றார். நீ, எல்லோருமாக இருக்க எண்ணிவிடாதே. அது உனது வாழ்வின் இலட்சியத்தை மழுங்கடிக்கச் செய்துவிடும் என அவரின் உரையில் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

அவரை ஒருமுறை செவ்வி கண்ட செய்தியாளர்கள் "நீங்கள் ஒரு சிறந்த பௌதிகவியலாளர், அணு ஆராய்ச்சியாளர், விண்வெளி ஆராய்ச்சியாளர் ஆகிய பல தகைமைகளைக் கொண்டுள்ள போதும் ஓர் ஆசிரியராக அல்லது பேராசிரியராகவே இருக்க ஆசைப்படுகின்றீர்கள். அது ஏன்?" என்று வினவியபோது அவர் சிரித்துக் கொண்டே பதிலளித்தார். "ஆசிரியர்கள் சாதிக்கக் கூடியவை பல. சிறந்த ஆசிரியர்கள் சிறந்த சாதனையாளர்களாக மாறுவார்கள். ஓர் ஆசிரியரின் அர்ப்பணிப்புடனான சேவை பல மேதைகளை உருவாக்குவதற்கு வழிசமைக்கின்றது" என்றார். தமது வாழ்வின் அனுபவங்களை அவர் விவரிக்கும் போது 5ம் வகுப்பில் தனக்குக் கற்பித்த கனகசுந்தரனார் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியரைப் பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். இவ் ஆசிரியர் தமக்குக் கணித பாடத்தை மட்டும் அல்ல கணிதத்துடன் சேர்த்து வாழ்க்கைப் பாடத்தையும் கற்றுத் தந்ததாகவும் அவரின் ஆரம்ப வழி காட்டல் பிற்காலத்தில் தனது உயர்ச்சிக்கு வித்திட்டதாகவும் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கின்றார்.

2011ம் ஆண்டில் தேச இளைஞர்களுக்காக இந்தியாவில் ஊழலை ஒழிப்பதை மையக் கருவாகக் கொண்டு "நான் என்ன தரமுடியும்" என்ற இயக்கத்தை ஆரம்பித்தவர் அவர். தமிழர்தம் பண்பாட்டின் எடுத்துக்காட்டாக வாழ்ந்த அவரின் ஞாபகம் என்றென்றும் நிலைக்க அவரின் இந்தச் சிலை உதவி புரியட்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் ஜஸ்வந் சின்ஹா, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர், மாகாண கல்வி அமைச்சர், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, மக் கள் பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (த-4)

## தமிழ் அகதிகளை எச்சரித்த இந்தோனேசிய பொலிஸ்

கொழும்பு, ஜூன் 18

இலங்கை அகதிகள் படகில் இருந்து இந்தோனேசியக் கரையில்குதித்த பெண்களை எச்சரிக்கும் வகையில், இந்தோனேசிய பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் படகு, இந்தோனேசியாவின் ஆச்சே பிராந்திய கடற்கரையில் கடந்த சனிக்கிழமை கரையொதுங்கியது. அகதிகளைத் தரையிறங்கவிடாமல் இந்தோனேசிய அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த நிலையில், படகில் இருந்த சிறுவன் ஒருவனுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தம்மைத் தரையிறங்க அனுமதிக்குமாறும் அகதிகள் கோரியுள்ளனர். ஆனால் அதற்கு அதிகாரிகள் மறுத்து வரும் நிலையில், நேற்று முன்தினம் படகில் இருந்த ஐந்து பெண்கள் கடற்கரையில் குதித்தனர். இதனால் அவர்களுக்குச் சிறியளவில் காயங்கள் ஏற்பட்டன.

இதனைத்தொடர்ந்து, அகதிகள் தரையிறங்குவதைத் தடுக்கும் நோக்கில் வானத்தை நோக்கி இந்தோனேசியப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதையடுத்து, தரையிறங்கிய பெண்கள், மீண்டும் படகில் ஏற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(த-ஜ-5)

# பகிடிவதையுடன் தொடர்புள்ள எவருக்குமே மன்னிப்பு இல்லை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

பகிடிவதையுடன் தொடர்புடைய எவருக்கும் மன்னிப்புக் கிடையாது -இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

மாரவில நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு எவ்வளவு போராட்டங்கள் நடத்தினாலும், பகிடிவதையுடன் தொடர்புடைய எவருக்கும் எவ்வித மன்னிப்பும் அளிக்கப் போவதில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகின்றனர். தங்களது கல்வி உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தப் போராட்டம் நடத்தப்படவில்லை. பகிடிவதை மேற்கொண்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு கோரி இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

சட்டத்தால் தடை செய்யப்பட்ட பகிடிவதையில் ஈடுபட எவரேனும் உதவினால், அவர்களுக்கும் தண்டனை விதிக்க நேரிடும். பேரணிகளை நடத்தி -போராட்டங்களை நடத்திப் பரீட்சையில் சித்தியடைய முடியாது.

மக்களின் வரிப் பணத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவியர் இவ்வாறு பொன்னான நேரத்தை விரயமாக்குவது பெரிய குற்றமாகும்.

மாணவர்கள் என்ன செய்தாலும், எவ்வாறான போராட்டம் நடத்தினாலும் பகிடிவதையுடன் தொடர்புடையவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது- என்றார். (த-ஜ-5)

# பல துன்பங்களைக் கடந்து கல்வியில் உயர்ந்தது வன்னி

## தெரிவித்தார் செல்வம் எம்.பி.

மன்னார், ஜூன் 18

வன்னி மாவட்டம் பல துன்பங்களின் மத்தியில் கல்வியில் வளர்ச்சியடைந்தது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் எமது ஆசிரியர்களே. எல்லாவற்றையும் நாங்கள் இழந்தோம். ஆனால் கல்வி ஒன்றுதான் எங்களுக்குக் கை கொடுக்கும் சொத்தாகவுள்ளது. இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியப் பாடசாலையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்ப ஆய்வு கூடம் நேற்றுக் கல்வி இராஜாங்க அமைச்சர் தலைமையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்தில் கடமையின் நிமிர்த்தம் தமக்குப் பணிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு தமது குடும்பத்தை மறந்து கடமைக்குச் சென்ற எங்களுடைய ஆசிரியர்கள், வல யக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியானர்கள்.

அவர்களுடைய அந்தப் பொது நோக்கு மனப்பான்மை இன்று எமது மாவட்டத்தில் கல்வியை ஓர் அளவுக்கு உயர்த்தியுள்ள நிலை காணப்படுகின்றது.

வெளிமாவட்டத்தில் இருந்து இங்கு வந்து கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு, நாங்கள் என்றைக்கும் தலை வணங்குபவர்களாக இருப்போம். ஏனெனில் இந்த ஆசிரியர்கள் மேற்கொண்ட முயற்சி, கல்விப்பணிமனை மேற்கொண்ட ஆர்வம் மன்னார் மாவட்டத்திலே நல்ல பெறுபேற்றைக் கொடுத்துள்ளது.

எனினும் எமது பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது. குறித்த வளப்பற்றாக் குறை தீர்க்கப்படுமாக இருந்தால், யாழ். மாவட்டத்துக்கு இணையாக வன்னி மாவட்டமும் திகழும்.

எனவே கல்வி இராஜாங்க அமைச்சரின் காலத்திலே அவரை நாம் பயன்படுத்தி எங்களுடைய பாடசாலைகளின் வளங்களைப் பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவேண்டும் - என்றார். (த-ஜ-4-56)

**தேசிய போசணை மாதம் ஜூன் - 2016**

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
அதி உப்புச் சேர் பிண்டம் நோய்ப் படுக்கையிலே"

ஒரு நாளுக்கு ஒருவருக்கு ஒரு தேக்கரண்டி உப்பே தேவை. சில உணவுகளில் தயாரிப்பின்போதே உப்பு சேர்க்கப்பட்டிருப்பதை [illegible]
(உ+ம் = கருவாடு, அச்சாறு, ஊறுகாய், மிக்சர், [illegible] பட்டர், சோசேச்சர்ஸ், Meat ball, சூப்கட்டிகள் என்பன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸ்கமவின் பொருளாதாரத்தை மீளமைக்க திட்டமிடுகின்றது அரசு

## அதிகாரிகளிடம் அறிக்கை கோருகிறார் ரணில்

கொழும்பு, ஜூன் 18
கொஸ்கம- சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பின் பின்னர், அந்தப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை மீளமைக்கும் விதம் சம்பந்தமாக அறிக்கை ஒன்றை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சலாவ முகாமை அடிப்படையாகக் கொண்டே, அந்தப் பிரதேசத்தின் சிறிய மற்றும் மத்திய தர வர்த்தகங்கள் அனைத்தும் நடைபெற்றுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இராணுவம் முகாம் அங்கு இல்லாத நிலைமையில், தொடர்ந்தும் அந்தப் பிரதேசத்தில் எவ்வாறு சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை நடத்திச் செல்வது என்பதற்கான தீர்வை அதிகாரிகள், பிரதருமருக்கு வழங்கும் தமது அறிக்கையில் உள்ளடக்கவேண்டும்.

கொஸ்கம- சலாவ பிரதேசத்தில் இயங்கிய ஊதுவர்த்தி தொழிற்சாலை முற்றாக அழிந்துள்ளதும், 20 அறைகளை கொண்ட ஹொட்டலுக்கு சேதம் ஏற்பட்டதும் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறும் அறிக்கை தயாரிக்கும் அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

இராணுவ முகாம் இல்லாத நிலமையில், வர்த்தக நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து பரிந்துரைகளை வழங்குமாறும் பிரதமர் உத்தரவிட்டார். (த-ஐ-5)

## உதய கம்மன்பிலவின் மனு விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 18
பொலிஸ்விசேடவிசாரணைப் பிரிவினர் கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவிடக் கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பது என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவை நேற்று ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழு மேற்படி தீர்மானத்தை அறிவித்தது.

ஆஸ்திரேலியப் பிரசை ஒருவர் செய்துள்ள முறைப் பாடு ஒன்றுக்குஅமையப்பொலிஸ் விசேட விசார ணைப் பிரிவு எனக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. விசாரணைகளுடன் சம்பந்தப்பட்ட எந்த நியாயமான காரணங்களும் இன்றி என்னைக் கைது செய்ய தயாராகி வருகின்றனர். இதன் காரணமாக என்னைக் கைதுசெய்ய தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கம்மன்பில தனது மனுவில் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

## வன்புணர்வுக் குற்றச்சாட்டில் கிளிநொச்சி இளைஞன் கைது

15 வயதுச் சிறுமியை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இளைஞனை எதிர்வரும் 29ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமியிடம் மாற்றங்களை அவதானித்த உறவினர், அவரிடம் விசாரித்துப் பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். சிறுமியை விசாரித்த பொலிஸார் அவருடன் பாலியல் உறவு கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞனைக் கைது செய்துள்ளனர். பல மாதங்களுக்கு முன்னர் சம்பவம் இடம்பெற்றுள்ளபோதும் தற்போதே அது வெளியே தெரியவந்துள்ளது. சிறுமியின் உறவினரால் கண்டுபிடிக்கப்படும் வரையில் சிறுமி அது பற்றிவெளிடும்முறையிடவில்லை.

16 வயதுக்குக் குறைந்த சிறுமியுடன் அவரது விருப்பத்தின் அடிப்படையில் பாலியல் உறவு கொண்டாலும் அது வன்புணர்வு என்றே சட்டம் வரையறுக்கின்றது. கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (உ)

## தபால் ஊழியர் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 18
தபால் ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த வேலைநிறுத்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பிரதமர் அலுவலகத்தில் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் ஊழியர்கள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

மேலதிக நேரக் கொடுப்பனவு உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், தமது கோரிக்கைகளுக்கு எதிர்வரும் இரு மாதங்களில் தீர்வுகள் வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தாக ஒன்றிணைந்த தபால் ஊழியர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில், மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (த-ஐ-5)

## பாதிப்புக்களை மதிப்பிடும் வரை முற்கொடுப்பனவு வழங்கத் திட்டம்

கொழும்பு, ஜூன் 18
கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ, கடுவெல, ஹங்வெல்ல ஆகிய பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மதிப்பிடும் வரை, அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் முற்கொடுப்பனவாக வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்தத் தகவலை கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் வெள்ளத்தால் வீடு முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட 40 ஆயிரம் குடியிருப்பாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் வீடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குதல், மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பிறகு முன்னெடுக்கப்படும். இந்த 10 ஆயிரம் ரூபா முற்கொடுப்பனவாகவே வழங்கப்படுகின்றது.

இதற்கிடையில் சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பால் பாதிப்புக்குள்ளான வீடுகளில் வசித்து வந்த நபர்களுக்கு, வேறு வீடுகளைத் தேடிக் கொள்வதற்கு 3 மாதங்களுக்கு வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை 150 க்கும் அதிகமான நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சலாவ இராணுவ ம்காமில் ஏற்பட்ட வெடிப்பால் சேதமடைந்த வீடு, கட்டடங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் தொடர்பாக, அரச மதிப்பீட்டு அதிகாரிகள் கடந்த தினங்களில் மேற்கொண்ட மதிப்பீடு தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன், அவற்றுக்குக் கொடுப்பனவுகள் வழங்கும் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பால் பாதிப்புக்கு உள்ளான சலாவ மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் காணப்படும் வீடுகளைப் புனர்நிர்மாணிக்கும் பணிகள் இராணுவத்தினரால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 2626944

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.84,317,160/-
020
2016-06-17
கோடிபதி
X 52 54 70 75
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 17.06.2016 | வெற்றி வாரம் 1992 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
10 42 46 47
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,731,200 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு: 1919

நியத்த ஜய
வெற்றி வாரம் 471
திகதி 17-06-2016
வர்ணம் நீலம்
05 22 48 54 C
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ.10,210,380/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு: 1919

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஒளிஅரசி சஞ்சிகை ஏப்ரல் மாதம் நடத்திய திருத்தற் சேவையைக் கொண்ட தேசியரீதியிலான தரம்5 பயிற்சிப் பரீட்சையில் உயர் பெறுபேற்றைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மே மாத வினாத்தாள் - II இல் பாராட்டுப்பெறும் தரம்-5 மாணவர்கள்

தபால் மூலம் கிடைக்கப்பெற்ற 2000 வினாத்தாள்களில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற கீழ்வரும் மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. தி. ஷர்மிகா | வவுனியா | 70 | 31. யோ. சிவகாமி | யாழ். அச்செழு | 76 |
| 2. ம.தனுஷ் | பம்பலப்பிட்டி | 70 | 32. அ. அனுகருதி | வவுனியா | 76 |
| 3. கு. பிறேமன் | யாழ். சாவகச்சேரி | 70 | 33. ம. பபுஷன் | வவுனியா | 77 |
| 4. யோ.ஷெஸ்வித் | பம்பலப்பிட்டி | 70 | 34. சி.ஹெரீன் | வவுனியா | 77 |
| 5. பா. கவிஷ்கர்தேவா | பம்பலப்பிட்டி | 70 | 35. சி. ருக்சிஜா | வவுனியா | 77 |
| 6. க. டினோஜன் | யாழ். கொக்குவில் | 71 | 36. இ. யதுர்ஷன் | பம்பலப்பிட்டி | 77 |
| 7. ஜெ.டிதுசிகா | வவுனியா | 71 | 37. கு. அச்சுதன் | பம்பலப்பிட்டி | 77 |
| 8. மெ.டிசான் | வவுனியா | 71 | 38. சி. ரஜீவன் | பம்பலப்பிட்டி | 77 |
| 9. அ.ஷோபிதன் | பம்பலப்பிட்டி | 71 | 39. க. கிருத்திகன் | யாழ்ப்பாணம் | 78 |
| 10. த. எஸ்மிதன் | பம்பலப்பிட்டி | 71 | 40. சி. பியஷாந் | மட்டு. பட்டிருப்பு | 78 |
| 11. த. சபரீஷன் | பம்பலப்பிட்டி | 71 | 41. க. கிருஷாந்தன் | பம்பலப்பிட்டி | 79 |
| 12. பி.கவிமதுரன் | பம்பலப்பிட்டி | 71 | 42. வி. லிஷானி | வவுனியா | 79 |
| 13. ந. திஷேவிதா | கொழும்பு - 13 | 71 | 43. மது மித்ரன் | பம்பலப்பிட்டி | 80 |
| 14. ம.ஹிரேன் | பம்பலப்பிட்டி | 72 | 44. இ. இராஜஷியான் | பம்பலப்பிட்டி | 80 |
| 15. எம். நதா | புத்தளம் | 72 | 45. ம. சஞ்சய் மணிகரன் | பம்பலப்பிட்டி | 80 |
| 16. எல்.ஆர்.எ. இமல்டா | வவுனியா | 72 | 46. ப. கிஷோரிகா | வவுனியா | 81 |
| 17. ச.பிரணவன் | வவுனியா | 72 | 47. கோ. அபிசிகன் | வவுனியா | 81 |
| 18. வி. அட்சயன் | வவுனியா | 72 | 48. ச. ஹக்சித் | பம்பலப்பிட்டி | 82 |
| 19. ஆ. யஸ்வினி | வவுனியா | 73 | 49. ம. வத்ஸாங்கன் | யாழ்ப்பாணம் | 83 |
| 20. த. திஷேஷ் | பம்பலப்பிட்டி | 73 | 50. சி. தனுஸ்கர் | பம்பலப்பிட்டி | 84 |
| 21. தே. டில்ஷான் | பம்பலப்பிட்டி | 73 | 51. த. தனுஷ் | பம்பலப்பிட்டி | 84 |
| 22. ர. தனுஷன் | பம்பலப்பிட்டி | 73 | 52. பி. அபிநாத் | வவுனியா | 84 |
| 23. பு. பவித்திரன் | பம்பலப்பிட்டி | 73 | 53. ந. கோபிசயன் | வவுனியா | 84 |
| 24. பா. ஹிருக்ஸன் | பம்பலப்பிட்டி | 73 | 54. ஜெ. ராஜ்கீதன் | வவுனியா | 81 |
| 25. வி. இரேஷன் | பம்பலப்பிட்டி | 74 | 55. எம்.வத்சாங்கன் | யாழ்ப்பாணம் | 83 |
| 26. கி. மிருஜனா | வவுனியா | 74 | 56. ஏ.ஐ.அஹமட் நஜல் | பேருவளை | 88 |
| 27. பி. கயானா | வவுனியா | 74 | 57. ஆர்.ஆருரி | கொழும்பு | 76 |
| 28. அ. ஸ்ரெவோன் | வவுனியா | 74 | 58. பி.தக்சிகா | யாழ்ப்பாணம் | 70 |
| 29. வி. ஸஹக்சிகா | வவுனியா | 75 | 59. ஆர். அபிநயா | யாழ்பாணம் | 70 |
| 30. ரு. ஆராதனா | வவுனியா | 75 | 60. கே. கிருத்திகன் | யாழ்ப்பாணம் | 78 |

0766973719

(இவர்களை விட 300 மாணவர்கள் 65 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களுக்கும் ஒளிஅரசியின் வாழ்த்துக்கள்)

வாழ்த்துவோர்
சுடர்ஒளி, உதயன், ஒளிஅரசி கல்விக்குழு

குறிப்பு :- இப் பரீட்சைத் தொடரில் இணைய விரும்புவோர் கீழ்வரும் இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

வடக்கு: 077 6569617 / 071 8628369,
கிழக்கு: 071 8724037, வவுனியா: 077 2772726,
மலையகம்: 071 8724036, ஏனைய மாவட்டங்கள்: 071 1141990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## பதவி வெற்றிடம் - நிரந்தரம்

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தரப்பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினை 10.00 ரூபா செலுத்தி கடமை நேரத்தில் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தினை தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியினை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 01.07.2016 நண்பகல் 12.00மணி**

### வயது எல்லை

- சங்கப் பணியாளர்களாயின் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
- தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18 - 45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**உட்துறைக்கணக்காய்வாளர் - 105/11**

66/2006 சு.நி.படி 14945 – 17955 / 145x10 – 160x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் /கணக்கு **அல்லது** எண்பார்வை லிகிதர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் **அல்லது** கூட்டுறவுப் பணியாளர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்கு அல்லது எண்பார்வை லிகிதர் பதவியில் நான்கு வருடத் திற்குக் குறையாத அனுபவமும்

**அல்லது**

ஆ. ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவன மொன்றில் கணக்கியல்/எண்பார்வைத் துறையில் நான்கு வருடத்திற்குக் குறை யாத அனுபவம்

**அல்லது**

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரம் / க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனமொன்றில் அல்லது கைத்தொழில் ஸ்தாபனத்தில் கணக்கியல் / எண்பார்வைத்துறையில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்

**களஞ்சியப் பொறுப்பாளர் 202/11**

66/2006 சு.நி.படி 14945 - 17955 / 145x10 - 160x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ.கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்ட களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறை களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத்திட்டம். அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ.அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனமொன்றின் வழங்கல்கள் அல்லது களஞ்சிய முகாமை அல்லது சந்தைப்படுத்தல் பற்றிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ.கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.(உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**கணக்காளர் 104/09**

66/2006 சு.நி.படி 15660 - 19560 / 190 x 10 - 200 x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ.கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உட்துறைக்கணக்காளர் பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும் **அல்லது** கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் உட்துறைக் கணக்காய்வாளர்/கணக்குப்பதிவாளர்/கணக்கியல் **அல்லது** கணக்காய்வுத்துறை எழுதுனர் பதவியில் ஆறுவருடத்திற்குக் குறையாத அனுபவமும்

**அல்லது**

ஆ.ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபன மொன்றில் கணக்கியல் / எண்பார்வைத்துறையில் மேற்பார்வைப் பதவியில் நான்கு வருடத்துக்குக் குறையாத அனுபவமும்

**அல்லது**

இ.கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/கூட்டுறவுத் திணைக்களத் தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம் **அல்லது** க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

முக்கிய குறிப்பு :- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சங்கப் பணியாளர்களாயின் கடமையாற்றும் சங்கத்திற்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

தலைவர்
சங்கானை .ப.நோ.கூ.சங்கம்

# வவுனியாவில் 5,000 குடும்பங்களுக்கு காணி அனுமதி வழங்கலில் தாமதம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

வவுனியா, ஜூன் 18

வவுனியா மாவட்டத்தில் வீடுகள் அமைத்து கடந்த 35 ஆண்டுகளாக வாழும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதில், வன இலாகாவினரின் நடவடிக்கைகள் காலதாமதமாக உள்ளன என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வசிக்கும், மக்களின் காணிகளுக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் தனியாருக்குச் சொந்தமான காணிகளின் ஊடாக வனவளத்துறையினர் எல்லைக் கற்களை நடுவதால் எழும் பிரச்சினைகள் தொடர்பில் இதில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் வீடுகள் அமைத்து கடந்த 35 ஆண்டுகளாக வாழும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் வன இலாகாவினரின் நடவடிக்கைகள் தாமதமாக உள்ளன.

இதனால் பிரதேச செயலகங்கள் காணிக் கச்சேரிகளை நடத்தி அந்தக் காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரங்களை வழங்க முடியவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டதோடு, தனியார் குடியிருக்கும் காணிகளின் ஊடாக வன இலாகாவினர் தமது எல்லைக் கற்களை நடுவதாகவும் கூறப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த ஒருங்கிணைப்புக் குழுவினர், இனிவரும் காலங்களில் வன இலாகாவினர் எல்லைக் கற்களை நடச் செல்லும்போது, குறித்த பகுதி பிரதேச செயலாளருக்கு முன் கூட்டியே தெரியப்படுத்திச் செல்லவேண்டும் எனத் தீர்மானித்தனர்.

அத்துடன் கரணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய விடுவிப்பு பத்திரத்தை வன இலாகாவால்விரைவில்பெற்றுவழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(த-ஐ-101)

# சமுர்த்தி அலுவலர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

வவுனியாவில் சமுர்த்தி அலுவலர் மீது, இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த அவர் சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பொகஸ்வெல பகுதியிலுள்ள சமுர்த்தி வங்கியில் இவர் அலுவலராகக் கடமையாற்றுகிறார். கடந்த வாரம் சமுர்த்திக் கொடுப்பனவுகள், வாழ்வாதார உதவிகள் என்பன தமக்கு வழங்கப்படவில்லை என்று சிலர் தன்னுடன் முரண்பட்டிருந்தனர் என்று அந்த அலுவலர் தெரிவித்தார். இந்த நிலையில் பணியை நிறைவு செய்து, வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பொகஸ்வெல – பேகரதன்ன பகுதியில் ஆறு பேர் கொண்ட குழுவினர் தன்னைத் தாக்கியதாகக் காயமடைந்தவர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் கடந்த சில நாள்களாக கொழும்பில் கூட்டத் தொடர் ஒன்றில் கலந்து கொண்டிருப்பதால், எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா வந்து அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வார் என்று பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4)

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாண நகரில், டேவிட் வீதியில் 3 பரப்புக்காணி முழுமையாகவும் அல்லது பாதியாகவும் கொடுக்கப்படும். A-9 வீதியில் இருந்து 100M உள்ளுக்குள் உள்ளது.
077 593 7772

**விற்பனைக்கு**
Masta Vanat JR xxxx இலக்கமுடைய Petrol Convert நிறம் Silver விற்பனைக்குண்டு.
076 846 7119

**உடன் தேவை**
அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரிகின்ற 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் உடனடியாகத் தேவை. எதிர்பார்க்கும் இடங்கள் கச்சேரி சார்ந்த இடம் சுண்டுக்குளி, நல்லூர்.
தொடர்பு : 077 112 2055

**காணி விற்பனைக்கு**
நாவற்குழியில் 0.0343 ஹெக்டெயர் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 589 8817

**வீடு வாடகைக்குண்டு**
K.K.S. றோட் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் சகல நவீன வசதிகள் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 979 8181

**கடை வாடகைக்கு உண்டு**
இல.56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் கடையும், வீடும் வாடகைக்கு உண்டு.
கடையின் அளவு 20 x 12 சதுரஅடி
076 998 6037 / 077 172 3842

**வேலையாள் தேவை**
அழகுக் கலையகம் ஒன்றிற்கு மேக்கப், கேக்ஐசிங் நன்கு தெரிந்த வேலையாள் தேவை. பெண்கள் மட்டும்.
தொடர்பு : 077 927 6036
077 360 4469/ 021 221 2414

**தேவை**
- களஞ்சியக் காப்பாளர்
- சாரதி

தகைமை:- முன்அனுபவம்
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55, 57, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்குத் தேவை**
நன்றாக அமைக்கப்பட்ட 05 அறைகளும் அத்துடன் வாகனங்கள் தரிப்பிடத்துடன் கூடியதுமான வீடு ஒன்று நல்லூர் கோயிலுக்கு அருகில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். (J 2203)(12.18)
077 251 4985

**காணி விற்பனைக்கு உண்டு**
பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**மணமக்கள் உள்ளனர்**
சகல கிறிஸ்தவர்களுக்கும் மணமகன், மணமகள் உள்ளனர். முதல் முறையாக தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். (J 2203)(12.18)
விளம்பர இலக்கம் 5106
C/O- உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**வேலை வாய்ப்பு**
இயந்திரம் மூலம் கொங்கிறீட் கல் அரியும் வேலை மேற்கொள்ள ஆள்கள் தேவை.
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
ரெடி பில்ட் லங்கா பிறைவேட் லிமிட்டட்
கரந்தன் வீதி, ஊரெழு. (J 2203)(12.18)
021 742 9695, 077 220 9558 , 077 6508376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை வயதில் தன்னைக் கைவிட்ட பெற்றோரிடம் தாபரிப்பு கோரும் மகள்

சாவகச்சேரி ஜூன் 18
தன்னைப்பெற்று ஒன்றரை வயதில் கைவிட்டுச் சென்ற பெற்றோரிடம், தாபரிப்புப் பணம் கேட்டு மகளினால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

தற்போது இல்லம் ஒன்றில் தங்கியுள்ள 19 வயதான பெண் ஒரு வரே இவ்வாறு வழக்குத் தொடர்ந்துள்ளார். இதனையடுத்துத் தாபரிப்புப் பணம் செலுத்துமாறு பெற்றோருக்கு நீதி மன்றுஉத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தற்போது கைதடி இரட்சணிய சேனை என்னும் இல்லத்தி குறித்த பெண் தங்கியுள்ளார். அவருக்கு ஒன்றரை வயதாக இருந்தவேளை, தாயும் தந்தையும் வெவ்வேறு திருமணம் செய்து, இப்போது வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர் 17 வயது வரை பாட்டியுடன் வசித்து வந்ததால், அவரது தேவைகளைப் பாட்டி பொறுப்பேற்றிருந்தார். தற்போது அவர் கைதடியிலுள்ள இரட்சணிய சேனையில் தங்கியுள்ளார். தனது தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்காலத் தேவைகள் கருதி தந்தையிடம் ரூபா 10 ஆயிரமும், தாயாரிடம் ரூபா 10 ஆயிரமும் தாபரிப்புப் பணம் பெற்றுத் தருமாறு பெற்றோருக்கு எதிராக அவர் சாவகச்சேரி நீதிமன் றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, தந்தையை மாதாந்தம் தாபரிப்புச் செலவாக 7 ஆயிரம் ரூபா வீதம் வழங்குமாறு உத்தர விட்டார் நீதிவான். தாய் தந்தை இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-ஐ-4-9)

# பரமேஸ்வரன் ஆலய சீரமைப்பு விரைவில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளும், மகா கும்பாபிசேகமும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

அதற்காகச் சுமார் ஒன்றரைக் கோடிக்கும் மேற்பட்ட பணம் செலவிடப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

புனரமைப்பு நடவடிக்கையில் இராஜகோபுரப் புனரமைப்பு, நடராஜப் பெருமானுக்குத் தனியான சபா மண்டபம், பரிவார ஆலயங்கள் புனரமைப்பு, ஆலயக் கூரை வேலைகள், வசந்த மண்டபப் புனரமைப்பு, கருவறை விமானப் புனரமைப்பு, சந்திரசேகர மூர்த்தி, நந்தவனத்தைப் புதுப்பித்தல், ஆலய முன்றிலில் மகர தோரண அலங்காரம், யாக சாலை புனரமைப்பு, குருக்களுக்கு வாசஸ்தலம் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (த-ஐ-4)

# அரியாலையில் உள் வீதிகள் விரைவில் சீரமைக்கப்படும்

கொழும்புத்துறை, ஜூன் 18
அரியாலைப் பகுதியில் மீளக் குடியமர்ந்த இடங்களில் உள்ள உள் வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் சீரமைப்புச் செய்யப் பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அனைத்து வீதிகளும் புனரமைப்புச் செய்யப் படும் என்று நல்லூர் பிரதேச சபைச் செயலர் தியாகேஸ்வரி தெரிவித்தார்.

அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் நீண்ட காலமாக இராணுவ முகமாகப் பயன்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதியின் உள்ளக வீதிகள் சீரமைப் பின்றிக் காணப்படுவதாகப் பொதுமக்களால் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

அரியாலை ஆனந்தன் வடலி வீதியிலிருந்தும் ஏ-9 வீதியிலிருந்தும் செல்லும் உள்ளக வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாத நிலையில், குண்டும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளில் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதால், மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர்ந்த பகுதிக்குள் உள்ள வீதிகள் ஒவ்வொன்றாக பார்வையிடப்பட்டு வருகின்றன. அதில் முன்னுரிமை அடிப்படையில் அந்த வீதிகள் திருத்தப் படுகின்றன. விரைவில் சகல உள் வீதிகளும் திருத்தப்படும் என்று நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி-135)

## விளையாட்டு விழா

காரைநகர், ஜூன் 18
காரைநகர் மழலைகள் பூங்கா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மழலைகள் பூங்கா பாலர் பாடசாலையின் தலைவரும், காரைநகர் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் பி.செல்வக்குமார் கலந்துகொள்வர். (த-ஐ-250)

# பதின்மவயதுச் சிறுமியை கர்ப்பமாக்கிய இளைஞன்

## கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியைக் காதலித்துக் கர்ப்பமாக்கினார் என்று இளைஞன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனைக் கைது செய்துள்ளதாகவும், அவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் உறவுக்காரர்கள் என்றும், குறித்த சிறுமி கர்ப்பமடைந்தமை 4 மாதங்களுக்குப் பின்னரே தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-ஐ-4)

# மாட்டு வண்டிச்சவாரி

யாழ்ப்பாணம், ஜூன் 18
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டிச்சவாரி நாளை ஞாயிற்றுக்கிழமை பொன்னாலை 'மான்பாஞ்சான்' சவாரித்திடலில் இடம்பெறவுள்ளது. (த-ஐ)

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 18
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன், குழாய் பொருத்துநர் தொழிற்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, இவற்றுக்கான பதிவுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கற்க விரும்பும் மாணவர்கள் வீரசிங்கம் மண்டபம், முதலாம் மாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(த-ஐ-ரி)

## வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 11 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (த-ஐ-ரி)

# 94ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தைத் கொண்டாட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 18
பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 94 ஆவது சர்வதேசக்கூட்டுறவாளர்தினத்தை வெகுசிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருப்பதாக சமாசத்தின் தலைவர் எஸ்.கணேசன் தெரி வித்தார்.

கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படும்.

அதனைவிட பாடசாலை மாணவர்கள் இடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் நடத்தப்படும் கயிறு இழுத்தல், வேகநடை, தலையணைச் சண்டை, வழுக்கு மரம் ஏறுதல், சங்கீதக் கதிரை, அஞ்சல் ஓட்டம் போன்ற போட்டிகளும் நடத்தப்படும்.

வருடா வருடம் நடைபெற்று வரும் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் பல்வேறுபோட்டிகள் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு இடையே நடத்தப் பட்டுப் பரிசில்கள் வழங்கப் பட்டு வருகின்றன.(த-ஐ-17)


# UNIVERSITY OF JAFFNA - INVITATION FOR BIDS

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following work.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period (Number of Calendar Days | Minimum Required ICTAD Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/ RE/ 2015-25 | Design and Construction of Sewerage Treatment Plants for Hostels in Jaffna & Kilinochchi of the University of Jaffna | 70.0 | 120 | C4 or above (Water Supply and Sewerage) | Rs. 600,000 | 26th November 2016 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** up to **14th July, 2016** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees two thousand (Rs.2,000/-) for bid.**
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the 29th July 2016.** Bids will be opened immediately thereafter on **29th July 2016** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 05 in the Bidding document.
   - For the amount as indicated in the above table.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna"
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **18th July, 2016** for the above work.

**Chairperson, Procurement Committee, University of Jaffna.,**
**Thirunelvely, Jaffna,**
**16.06.2016**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அதிகாரிகளின் சேவை நீக்கத்துக்கு எதிர்ப்பு

## துறைமுக வளாகத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 18

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கொம்பனி வீதியில் அமைந்துள்ள தளபாட உற்பத்தி நிலையத்தில் சேவை புரிந்து வந்த, பாதுகாப்பு பிரிவின் இரண்டு அதிகாரிகள் சேவையில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுகப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் துறைமுக வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் ஒருவருக்குத் தளபாடங்கள் உற்பத்தி செய்யப்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, கடந்த செவ்வாய்க்கிழமை துறைமுக ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு குறித்த தளபாட உற்பத்தி நிலையத்துக்குச் சென்றது.

இதன்போது அவர்களுக்கும், ஊடகங்களுக்கும் அந்த இடத்துக்குள் செல்ல, அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் இரண்டு பேர் இடமளிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் சேவையில் இருந்து விலக்கப்பட்டனர்.

இதேவேளை, தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பணி நீக்கப்பட்ட இரண்டு பேரும், மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அதிகாரிகள் வாக்குறுதியளித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(த-ஐ-5)

# சிறந்த வியாபாரத்திட்டங்களுக்கு உதவிகள் வழங்குவதற்குத் தயார்

## சிவன் அறக்கட்டளை நிறுவனம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

நல்லதோர் வியாபாரத்திட்டம் உள்ளவர்கள் மற்றும் புதுவிதமான சிந்தனை உள்ளவர்கள் தொடர்பு கொண்டால், குறைந்த வட்டியுடன் கடனைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது உங்களின் உழைப்பாலும், என்னுடைய முதலீட்டாலும் இணைந்து பங்காளிகளாகவும் வியாபாரம் செய்யலாம் என்று சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் அழைப்பு விடுத்துள்ளார்.

நிஸ்கோ தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி வேலைத்திட்டத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, கட்டைவேலி கரவெட்டி தேவாலயத்தில், மருதங்கேணி இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர் மனோராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறு கைத்தொழிலுக்கும், எனக்கும் அதிகம் தொடர்பு உண்டு. நாங்கள் சிறு கைத்தொழில் செய்து தான் கல்வி கற்றோம். அதனால் இவ்வாறான செயற்பாட்டை ஊக்குவிக்க அதிக ஆர்வம் எனக்கு இருக்கிறது. அது மாத்திரம் அன்றி பிரிட்டனில் நான் சுய தொழில் ஆரம்பிப்பதற்கு பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் இளைஞர் நிதியமே உதவியது. திறமையான வியாபாரத் திட்டத்தை உடைய நபர்களுக்கு, அவர்கள் மிகவும் குறைந்த வட்டியுடன் கொடுத்த பணத்தின் மூலம் எனது வியாபாரத்தை ஆரம்பித்தேன். அவர் அன்று எனக்குச் செய்த உதவி தான் நான் இன்று வியாபாரத்தில் வெற்றிபெற்ற மனிதனாக விளங்குவதற்குக் காரணம். இதன் காரணத்தால் தான் நான் உங்களுக்கு உதவி செய்ய முன் வந்துள்ளேன்-என்றார்.

இந்தப் பயிற்சி வேலைத்திட்டம் மூலம் மூன்று நாள் சிறு கைத்தொழில் பயிற்சிகள் பெற்ற, யாழ். மாவட்டத்திலுள்ள 15 இளைஞர் சம்மேளனத்தைச் சேர்ந்த 30 இளைஞர் யுவதிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(த-ஐ-ரி)

# உரியதை மட்டுமே அரசு தமிழருக்குக் கொடுக்கும்

## பிரதியமைச்சர் அஜித் பெரேரா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிந்தளவு கோரிக்கைகளை முன்வைத்தாலும், அரசு உரியதை மட்டுமே அவர்களுக்கு கொடுக்கும். இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையிலான புதிய சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்தக் கடந்த தேர்தல் காலங்களில் இருந்து அரசு செயற்பட்டு வந்தது.

தேர்தலில் வெற்றியாகப் பெற்றுக் கொண்ட அரசியல், ஜனநாயகம் மற்றும் மக்கள் தனித்துவம் போன்ற உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புதிய அரச மைப்பு உருவாக்கப்படும்.

அதேபோல் மக்களின் யோசனைகள் உள்வாங்கப்பட்டு அரசு உறுதியளித்த விதத்திலேயே நாட்டுக்குப் பொருத்தமான புதிய தீர்வுத் திட்டம் இந்த ஆண்டுக்குள் உருவாக்கப்படும் -என்றார். (த-ஐ-5)

# மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற் பயிற்சி விரைவில்

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள், நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்கள், பெண்கள் ஆகியோருக்கான பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினரின் அனுசரணையுடன், கிளிநொச்சி தொழிற் பயிற்சி அதிகார சபையினரால் எதிர்வரும் 20 மற்றும் 22 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிகளை கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

வீட்டு மின் உபயோகப் பொருள்கள் திருத்துதல், தையல், மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி 155 ஆம் கட்டையடியில் உள்ள தொழிற்பயிற்சி அதிகார சபைக் கட்டடத்தில், எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு வீட்டு மின் உபயோகப் பொருள்கள் திருத்துதல், தையல் ஆகிய பயிற்சி நெறிகளும், எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ திருத்துதல் பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிகளைப் பெற விரும்புவோர் பயிற்சிகள் ஆரம்ப தினத்தில் பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்து விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்து, பயிற்சி பெறலாமெனவும், பிரதி திங்கள் தொடக்கம் வெள்ளி வரையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு 125 மணித்தியாலங்கள் பயிற்சிகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-ஐ-9)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

திருமதி
கணேஸ்வரி
(தேவி)
நாகரத்தினம்

அன்னை மடியில்
20.10.1950



ஆண்டவன் அடியில்
19.05.2016

கடந்த 19.05.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி கணேஸ்வரி (தேவி) நாகரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.06.2016) சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்று பகல் அவரின் இல்லத்திலும் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சுன்னாகம் சிவன் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவியின் இறப்புச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகளை நல்கியோருக்கும் இன்றுவரை உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

வீதி, உடுவில். 021 224 0560 குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வராசா
கோணேஸ்
(கிளி/செந்தாமரை உணவக உரிமையாளர்)

அன்னை மடியில்
13.03.1980

ஆண்டவன் அடியில்
30.06.2015

திதி: 19.06.2016

எங்கள் ஆருயிர் செல்வமே ! உன் முகம் காணாது தவிக்கின்றோம் ! நாம்
நீ வரும் வேளை காத்திருக்கும் நாம்
இன்று கண்ணீர் மல்க கலங்குகின்றோம் !
செல்லமே ! உன்குரல் கேட்டு ஓராண்டு ஆனதையா !
உன்முகம் காண இன்னொரு பிறப்பு எடுத்து வருவாய் எம் செல்வமே !
உன் ஆத்மா சாந்திபெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

30/1, முத்துமாரி அம்மன் வீதி,
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. (K 79) (14,17,18)

செல்வராசா
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 18

தேசிய இலக்கியப் பேரவையின் உரையாடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு 121, ஹம்டன் லேன் வெள்ளவத்தையில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உரையாடல் நிகழ்வானது 'அரசியல் யாப்புத் திருத்த முனைப்புக்களும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. இதில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற உப அதிபர் த.இராஜரட்ணமும், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திராவும் பங்குபற்றுவர். (த-ஐ-ரி)

# மக்களைக் கவரும் வகையில் 5 குளங்கள் சீரமைக்கப்படும்

## யாழ். மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் உள்ள ஐந்து குளங்கள், மக்களைக் கவரும் வகையில் சீரமைக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் குளங்கள் சீரமைக்கப்படவுள்ளன.

நரிக்குண்டுக் குளம், பிராமணக் கட்டுக் குளம், தேவரிக் குளம், ஆரிய குளம், ஈச்சமோட்டை மறவன் குளம் ஆகிய ஐந்து குளங்களும் மக்களைக் கவரும் வகையில் சீரமைக்கப்படும்.

> பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மாநகரப் பகுதியில் உள்ள ஐந்து குளங்களும் அழகு படுத்தி சீரமைக்கப்பட்டு இருக்கை வசதிகள் மற்றும் நிழற் குடைகள் என்பனவும் ஏற்படுத்தப்படும்.

இந்தக் குளங்களைச் சுற்றி அணைக்கட்டுகள் புதிதாகக் கட்டப்பட்டு நடை பாதைகள் அமைக்கப்படும்.

பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மாநகரப் பகுதியில் உள்ள இந்த ஐந்து குளங்களும் அழகு படுத்தி சீரமைக்கப்பட்டு இருக்கை வசதிகள் மற்றும் நிழற் குடைகள் என்பனவும் ஏற்படுத்தப்படும்.

மாநகரப் பகுதியில் உள்ள ஏனைய 33 குளங்களும், இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படும்.

இந்தக் குளங்களில் உள்ள கழிவுகள் மற்றும் அடைவுகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்படும். மாரி காலங்களில் போதியளவு மழை நீரைச் சேமிக்கும் வகையில் குளங்கள் சீரமைக்கப்படும். அதனைவிட தூர்ந்து போன குளங்களின் அணைக் கட்டுக்களும் மீளவும் சீரமைக்கப்படும் - என்றார்.. (த-ஐ-17)

# இரவில் ஆயுதங்களுடன் நடமாடும் திருடர் குழு

## அச்சத்தில் மானிப்பாய் மக்கள்

மானிப்பாய் வடக்கு, மெமோறியல் வீதி, சங்குவேலி தெற்கு கொலன்காமம் பகுதிகளில் இரவில் ஆயுதங்களுடன் ஒரு குழு நடமாடித் திரிவதாகவும், அந்தக் குழு திருடர்களாக இருக்கலாம் என்றும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

நாய்கள் குரைப்பதைக் கேட்டு வீதிகளை அவதானிக்கும்போது, நான்கு, ஐந்து பேர் கைகளில் ஆயுதங்களுடன் நடமாடுவதை அவதானித்துள்ளோம். அதனையடுத்து இரவு நேரங்களில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டால் நித்திரை வி ழித்து அச்சத்துடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் கூறினர்.

சில தினங்களுக்கு முன்பாக உடுவில் பகுதியில் திருடர்கள் நுழைந்து ஆயுதங்களைக் காட்டி கொள்ளையில் ஈடுபட்டிருந்த நிலையில், அயல் கிராமங் கான மானிப்பாய், சங்குவேலிப் பகுதிகளிலும் திருடர்களின் அச்சுறுத்தல் தோன்றியுள்ளதாகவே நாம் கருதுகிறோம் எனவும், உரியவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ஐ-4-160)

## பெருவிழா

கொழும்புத்துறை, ஜூன் 18

சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலய நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணை விழாவும், மறு நாள் வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 5.30 மணிக்கு திருச் சொரூப வீதிவலப்பவனியும் இடம்பெறவுள்ளன. (த-ஐ-135)

# முற்றவெளிப் பிரதேசத்தை தூய்மையாக்கும் பணிகள்

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பிரதேசத்தைத் தூய்மையாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முனியப்பர் கோயிலடி, மத்திய நூல்நிலையம், துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ். மாநகர மைதானம் போன்ற பகுதிகளை உள்ளடக்கி இந்தப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணியில் மாநகரத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள பற்றைகள், புல்கள், செடிகள் என்பன வெட்டப்பட்டும் துப்புரவாக்கப்பட்டும் வருகின்றன. அத்துடன் துரையப்பா விளையாட்டு மைதான வளாகத்தில் உள்ள பனை மரங்களும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. (த-ஐ-17)

# சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குற்றச்சாட்டில் ஆறு பேர் கைது

கரணவாய், ஜூன் 18

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் இரவு வேளையில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குற்றச்சாட்டில் 6 பேரைக் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது முள்ளி, நெல்லியடி மற்றும் கரணவாய் ஆகிய பகுதிகளில் இரவு 9 மணிக்குப் பின்னர் சந்தேகத்துக்கிடமாக நடமாடினார்கள் என்று 6 பேரைக் கைது செய்தனர்.

இவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு நேற்றுக் காலை வாக்குமூலத்தைப் பெற்ற பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ஐ-108)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டத்தை இறுக்கமாக்குக

## நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 18

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை இறுக்கமாக நடைமுறைப்படுத்தி, குற்றச் செயல்கள் நடைபெறாதவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்துக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித சிறிவர்தனவுக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.

அந்த அறிவுறுத்தல்களில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

கடந்த ஒரு வருடமாகக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கிளிநொச்சி நீதிமன்றம், பல தண்டனை, தீர்ப்புக்களை வழங்கி வருவதால் அங்கு குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு மற்றும் மீளாய்வு மனுக்கள் யாழ் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் போது, கிளிநொச்சி மாவட்ட நீதிவான்களின் தீர்ப்புக்கள் சட்ட வரம்பு எல்லையில் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் அந்த மேன் முறையீடு மற்றும் மீளாய்வு மனுக்கள் மேல் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம் யாழ். மேல் நீதிமன்றம், தனது தீர்ப்புக்களின் மூலம் கிளிநொச்சி பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கும், கிளிநொச்சி நீதிமன்ற வழக்குகளுக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை, மரக்கடத்தல்கள், காடுகள் அழிப்பு நடவடிக்கைகளின் மூலமான மரக்கடத்தல்கள், போதைவஸ்து, கஞ்சா பாவனை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துகின்ற குற்றச்செயல்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு விடேச பணிப்புரைகள் பிறப்பித்து, தொடர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

விசேடமாகக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடுகின்ற பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், அதிகாலை வேளையில் கிளிநொச்சி மாவட்டத்தை மிகவேகமாக குறுக்கறுத்துச் செல்வதால், விபத்துக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே, அதிகாலை நேரங்களில் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினரை வீதிகளில் இறக்கி வேகத் தடுப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிளிநொச்சியில் நெற்பயிர் செய்யும் காணிகள் வெளிமாவட்டத்தவர்கள் விலைக்கு வாங்கி, நெற்பயிர் காணிச் சட்டத்துக்கு முரணாக அதில் மண்ணை நிரப்பி மேட்டுக் காணிகளாக்கி, கட்டடங்கள் கட்டப்படுவது சம்பந்தமாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் பொலிஸாரின் கண்காணிப்புக்குள் வரும்போது, அந்தப் பகுதி நெற்காணிகள் சம்பந்தமான விடயங்களைக் கையாளும் விவசாய உதவிப் பணிப்பாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வயற் காணிகளை நிரப்புவதற்குரிய மண்ணை வெளியில் இருந்து கொண்டு வருவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படக் கூடாது என்றும், பொதுவாக மண் ஏற்றி வரும் ட்ரக்டர் மற்றும் டிப்பர் வாகனங்களைக் கண் காணித்து சம்பந்தப்பட்டவர்க ளைக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சக ருக்கு நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார். (த-ஐ-4)

# தரச் சித்தியடைந்தவர்களுக்கே அதிபர் பதவிகள் வழங்கப்படும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் உறுதி

அதிபர் தரத்தில் சித்தி எய்தியவர்களுக்கே, அதிபர் பதவிகள் வழங்கப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உறுதியளித்துள்ளார் என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

அதிபர் சேவையில் சித்தி எய்திய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தற்போது பதில் கடமையாக அதிபர்கள் உள்ள பாடசாலைகளை வழங்குவது தொடர்பில், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், முதலமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போது பதில் அதிபர்களாக இருந்து, அதிபர் தேர்வுக்குத் தோற்றி, சித்தி எய்தியவர்கள் தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்றலாம்.

தற்போது பதில் அதிபராகக் கடமையாற்றுபவர்களில் பரீட்சைக்குத் தோற்றி, சித்தி அடையாத எவரும் அதிபராகக் கடமையாற்ற முடியாது. இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி எய்தத் தவறியவர்களில் 50 வயதைத் தாண்டியவர்கள் இருப்பின், அவர்களுக்கு உப அதிபர் பணி வழங்கப்படலாம்.

இவற்றை மாகாண கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி, உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருதல் உள்ளிட்ட [illegible] தீர்மானங்களை எட்டியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (த-ஐ-4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இராணுவத்தின் கடைகளை புறக்கணியுங்கள் மக்களே!

## வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை

வவுனியா, ஜூன் 18

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள இராணுவத்தின் வர்த்தக நிலையங்களில் பொருள்களை வாங்குவதைத் தவிர்க்குமாறும், அந்த வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்குமாறும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் உடலை வருத்தி வியர்வை சிந்தி உழைத்த பணம், தமிழர் தாயகத்தில் பெரும் அச்சுறுத்தலாகவும்- இடையூறாகவும் உள்ள இராணுவத்தின் பயன்பாட்டுக்குச் சென்றடையும் நிலைமை தொடர்பில் ஒவ்வொரு பிரஜையும் தெளிவுறவேண்டும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் பலதரப்பட்ட படைப் பிரிவுகளும் உணவகங்கள், தேநீர்ச்சாலைகள், மரக்கறி பழக்கடைகள், பல சரக்கு விற்பனை நிலையங்கள், நலன்புரி நிலையங்கள் என்பற்றை நிறுவி, பரந்தளவில் வியாபாரம் செய்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

இந்த வர்த்தக நிலையங்களில் தத்தமது படைப்பிரிவுகளின் சிப்பாய்கள் மட்டுமல்லாமல், அண்மைக்காலமாகப் பொதுமக்களும் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் அவர்களது வியாபார நடவடிக்கைகள் இலகுபடுத்தப்பட்டு வசதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்களும் இராணுவத்தினரின் வர்த்தக நிலையங்களில் பெருமளவில் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டு வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

அறிந்தோ, அறியாமலோ இராணுவத்தின் இத்தகைய வர்த்தக நிலையங்களில் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதால், அவர்களுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால், மக்களது பணம் சுழற்சி முறையில் இராணுவத்தினரின் பராமரிப்பு - பாதுகாப்பு உள்ளிட்ட இன்னபிற அலுவல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மக்கள் உடலை வருத்தி, வியர்வை சிந்தி, உழைத்துச் சேமித்த பணம், இவ்வாறு தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நிலைகொண்டு தமிழர் இருப்புக்கே பெரும் அச்சுறுத்தலாகவும் - குடைச்சலாகவும் உள்ள இராணுவத்தின் பயன்பாட்டுக்குச் சென்றடையும் அறியாமை நிலை கண்டு நாங்கள் தெளிவுறுதல் வேண்டும்.

ஆதலால் தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும், சிவில் நிர்வாக வெளியை வலியுறுத்தும் வகையிலும், இராணுவத்தின் வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்வதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து உறவுகளையும் அன்புரிமையோடு கேட்டுக்கொள்கின் றோம்-என்றுள்ளது.

(த-ஜ-21)

### சிறுவன் உட்பட இருவர் கசிப்பு விற்றனர் எனக் கைது

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், சிறுவன் உட்பட இருவர் மது வரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் சட்ட விரோத மதுபான விற்பனை இடம் பெறுவதாக, மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் பிரகாரம், குறித்த பகுதியை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சுற்றிவளைத்தனர்.

இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டவேளை கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த சிறுவன் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டதுடன், இவர்களிடம் இருந்து விற்பனைக்காக வைத்திருந்த ஒரு தொகுதி கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

**கைது செய்யப்பட்டோர் நாளை மறுதினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.** (த-ஜ-101)

### முதிரைக் குற்றிகள் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது

வவனியா, ஜூன் 18

கிளிநொச்சியில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை லொறியில் ஏற்றி, அதனைத் தேங்காய்களால் மறைத்துக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வன பரிபாலனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, அக்கராயன் 4 ஆம் கட்டைப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வன பரிபாலனத் திணைக்கள வட்டார அதிகாரி என்.செல்வநாயகம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே, மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற பாரவூர்தியுடன் சந்தேக நபரான சாரதி கைது செய்யப்பட்டார்.

குறித்த வாகனத்தில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. அதனை மறைக்கத் தேங்காய்களை அதற்கு மேல் ஏற்றியுள்ளனர்.

அந்த லொறியைத் தடுத்துப் பரிசோதனை மேற்கொண்டபோது, அதற்குள் மரங்கள் கடத்தப்பட்டமை தெரியவந்ததாக வன பரிபாலன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும், அதன் பின்னர் சாரதி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் அதிகாரிகள் மேலும் கூறினர். (த-ஜ-4)





மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக் கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (த-ஜ-56)

### போராளிகளின் தடுப்பு முகாம் வாழ்வு பற்றிய நூல் வெளியீடு

மன்னார், ஜூன் 18

முன்னாள் பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு தொடர்பான வரலாற்றுப் பதிவான 'ஆறிப்போன காயங்களின் வலி' என்ற நூல் வெளியீடு எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போரில் விழுப்புண் அடைந்து ஒரு கண்ணையும், ஒரு கரத்தையும் இழந்த பெண் போராளியான வெற்றிச்செல்வியின் பட்டறிவுப் பகிர்வாக, வெளியிடப்படும் இந்த நூலின் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-ஜ)

# கழிப்பறை வாசலில் பொருத்திய கமராவை நொறுக்கிய மாணவர்

## யாழ். வலயப் பாடசாலையொன்றில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

சீ.சீ.ரி.வி. கமரா பொருத்திய செய்தி, பத்திரிகையில் பிரசுரமானதை அவதானித்த மாணவர்கள், பாடசாலையின் கழிப்பறை வாசலில் பொருத்தியிருந்த குறித்த கமராவை அடித்து நொறுக்கியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட உயர்தரப் பாடசாலை ஒன்றில் ஆண்கள் மற்றும் பெண்களின் கழிப்பறைகளின் முன்பாக நீண்ட காலமாகக் கமரா பொருத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இது தொடர்பில் எவரும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாது தவிர்த்து வந்தனர்.

குறித்த பாடசாலையின் அதிபர் விடுமுறையில் சென்றுள்ளதால், பாடசாலையில் நிலவும் பலவேறு குறைபாடுகள் மாகாணக் கல்வியமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. இது தொடர்பில் மாகாணக் கல்வியமைச்சு ஆராயத் தயாரான வேளை, பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த கமரா தொடர்பிலும் மாகாணக் கல்வியமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த விடயங்கள் அனைத்தும் பத்திரிகையில் வெளிவந்ததன் பின்னர், ஆண் மாணவர்கள் கழிப்பறையின் முன்பாக இருந்த சி.சி.ரி.வி. கமராவை அடித்து நொறுக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கமரா பொருத்தப்பட்ட விடயம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும் என்று கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய ஒலிபெருக்கிகளை உடன் கட்டுப்படுத்துங்கள்

## யாழ். மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

குடாநாட்டில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் கல்விக்குத் தொல்லை கொடுக்கும் விதமாகவுள்ள, ஆலயங்களில் ஒலிபெருக்கிகளைக் கட்டுப்படுத்துமாறு மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிபதி மா. இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.



மாணவர்கள் கல்வி கற்பதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டியது நீதிமன்றத்தினதும், பொலிஸாரினதும் கடமை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

தேசிய பரீட்சைகளாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும் கல்விச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட் டுள்ளனர்.

எனவே மாணவர்களின் கற்றலுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில், குடாநாட்டில் உள்ள ஆலயங்கள் திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துமாறு அவர் கூறியுள்ளார்.

பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்களின் கல்வியை, கோயில் ஒலிபெருக்கிகளின் கட்டுப்பாடற்ற சத்தம் சீர் குலைக்கின்றது. இது தொடர்பில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து முறைப்பாடுகள் தொடர்ச்சியாகக் கிடைத்து வருவகின்றன.

எனவே அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக்குப் புதிதாக நியமனம் பெற்றுள்ள மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரானிஸ்லாஸுக்கு நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் தேக்க நிலையில் உள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட் டுள்ள சூழலில், தேசிய பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்கள் கல்வி கற்கும் சூழலை நீதிமன்றமும், பொலிஸாரும் ஏற்படுத்தவேண்டும்.

சட்டத்தை மீறி ஒலிபெருக்கிகள் தொல்லை கொடுக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டும், கண்ணால் கண்டும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் 91 ஆம் பிரிவின் கீழ் பொது தொல்லை கொடுக்கும் அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என சட்டம் கூறுகின்றது, எனவே கோயில் திருவிழாக்களின் போது, ஒலிபெருக்கிகள், பூசை நேரங்களில் மட்டும் சிறிதாகவோ, பெரிதாகவோ குறுகிய கால நேரம் அனுமதிக்கப்படலாம்.

பூசை நடைபெறாத மற்றைய நேரங்களில் ஒலிபெருக்கிகள் நிறுத்தப்படவேண்டும் அல்லது கோவில் வளாகத்துக்குள் மட்டும் கேட்கக்கூடியதாக சத்தம் குறைக்கப்படவேண்டும் அதே நேரம் பாடசாலைகள் நடைபெறும் நேரங்களிலும், பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் நேரங்களிலும் ஒலிபெருக்கிகள் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

சில ஆலயங்களில் திருவிழாக்களின்போது பூசையில்லாத, மக்களுமில்லாத நேரங்களில் காலையில் இருந்து இரவு வரையில் ஒலிபெருக்கிகள் பெரும் சத்தத்துடன் இயங்குகின்றன. அவைஉடனடியாக அகற்றப்பட வேண்டும். வீதிகளில் பொதுத்தொல்லை கொடுக்கும் வகையில் கட்டப்பட் டுள்ள அனைத்து ஒலிபெருக் கிகளிலிருந்தும் சத்தம் எழுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

பொலிஸாரிடம் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காக அனுமதி கோரும் போது, பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்காத வகையிலான நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படவேண்டும்.

எனவே பரீட்சைக்கு ஆயுத்தமாகும் மாணவர்களின் கல்விக்குத் தொல்லை கொடுக்காத வண்ணம், குடாநாட்டின் அனைத்து கோயில் நிர்வாகங்களும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் விடயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

பொது நலனுக்கு ஒத்துழைக்க வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் புதிய மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

(த-ஐ-4)

# கட்டி முடியாத வாய்க்காலில் கொட்டப்படும் திண்மக்கழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஆனைக்கோட்டை சாவற்கட்டில் மழை வெள்ளம் ஓடுவதற்கு வசதியாக வெட்டப்பட்ட வாய்க்கால், முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் அரை குறையுடன் இருப்பதால் தற்பொழுது திண்மக்கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறியுள்ளது.

மழை காலங்களில் வெள்ளம் வீதியில் தேங்கி நிற்பதால் மாணவர்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், வீட்டுக் காணிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

எனவே, இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி வெட்டப்பட்ட வாய்க்காலை முழுமையாகக் கட்டி முடிக்குமாறு ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலைய செயலாளர் ஆ.சி.கணேசவேல், சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைக் கோரியுள்ளார்.

வாய்க்கால் சம்பந்தமாகச் செயலாளர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரிடம் கையளித்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஆனைக்கோட்டை சாவற்கட்டில் இருந்து உயரப்புலம் ஜே.132 கிராம சேவையாளர் பிரிவை ஊடறுத்துச் செல்லும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உரித்தான வாய்க்கால், கடந்த நான்கு வருடங்களுக்கு முன் ஏறத்தாழ 150 மீற்றர் வரை வடிகால் அமைப்பு கட்டப்பட்டு மீதி 200 மீற்றர் வரை கட்டப்படாமல் கிடங்காக உள்ளது.

இதனால் வெள்ளம் அரித்து வீதி சிறுக்கிறது. அத்துடன் திண்மக் கழிவுகளைக் கொட்டும் இடமாகவும் மாறியுள்ளது. மழை காலத்தில் வெள்ளம் ஓடாமல் தேங்கி நிற்பதால், மாணவர்கள் கடற்றொழிலாளர்கள் போக்குவரத்தின்போது சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். இதனால் வீட்டு வளவுகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

எனவே விரைவில் மிகுதிப் பகுதி வடிகாலமைப்பையும் கட்டி, மக்களின் கஷ்டங்களைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

(த-ஐ-115)

# தென்மராட்சியில் இருந்து வலிகாமத்துக்கு பனங் கள்

வலி.மேற்கு, ஜூன் 18

வலிகாமம் பகுதியில் பனங்கள்ளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முன் வந்துள்ள, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பனங்கள்ளைத் தருவித்து விற்பனை செய்து வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் தை மாதத்திலிருந்து ஆரம்பமாகும் பனங்கள் பருவகாலம் படிப்படியாக அதிகரித்து, புரட்டாதி, ஐப்பசி மாதங்கள் வரை நீடித்திருக்கும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் போத்தல்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கள் விற்பனைக்கு விடப்படும்.

இந்த நிலையில் கடந்த மாதம் சில தினங்கள் தொடர்ந்து பெய்த மழை காரணமாக பனங்கள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், மதுப்பிரியர்களின் தேவையை நிறைவு செய்ய முடியாத நிலை சங்கங் களுக்கு ஏற்பட்டது.

இதையடுத்து கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமம் பகுதியிலிருந்து தினசரி சுமார் 800 போத்தல்கள், பனங்கள்ளைத்தருவித்து கள்ளுத் தவறணைகளில் வைத்து விற்பனை செய்து வருகின்றது.

(த-ஐ-115)

## தேசோதய சபை ஒன்றுகூடல்

கொழும்புத்துறை, ஜூன் 18

யாழ்ப்பாண மாவட்ட தேசோதய சபை உறுப்பினர்கள் மற்றும் சமாதான நீதிவான்களுக்கான ஒன்றுகூடல் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சர்வோதய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தேசோதய சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (த-ஐ-135)

## மீனவக் குடும்பங்களை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

கடற்றொழில் அமைச்சின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் மீனவக் குடும்பங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவக் குடும்பங்கள் தத்தம் பிரதேசத்தில் உள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா கேட்டுள்ளார்.

மீனவக் குடும்பங்கள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களில் இதற்கான படிவங்களைப் பெற்றுப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அவர்களிடம் இதற்கான படிவங்கள் இல்லாவிட்டால், கடற்றொழில் பரிசோதகர்கள் அல்லது பண்ணையில் உள்ள நீரியல் வள திணைக்களத்திடம் தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

குடாநாட்டில் உள்ள சகல கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இந்தப் பதிவு செய்யும் பணிகள் அடுத்த வாரத்தில் முன் னெடுக்கப்படவுள் ளன.

எதிர்காலத்தில் இடம்பெறும் இயற்கை இடர்கள், கடலில் இடம் பெறும் விபத்துக்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் மீனவர்கள் இந்தப் பதிவின் மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (த-ஐ-17)

## போக்குவரத்து விதிகள் குறித்து கருத்தரங்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஓட்டோச் சங்கங்களின் உரிமையாளர்களுக்குப் போக்கு வரத்து விதிமுறைகள், வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் , வட மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து அமைச்சு அலுவலகக் கேட்போர் கூடத் தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கில் நகரசபை எல்லைக் குட்பட்ட ஓட்டோச் சங்கங்களின் தலைவர், செயலாளர் மற்றும் நகரசபையின் செய லாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு மாகாண மோட்டார் வாகனபோக்குவரத்துத்திணைக்கள ஆணையாளர் கு.பிரபாகரமூர்த்தி அறிவித்துள்ளார்.(த-ஐ-9)

# கழிவுகளைக் கொட்டுவதற்கு நீர்வேலியில் இடம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திலிருந்து 200 மீற்றர் தூரத்துக்கு அப்பால் கழிவுகள் போடுவதற்கு இடம் ஒதுக்கப்பட் டுள்ளது.

அதற்கான வேலைத்திட்டத்துக்கு மாகாண விசேட நிதியின் கீழ் 3.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோப்பாய்-கைதடி வீதியில் தொடர்ந்தும் கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. கடலை அண்டிய பகுதியிலே அதிகமாக இந்தக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இதனால் கடல் நீர் மாசுபடும் அபாயமும் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த இடத்தில் கழிவுகளைக் கொட்டவேண்டாம் எனப் பல தடவை அறிவுறுத்தியும், அதையும் மீறிச் சிலர் கழிவுகளைக் கொட்டிச் செல்கிறார்கள். இரவு நேரங்களில் இந்த இடத்தில் கழிவு போடப்படுகின்றமை அதிகரித்துள்ளது. கழிவகற்றல் பிரிவினர் இவற்றைத் தினமும் அகற்றி வருகின்றனர்.

ஆயினும் இதற்கான ஒரு தீர்வாகவே நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு அப்பால் கழிவு கொட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்துக்குச் செல்வதற்கான பாதையை முதலில் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின் கழிவு கொட்டும் இடமும் திருத்தி அமைக்கப்படவுள்ளது-என்றார். (த-ஐ-ரி-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 118 கோடியில் அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்கள் தேவையா?

## கேள்வி எழுப்புகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 18

மகரகம புற்றுநோய் வைத்திய சாலைக்கு 'ஸ்கான்' இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு மக்களிடம் பணம் சேகரித்த அரசு, அமைச்சர்களுக்கு 118 கோடி ரூபா செலவில் சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வது நியாயமா என்று மக்கள் விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இது தொடர்பில் தெரிவித்ததாவது:

அமைச்சர்களுக்குத்தேவையான வளங்களை வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால் பலகோடி ரூபாவைச் செலவழித்து சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வது அநியாயச் செலவாகும். அமைச்சர்களுக்குத் தேவையான அளவு வாகனங்கள் கையிருப்பில் உள்ளன.



அமைச்சர்களின் இணைப்புச் செயலாளர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் தொகையைப் பார்த்தால் இது தெளிவாகின்றது. இந்தச் செயலாளர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களாகும். ஏன் இந்த வாகனங்களை அமைச்சர்களால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. சொகுசு வாகனங்கள் தொடர்பில் மக்களின் மனநிலையிலும் மாற்றம் தேவை.

பொது நிகழ்ச்சியொன்றுக்கு நாம் (கெப்) வாகனத்தில் போய் இறங்கினால், ஏன் வேறு வாகனம் இல்லையா என மக்கள் கேட்கின்றனர். அரசியல்வாதிகள் சொகுசு வாகனங்களில் வந்திறங்கினால்தான் தமக்கு மதிப்பு என்று மக்கள் நினைக்கின்றனர். எனவே மக்களது சிந்தனையிலும் மாற்றம் தேவை. அதே வேளை, 118 கோடி செலவழித்து சொகுசு வாகனக் கொள்வனவு தொடர்பில் ஊடகங்கள் கருத்துக் கேட்டால் மக்கள் எதிர்க்கின்றனர். எனவே மக்களின் மனோபாவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் - என்றார். (த-ஐ-5)

### நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம்: கைதான மாணவர் மூவருக்குப் பிணை

கொழும்பு, ஜூன் 18

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மாணவர்களை 2 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையில் விடுதலை செய்வதாகக் கொழும்பு மேலதிக நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு கடும் எச்சரிக்கை செய்த நீதிவான், ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இருப்பின் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-ஐ-5)

### திங்கட்கிழமை விடுமுறையில்லை

கொழும்பு, ஜூன் 18

நாளைமறுதினம் திங்கட்கிழமை அரச விடுமுறையாக அறிவிக்கப்படவில்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார். (த-ஐ-5)

## துறைமுக அதிகார சபையிடம் சம்பளம் பெற்ற ஊடகர்கள்

கொழும்பு, ஜூன் 18

ஊடக நிறுவனங்களில் பணிபுரிந்து கொண்டு, இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையிடமிருந்தும் சம்பளங்களைப் பெற்றுள்ள எட்டு ஊடகவியலாளர்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அது தொடர்பான தகவல்களைக் குறித்த ஊடகங்களுக்கு வழங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் கடற்படை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

மேலும் சில தகவல்களைப் பெறவேண்டியுள்ளது. அந்தத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி, அனைவரது பெயர்களையும் தெரியப்படுத்துவோம். தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்கள் மிகச் சரியான தகவல்கள்.

விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை நாங்கள் வெளிப்படுத்துவோம். ஏனெனில் ஒவ்வொருவரும் தமக்குத் தேவைப்படும் விதத்தில் துறைமுகத்தின் பணத்தைப் பயன்படுத்த இயலாது. இது சம்பந்தமாகச் சட்டத்தைச் சரியான விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எம்மாலான அதிகபட்ச பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளோம் - என்றார். (த-ஐ-ரி2-22)

## துறைமுகப் பாதுகாப்பு: விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 18

கொழும்புத் துறைமுகம் உட்பட அனைத்துத் துறைமுகங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைமுகங்களையும் பாதுகாப்பது தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறைமுகங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் அமைச்சின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதில் பல தரப்பட்ட சவால்கள் இருந்தாலும், முற்கூட்டிய தயார்ப்படுத்தலை மேற்கொள்வதும் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதும் முக்கியமானது.

சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர், அது தொடர்பில் அலசிப் பார்ப்பதைவிட முற்கூட்டியே அதைத் தடுத்து விடுவதே பெரிதும் முக்கியமானது.

விசேடமாக இன்றைய காலத்தில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்றன மீது விசேட கவனத்தைச் செலுத்துமாறு ஜனாதிபதி அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியிருந்தாகவும் துறைமுகங்கள் அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-ஐ-ரி2-22)

## ஐ.தே.க.- சு.க. இணக்கப்பாட்டுக்குக் குழு

கொழும்பு, ஜூன் 18

நாட்டின் பிரதான பிரச்சினைகளைக் கையாள்வதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே பிரதான பிரச்சினைகளில் இரண்டு கட்சிகளுக்கு இடையில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்கவும், பொதுவான இணக்கப்பாடு ஒன்றை எட்டவும் இரண்டு கட்சியினதும் சார்பில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இரண்டு வருட காலத்துக்குள் தேசிய அரசைக் குழப்பியடிக்க விரும்பவில்லை எனவும் அந்தக் கட்சி குறிப்பிட்டது.

சுதந்திரக் கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பு கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோதே அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் அமைச்சர் [illegible] வீரக்கொடி கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் நிலைமை [illegible] தொடர்பிலும், சிறிலங்கா [illegible] கட்சி மேற்கொள்ளும் [illegible] நடவடிக்கைகள் தொடர்பிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனினும் கடந்த தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரத்தை வழங்கியதைப் போலவே எமக்கும் அதிகாரத்தை கொடுத்துள்ளனர். அதற்கு அமையவே நாம் இரண்டு ஆண்டு காலத்துக்குத் தேசிய அரசில் இணைந்து நாட்டை முன்னேற்றும் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவித்தோம். எமது இந்த முடிவுகள் தனிப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல. கட்சியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானமாகும்.

எனினும் தேசிய அரசினுள்ளும் முரண்பாடுகள் குழப்பங்கள் இல்லாமலில்லை. பொதுவான சில விடயங்களில் பிரதான இரண்டு கட்சிகளும் முரண்படும் நிலைமைகளும் உள்ளன. மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் மாறுபட்ட கோட்பாட்டில் உள்ளோம். அதாவது இப்போது மத்திய வங்கி ஆளுநராக உள்ள அர்ஜுன மகேந்திரன் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் எஞ்சிய காலப் பதவிக்காக நியமிக்கப்பட்டவர். அவரின் பதவிக்காலம் முடிவடையும் வரை அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராகச் செயற்பட முடியும். அதன் பின்னர் மீண்டும் புதிய ஆளுநராக ஒருவரை நியமிக்க வேண்டும். அவ்வாறான நிலையில் அடுத்த பதவிக் காலத்துக்கு அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப் படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் சுதந்திரக்கட்சி உள்ளது. இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு செயற்படுகின்றது என்பது எமக்குத் தெரியாது. ஆகவே பிரதான பிரச்சினைகளில் இரண்டு கட்சிகளுக்கு இடையில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்கவும் பொதுவான இணக்கப்பாடு ஒன்றை எட்டவும் இரண்டு கட்சிகள் சார்பில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நாம் கூடிப் பொதுவான [illegible] கலந்தாலோசித்துப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றோம் - என்றார். (த-ஐ-5)

## உத்தியோகபூர்வ வாகனங்களை 2016இல் ஐ.தே.கவினர் பெறார்

கொழும்பு, ஜூன் 18

அரசு கொள்வனவு செய்யவுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களை இந்த ஆண்டின் இறுதிக்குள் பெற்றுக்கொள்ளாமலிருக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முடிவுசெய்துள்ளனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கான, மறு பிரதிபலிப்பைக் காட்டும் முகமாகவே அமைச்சரவை இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்கள் மேற்குறித்த தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, இடர் மற்றும் சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்டிருந்த குண்டு வெடிப்புக்கள் காரணமாக விபத்துக்குள்ளான மக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் என அனைத்தையும் புனரமைக்க வேண்டியுள்ளது.

அதுவரை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவேண்டாமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் இந்த உத்தரவுக்கு இணக்கம் தெரிவித்திருந்த தேசிய அரசின் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த ஆண்டில் தமக்கான உத்தியோகபூர்வ வாகனங்களைக் கொள்வனவு செய்ய வேண்டாமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி2,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமவன்சவின் உடலை உறவினரிடம் கையளிக்குக

## கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூன் 18
மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் உடலை அவரது உறவினர்களிடம் கையளிக்க வேண்டுமெனக் கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.
வெலிக்கடைப் பொலிஸாருக்கு நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
சோமவன்சவின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கு மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோசலிஸக் கட்சி மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகியன ஆர்வம் காட்டி வருகின்றன.
இதேவேளை, சோமவன்ச அமரசிங்கவின் உடலுக்கு அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்லி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(த-ஜ-5)

# கூட்டு எதிரணி எம்.பிக்கள் நல்லாட்சியில் இணையார்

## இது குறித்து வெளியாகிய செய்திகள் பசிலின் சூழ்ச்சி என்கிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜூன் 18
கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லாட்சி அரசுடன் இணையப் போவதாகப் பரப்பபடும் செய்தியில் எந்த வித உண்மையும் இல்லை. இது பசில் ராஜபக்சவின் சூழ்ச்சிக்காரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை.
இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள எவரும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ள அரசில் இணைந்து கொள்ளாதிருக்கத் தீர்மானம் எடுத்துள்ளனர். இந்தப் பரப்புரையைக் கட்சியில் கருத்து முரண்பாடுள்ள பசில் ராஜபக்சவே முன்னெடுத்து வருகின்றார். கூட்டு எதிர்க் கட்சியின் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் சூழ்ச்சியே இதுவாகும்.
பசிலைக் கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைத்துக் கொள்வதில் கட்சியிலுள்ள சிலருடன் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த எதிர்ப்பின் காரணமாக அவருடைய சூழ்ச்சிக்காரர்களால் இந்தப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது -என்றார்.
(த-ஜ-5)

# மீன் ஏற்றுமதி மீதான தடையை நீக்கியது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஜூன் 18
ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஆண்டு தொடக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருந்தது. இதனால் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.
இலங்கையின் புதிய அரசு, பதவிக்கு வந்த நாளில் இருந்து, மேற்கொண்ட பேச்சுக்களின் விளைவாக, இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. (த-ஜ-5)

# இலங்கைத் தமிழ் அகதிகள் படகு இந்தியாவுக்கே அனுப்பப்படும்

## இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18
ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லும்போது, மோசமான கால நிலை மற்றும் இயந்திரக் கோளாறினால், இந்தோனேசியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் படகை மீண்டும் இந்தியாவுக்கே பாதுகாப்புடன் அனுப்பி வைக்கவுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்தனர்.
கர்ப்பிணிப் பெண் மற்றும் 9 சிறுவர்கள் உள்ளிட்ட 44 இலங்கைத் தமிழ் அகதிகள் பயணித்த படகு, ஆச்சே பிராந்தியத்தின் கரையில் இருந்து 300 மீற்றர் தொலைவில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.
கடந்த புதன்கிழமை இரவு உள்ளூர் மற்றும் மத்திய அரசு அதிகாரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது, படகைக் கரைக்குக் கொண்டு வரவும், எரிபொருள் மற்றும் உணவு உதவிகளை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. எனினும், அவர்கள் திரும்பிச் சென்று விடவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் இந்தோனேசிய உதவி ஜனாதிபதி யூசுப் கல்லாவும் பங்கேற்றிருந்தார்.
இலங்கை அகதிகளைச் சட்ட விரோத குடியேற்றவாசிகள் என்று குறிப்பிட்ட ஆச்சே பிராந்திய குடிவரவு அதிகாரியான சமடான், போதிய பயண ஆவணங்கள் இல்லாமை, பயண நோக்கத்தை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமை காரணமாக அவர்களைத் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.
இந்தப் படகு இந்தோனேசியாவை விட்டு, இந்தியா நோக்கிப் பாதுகாப்புடன் வெளியேற்றப்படும். ஆனால் எப்போது இது நடக்கும் என்று உறுதிப்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (த-ஜ-5)

# இலங்கை அரசு தொடர்பில் அவசரப்படக்கூடாது அமெ.

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 18
ஆட்சி மாற்றத்தின்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இலங்கை அரசால் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலையில், இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து அமெரிக்கா அவசரப்பட்டுத் திருப்தி வெளியிட்டு விடக்கூடாது.
இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
அமெரிக்காவில் சமகால நிலைமைகள் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் கடந்த ஆண்டு தமிழ் மக்களின் பங்களிப்புடன் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதன்போது எமக்குப் பல்வேறு உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் ஆரம்பத்தில் சொற்ப அளவிலான முன்னேற்றகரமான நிலமைகள் காணப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் உண்மையான மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்களுக்கு, வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை
காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற அரசால் நிறைவேற்றக் கூடிய விடயங்கள் கூட இதுவரை இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவருகின்றன.
காணாமற்போனவர்கள் தொடர்பான பணியகத்தை அமைப்பதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனினும் அது தொடர்பில் முழுமையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.
புதிய அரசமைப்புத் தொடர்பாக அரசு முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், அன்றாடம் இடம்பெறும் பல பிரச்சினைகள் காரணமாக, மக்களுக்கு இன்னும் திருப்தியான நிலைமைகள் கிடைக்கவில்லை.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா கணிசமான பங்களிப்பு வழங்கியிருந்தது. அந்தப் பங்களிப்புத் தொடர வேண்டும்.
அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டதைப் போன்று மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை உண்மை தான். இருந்தாலும் மிதிபலகையிலிருந்து கால்கள் அவசரமாக எடுக்கப்பட்டுவிடக்கூடாது. அழுத்தங்கள் மற்றும் ஊக்குவிப்புக்கள் காரணமாகவே எம்மால் மாற்றங்களைக் காண முடிந்தது. எனவே அமெரிக்கா அவசரப்பட்டுத் தனது திருப்தியை வெளியிட்டுவிடக்கூடாது.
1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்காலிகமாக ஆறு மாத காலங்களுக்கே எனக் கூறி முதற் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் தற்போது வரை அது நீடிக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக வேறு சட்டமொன்றைக் கொண்டு வருவதற்குச் சட்ட ஆணைக்குழு முயற்சிகளை எடுத்துள்ளது. அதனை விரைவில் அரசு நடைமுறைக்குக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.
பொறுப்புக்கூறல் பொறிமுறைக்குக் கலப்பு நீதிமன்றமே அவசியம் என்று நாம் வலியுறுத்தியிருந்தோம். இது தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களின் பங்களிப்புடன் விசாரணைப் பொறிமுறை பற்றிக் கூறப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்துவதாயின் இலங்கையின் அரசமைப்பு இடமளிக்குமா? என்ற சந்தேகம் எம்மிடம் இருந்தது.
இது பற்றி நாடாளுமன்றத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியதுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான அனைத்துக் கட்சிகள் கூட்டத்திலும் சுட்டிக் காட்டி கூறியிருந்தோம்.
தற்போது இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை மாற்றுவது ஆச்சரியமளிக்கிறது. சிறப்பு நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றப் பொறிமுறை அமைக்கப்படவில்லை. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றும் வகையில் இந்தப் பொறிமுறை அமையுமா? என்பதைப் பார்வையிட எதிர்பார்த்திருக்கிறோம் -என்றார்.
(த-ஜ-5)

# சிவனொளிபாத மலையில் லஞ் சீற்றால் சுற்றாடல் மாசு

## காட்டு விலங்குகளும் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 18
சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச்செல்லும் பக்தர்களில் பெருந்தொகையானோர் லஞ் சீற்களைப் பயன்படுத்துவதுடன், அவற்றைப் பத்திரப்படுத்தாது வீசியெறிவதால் குறித்த சுற்றாடலில் பாதிப்பு அதிகரித்துள்ளது.
அத்துடன், அவற்றில் காணப்படும் உணவுகளின் எச்சங்களோடு லஞ் சீற்களைத் தமக்கான உணவாக்கும் காட்டு விலங்குகளும் உயிரிழப்பதாக பிரதேச உயிர்க் கொல்லி நோய்கள் வைத்திய நிபுணர் எம்.ஏ. வை.அர்பத் தெரிவித்தார்.
அண்மையில் நிறைவுற்ற சிவனொலிபாதமலை யாத்திரை காலத்தில் மிகப் பெரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
பெரும் பாலும் எஞ்சிய உணவு எச்சங்களுடன் லஞ் சீற்களையும் யாத்திரிகர்கள் வீசியுள்ளனர்.
இதனை மான், மரை போன்ற காட்டு விலங்குகளும் உண்டுள்ளன. இதனால் அவை நோய் வாய்ப்பட்டு உயிரிழந்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.
(த-ஜ-ரி2-22)

# அர்ஜுன மகேந்திரனுக்கு பதவிநீடிப்பா? இல்லையா?

## கோப் குழுவின் அறிக்கை தீர்மானிக்கும்



கொழும்பு, ஜூன் 18
இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கோப் குழுவால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. விசாரணைகளின் பின்னர், இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். மேலும் அர்ஜுன மகேந்திரனின் பதவியைநீடிப்பதா?இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதில் கோப் குழுவின் அறிக்கையும் ஆதிக்கம் செலுத்தும். என்று கோப் குழுவின் அங்கத்தவரும், தொழிற் பயிற்சித்துறை இராஜாங்க அமைச்சருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைப் பதவி நீக்கவேண்டும் என்று சிவில் அமைப்பினர் மற்றும் பொது எதிரணியினர் கோரி வருகின்றனர். அத்துடன் அரசுக்குள்ளேயும் பல கருத்துக்கள் நிலவுகின்றன. எவ்வாறாயினும் ஜூன் 30 ஆம் திகதி அவரது பதவிக்காலம் முடிவடைகின்றது. இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையா? என்பதனை நாம் ஆராயவேண்டும். பலர் பலவிதமான கருத்துக்களைக் கூறுவார்கள். அரசில் உள்ள சிலர் கூட பலவிதமான கருத்துக்களை கொண்டுள்ளனர். அதற்காக அமைச்சர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்து அரசின் நிலைப்பாடு என்று கூறவே முடியாது.
தீவிர விசாரணைகளின் முடிவு இல்லாமல் அரசின் நிலைப்பாட்டைக் கூற முடியாது. மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைப் பதவியில் தக்கவைத்துக் கொள்வதற்காகப் பிணை முறி மோசடிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூடி மறைப்பதாகக் கூறுகின்றனர்.
அது முற்றிலும் தவறாகும். அவர் மோசடி செய்ததாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை. எனினும் இது தொடர்பில் தீவிர விசாரணை செய்யாமல் கூறமுடியாது. இது தொடர்பில் கோப் குழுவினாலும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது - என்றார். (த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாயால் சொன்னதை செயல் வடிவில் காட்டுக...

**கை**யோடு ‘கம்மாரிஸ்’ என்று எமது மக்கள் மத்தியில் பேச்சு வழக்கு வாசகம் ஒன்று உண்டு. ஆனால் அச்சொட்டாக, ஆறு மாதங்கள் கழிந்து சென்ற போதிலும், ஜனாதிபதி அளித்த வாக்குறுதி சம்பந்தப்பட்ட விவகாரம் தண்ணீருக்குள் மூழ்கடிக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது.

அது குறித்து, நீண்ட பல வருடங்கள், தமது குடியிருப்புக்களைத் தொலைத்து விட்டு அந்தரிக்கும் வலி.வடக்கைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள், ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி உள்ளார்கள்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் நீங்கள் நேரில் வழங்கிய உறுதிமொழியை நம்பி இருந்தோம். தற்போதும் நம்பிய வண்ணமே வாழ்கின்றோம். அந்த நம்பிக்கைக்கு ஏமாற்றம் தந்து விடாதீர்கள் என்று, வெம்பி மனமுடைந்த நிலையில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்.

இதேவேளையில்,

இலங்கையில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு, அதிக எண்ணிக்கையான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை குறித்து மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது.

எங்கள் நாட்டில், நிலைத்து நிற்கக்கூடிய ஜனநாயக ஆட்சி முறையும், நல்லாட்சியும் நிலவுவதாக அரச தரப்பினர் புளுகித் தள்ளினாலும்கூட--

மக்களின் நலன் நாடிய செயற்பாடுகள் மிக மிக அத்தியாவசியம் என்று இடித்து உரைத்துள்ளார், ஐக்கிய நாடுகள் சபையின், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பிலான விசேட நிபுணரான, மோனிகா பின்டோ.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்திருந்த அவர், தமது கனதியான நீண்ட அறிக்கையை அடுத்த வருட ஆரம்பத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்க உள்ளார்.

எங்கள் நாடு பற்றியும், தாம் உண்டாக்கிய மாற்றங்கள் குறித்தும் அனைத்துலக நாடுகள் வாயாரப் புகழ்வதாக, இப்போதைய ஆட்சியாளர்கள் தம்மைத் தாமே புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

ஆனால், அவற்றுக்கு நேர்மாறாக, அனைத்துலக நிபுணர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் திருப்தி இன்மையையே வெளிக்காட்டுகின்றன.

இன்றைய நாளில், யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி, தாம் சொன்னதை செயல் வடிவத்தில் காட்டி, நொந்து போயுள்ள மக்களுக்குத் தோளோடு தோள் நின்று நலன் புரிய வேண்டும்.

எமது மக்கள் சார்பில் நாம் விடுக்கும் வேண்டுகை, முழுக்க முழுக்க அதுவே...

# சர்வதேச நீதிபதிகளை நிராகரிப்பது இதற்காகத்தான்

எம்.ஐ.முபாறக்

**வ**ருடா வருடம் இடம் பெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இந்த வருடமும் தொடங்கிவிட்டது. பல நாடுகளில் இடம் பெற்ற-இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அங்கு பேசப்படுவதோடு, இலங்கையின் இறுதிப்போரிலும் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் பேசப்படவுள்ளது.

போர் முடிவுற்ற 2009 இற்குப் பின் இருந்து, இப்போது வரை வருடா வருடம் இலங்கை விவகாரம் ஐ.நாவில் பேசப்படுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும் வழமையான ஒன்றாகி விட்டது. இருந்தும், இன்னும் இந்த விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவில்லை. மகிந்த அரசினால் பல வருடங்கள் இழுத்தடிக்கப்பட்ட இந்த விவகாரம் இப்போது மைத்தி-ரணில் அரசிடம் தள்ளிவிடப் பட்டுள்ளது.மகிந்தவைப் போல் அல்லாது இந்த அரசு இந்த விவகாரத்தை நியாயமாகக் கையாளும்-பாதிக்கப்பட்ட தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என்று தமிழர்கள் ஆரம்பத்தில் நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கை இப்போது மெல்ல மெல்ல உடையத் தொடங்கியுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் தமிழர்களின் அனைத்து விடயங்களிலும்-அனைத்துப் பிரச்சினைகளிலும் அக்கறையுள்ள அரசுபோல் இந்த அரசு தன்னைக் காட்டிக் கொண்டது. ஆளுநர்கள் மாற்றம்,காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் சிலர் விடுவிப்பு மற்றும் சம்பூர் மீள்குடியேற்றம் போன்ற பல விடயங்களில் தமிழர்களின் பக்கம் நின்று இந்த அரசு செயற்பட்டமை இந்த அரசு மீது தமிழருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது.

அரசின் இந்த தமிழர் சார்பு நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் தீர்வு மற்றும் போர்க் குற்ற விசாரணை தொடர்பிலும், தமிழருக்குச் சார்பாக நடந்துகொள்ளும் என்றே தமிழர்கள் நினைத்தனர். இந்த நினைப்பு-நம்பிக்கை மெல்ல மெல்ல வீணாகிப் போவதை இப்போது அவதானிக்கலாம்.

### ஆட்சி மாற்றத்தின் பின்னர் நடந்தவை

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இந்த அரசு தமிழருக்குச் செய்தவை எல்லாம் சிறிய காரியங்கள்தான். ஆனால், அரசியல் தீர்வு மற்றும் போர்க் குற்ற விசாரணை போன்றவைதான் பெரிய விடயங்கள். இவைதான் தமிழர்களின் இலக்காகும். ஆனால், அந்த இலக்கைத் தமிழர்கள் நினைத்தவாறு அடைய முடியாது என்றே தோன்றுகின்றது.

அவற்றுள் போர்க் குற்ற விவகாரம் என்பது தமிழர்கள் இழந்த உயிர்களுக்கு நீதியைக் கேட்டுப் போராடும் போராட்டமாகும். இறுதிப் போரில் இழக்கப்பட்ட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அந்த உயிர்களின் உறவினர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாகவும் குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாகவும்தான் போர்க் குற்ற விவகாரத்தை தமிழர்கள் சார்பில் திருப்திகரமாக-நியாயமானதாக முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

> படையினரை முழுமையாகக் காப்பாற்றுவதே அரசின் ஒரே நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறக் கூடாது.

அது நியாயமாக முடித்து வைக்கப்பட வேண்டும் என்றால், விசாரணைகள் நியாயமாக-பக்கசார்பின்றி இடம்பெற வேண்டும். தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இங்கேதான் பிரச்சினையே இருக்கின்றது.

இறுதிப் போரில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அரசு ஒரே குரலில் ஏற்றுக்கொள்வதாக இல்லை. கொல்லப்பட்ட 40 ஆயிரம் உயிர்களையும் நாம் புறக்கணித்துவிட முடியாது என்று பிரதமர் கூறுகின்றார். ஆனால், அரசில் உள்ள ஏனையவர்கள் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை என்று கூறுகின்றனர். இந்த நிலைப்பாட்டால் தமிழர்களுக்கு நிவாரணம் கிடைத்தாலும் அது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்காது என்பது தெளிவாகின்றது.

### சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்றால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சரியாகத் திரட்டப்பட வேண்டும். அவ்வாறு சரியாகத் திரட்டுவதற்கும் நடுநிலையாக நின்று உண்மையைக் கண்டறிவதற்கும் சர்வதேச விசாரணை அவசியமானது. உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நிபுணர்கள்-சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும்.

ஆனால், சர்வதேச நீதிபதிகள் உள்ளக பொறிமுறையில் உள்ளடக்கப்பட்டால் அது கிட்டத்தட்ட சர்வதேச விசாரணைக்கு ஒப்பானதாக அமையும்.

ஆனால், அரசு அவ்வாறானதொரு நிலைமையை விரும்பவில்லை. படையினருக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் மறைக்கப்பட வேண்டும், படையினரைக் காப்பாற்ற வேண்டும், உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட வேண்டும் என்பதே அரசின் ஒரே நோக்கமாக இருப்பதால் சர்வதேச நீதிபதிகளை உள்ளகப் பொறிமுறைக்குள் உள்வாங்க அரசு மறுக்கின்றது.

படையினரை முழுமையாகக் காப்பாற்றுவதே அரசின் ஒரே நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறக் கூடாது. இப்போது புரிகிறதா அரசு ஏன் சர்வதேச நீதிபதிகளை நிராகரிக்கின்றது என்று?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவி

# தையிட்டியும் மயிலிட்டியும் தலை நிமிர்வதெப்போது...?

"முந்தி எங்கள் பரம்
பரையின் கடலம்மா -கரை
முற்றும் நாங்கள் குடியிருந்த
மடியம்மா
சிங்களவன் இடையில்
வந்த குடியம்மா-வேர்
சீருடனே வாழ்வழிந்த
தேனம்மா?"

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் ஆளுகைக்குட்பட்ட வன்னிப் பெரு நிலப்பரப்பெங்கும் சுதந்திரமாக ஒலித்துக் கொண்டிருந்த ஒரு போர்க்கால எழுச்சிப் பாடலின் முதலடிகள் இவை.

இந்தப் பாடலை இன்று பலர் மறந்து போயிருக்கக் கூடும். ஆனால், காங்கேசன்துறை தையிட்டி குறிப்பாக மயிலிட்டி வாழ் கடற்றொழிலாளர்கள் அவர்களது குடும்ப அங்கத்த வர்கள் பலரும் இந்தப் பாடலின் முதலடி நான்கு வரிகளையும் இலகுவில் மறந்து விட முடியாது.

ஏனெனில், இந்தப்பாடல் அவர்களின் வாழ்வியக்கத்தை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, வடக்கு, கிழக்குப்பகுதியில் உள்ள இராணுவ, கடற்படை முகாம்களுக்குள் முடக்கப்பட்டுப் போன காணிகளுக்கு உரித்துடையவர்களின் நிலையையும் எடுத்துக் கூறுகின்றது.

90 களில் காங்கேசன்துறை, தையிட்டி மற்றும் மயிலிட்டி போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் வாழ்ந்த மீனவக் குடும்பங்கள் இன்னமும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் இப்பொழுதும் உறவினர்களின் இருப்பிடங்களிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் மயிலிட்டி மீள்குடியேற்றக் குழு ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தர இருக்கும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் மயிலிட்டியில் உள்ள எஞ்சிய நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்படல் வேண்டும். இல்லையேல் வீதியில் இறங்கிப் போராடுவோம் என மயிலிட்டி மீள்குடியேற்றக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஓர் இனப்பரம்பலோடு தாமும் தம் பாடுமாக தம்முன்னே உள்ள பரந்த நீலவான் கடலை நம்பி அதையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டம், அந்த இடங்களை விட்டு வெளியேறி இன்றோடு கிட்டத்தட்ட 26 வருடங்கள் கழிந்துவிட்டன.



### 26 ஆண்டுகளாக அவல வாழ்க்கை

இந்த 26வருட வாழ்க்கையில் அவர்கள் பட்ட அவலங்கள் தான் எத்தனை? உயிரிழப்புக்கள் தான் எத்தனை? சொத்தழிவுகள் தான் எத்தனை? ஒரே தேசத்துக்குள் தமக்கான உரித்துடைய நிலத்தில் வாழ்வதற்கு தகுதியற்றவர்களாக்கிய சிங்கள அரசியலாளர்கள் இது குறித்து சிந்திக்காத வரையில் தையிட்டி, மயிலிட்டி வாழ் மக்களின் மனதினுள் எமக்கான நிலம் எமக்கு வேண்டும்... என்ற தாகத்தை தூண்டிக் கொண்டே இருப்பார்கள்.

இலங்கை நாடானது பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் நாளில் இருந்து, இற்றை வரைக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் கடும் போக்கான செயற்பாடுகள் பலவும் தமிழ் மக்களால் மன்னிக்கப்பட்டு ஒரு தேசத்துக்குள் ஒற்றுமையாக வாழ்வோம்... என்று சிந்தித்துசெயற்பட முனைந்தாலும் இலகுவில் மறந்துவிட முடியாத வலியின் கனதிகள் அவை.

மறப்போம்; மன்னிப்போம்... என்ற உணர்வோடு எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வியலைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்கள் வாழ முற்படும் போதெல்லாம் சிங்கள ஆட்சியாளரும் சரி அவர்களைப் பாதுகாக்கின்ற முப்படையினரும் சரி மறந்த; மறக்க நினைக்கின்ற சம்பவங்களை அவர்களே மீண்டும் கிண்டிக் கிளறி தமிழ் மக்களின் இதயங்களில் விடுதலைக்கான தீயை, சுதந்திரத்துக்கான தாகத்தை வளர்த்து விடுகிறார்கள் என்பது மிகையான கூற்றல்ல. உதாரணத்துக்கு மாவீரர் நாள் வாரம், கரும்புலிகள் தினம், தியாகி திலீபன் நினைவு தினம் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

போர் முடிவடைந்து மக்கள் மெல்ல பழைய இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாத வகையில் அவர்களே மெல்ல மறந்து போய்க் கொண்டிருக்கின்ற தினங்களை சிங்கள அரசியல்வாதிகளும் படையினரும் குறிப்பிட்ட தினங்களுக்கு முன்பதாக உஷாராகி விடுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு மீண்டும் மீண்டும் விடுதலை உணர்வை வளர்த்து விடுகிறார்கள் என்றே கொள்ளலாம்.

பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தபோது தமிழினத்தின் குருதியில் இந்த நாடு தோய்ந்தது; குளிர்ந்தது என்பது கடந்த கால வரலாறு! இதில் தையிட்டி மற்றும் மயிலிட்டிக் கிராமங்களும் விதி விலக்காக நின்றதில்லை. கடலில் இருந்து ஏவப்படும் பீரங்கிக் குண்டுகளால் மேற்படி கரையோரக் கிராமங்களின் வனப்பும் அங்குள்ள மக்களின் வாழ்வும் சிதைந்து போனது என்பது உண்மைக் குப் புறம்பான கருத்தல்ல.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தமக்கான ஒரு சுதந்திர தனியிருப்புக்காக அகிம்சை வழியில் போராடி அதுதோற்றுப்போன தன்நிமித்தம் ஆயுதவழியை முன்னெடுத்தபோது விடுதலைக்கான பாதை ஓரளவு வெற்றியைத் தந்தது. இருப்பினும், கால நீட்சியில் அதுவும் கயமைத்தனங்களாலும் காட்டிக் கொடுப்புகளாலும் தோல்விகண்டு முடங்கிப் போனது.

தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தை 2009 மே மாதத்துடன் முடிவுக்குக் கொண்டு வந்த மனப் பூரிப்பில் ஒவ்வொரு வருடமும் அத்தினத்தை மாபெரும் விழாவாகக் கொண்டாடும் சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்கள், அந்தப் போரினால் இன்னமும் இன்னலுக்குள்ளாகி நிற்கும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வராது நிற்பது மேலாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடே ஆகும்.

குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான அரசியல் கைதிகளின் விடுதலை... போரின் போது காணாமற் போனவர்களுக்கு ஏற்பட்ட இறுதி நிலை... மக்களின் மீள் குடியேற்றம்... போன்ற பிரச்சினைகளுக்கு இன்னமும் தெளிவான முழுமையான தமிழ் மக்களின் மனதுக்குத் திருப்தி தரக் கூடிய வகையில் எந்த விதமான பதில்களோ அன்றி செயல் நடவடிக்கைகளோ எதுவும் இதயசுத்தியுடன் உண்மைத் தன்மையோடு நடைபெற வில்லை. இந்த விடயத்தை மயி லிட்டி மற்றும் தையிட்டி வாழ் மக்களின் மீள் குடியமர்வுக்குப் போடும் தடைகளைக் கொண்டே கூறிவிட முடியும்.

## விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கும் கட்டடக் காடுகள்

குடாநாட்டில் எங்கு பார்த்தாலும் விவசாய நிலங்களில் கட்டடங்களை அமைக்கும் பணிகள் மிகத் துரிதமாக இடம்பெறுவதைக் காண முடிகின்றது. இதனால் எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளில் பெரும் பாதிப்பு ஏற்படப் போவதை எவருமே கவனத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை.

அண்மையில் பருத்தித்துறை வீதியூடாகப் பருத்தித்துறைக்குச் சென்றிருந்தேன். நெல்லியடி நகரைக் கடந்ததும் வீதியின் இரண்டு பக்கமும் வீதியின் ஓரமாக ஏராளமான கட்டடங்கள் எழுந்து நின்றன. கட்டடங்கள் ஏதோவொரு வர்த்தக நிறுவனத்தின் நாமங்களைத் தாங்கி நின்றன. கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலங்களைப் பார்த்தபோது நெஞ்சு ஒரு கணம் திடுக்குற்றது. விவசாய நிலங்களிலேயே அந்தக் கட்டடங்கள் எழுந்து நின்றன. புகையிலையும், வெங்காயமும், மிளகாயும், கீரையும், மரக்கறி வகைகளும் செழித்து வளர்ந்து காணப்பட்ட அந்த நிலங்கள் தற்போது உயிரில்லாத கட்டடங்களைத் தாங்கி நிற்கின்றன.

இதுவொரு உதாரணமாக இருந்தாலும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. விவசாய நிலங்களில் எங்கு பார்த்தாலும் கட்டடக் காடுகள் முளைத்துக் காணப்படுகின்றன. ஏற்கனவே விவசாய உற்பத்திகள் குடாநாட்டில் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. இந்த நிலையில் விவசாய நிலங்களின் அளவும் குறைக்கப்படுமாயின் அதன் விளைவு மிகப் பயங்கரமானதாகவே அமையப் போகின்றது. வயல் நிலங்களில் குடியிருப்புக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைப்பது சட்டத்தின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றேன். ஆனால் தோட்ட நிலங்களை எவருமே கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அதிகாரிகளும் இந்த விடயத்தில் மெத்தனமாக இருப்பதையே காணமுடிகின்றது. இந்த நிலை நீடிக்குமாயின் குடாநாட்டின் எதிர்காலமே பாதிக் கப்பட்டுவிடும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

ஆகவே இனியாவது பொதுமக்களும், அதிகாரிகளும் இந்த விடயத்தில் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

பொ.பாலசிங்கம், சுன்னாகம்.

## நவாலி வயல்வெளியில் பொலித்தீன் கழிவுகள்

நவாலி வயல் வெளியில் தற்போது வாகனங்கள் மூலமாகக் கொட்டப்படும் குப்பைகளுடன் பெருமளவு பொலித்தீன்களும் கலந்திருப்பதால் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை தோன்றியுள்ளது. வயல் செய்கையாளர்கள் நவாலி வெளியிலுள்ள தமது வயல்களின் தேவைக்கெனக் குப்பைகளைப் பறித்து வருகின்றனர். ஆனால் இந்தக் குப்பைகளுடன் பெருமளவு பொலித்தீன் கழிவுகளும் கலந்து காணப்படுவதுடன் தற்போது வீசுகின்ற காற்றின் காரணமாக அந்தப் பகுதி முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. இத்தகைய பொலித்தீன்களால் சூழல் மாசடைவது மட்டுமல்லாது வயல் நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படப்போகின்றது. வயல் செய்கையாளர்கள் குப்பைகளை வாகனங்களில் ஏற்றுவதற்கு முன்னர் பொலித்தீன் கழிவுகளைத் தெரிவு செய்து அப்புறப் படுத்தியிருக்கவேண்டும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளாததால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படப்போகின்றன. நாட்டில் பொலித்தீன் பாவனைக்குத் தடையெனக் கூறுகிறார்கள். ஆனால் பொலித்தீன் பாவனை அதிகரித்துச் செல்வதையே காணமுடிகின்றது. மக்கள் தமது இலகு பயன்பாட்டைக் கருத்தில் கொள்கிறார்களே தவிர பாதிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தாதது கவலைக்குரியது. ஆகவே இனியாவது வயல்களில் குப்பைகளைப் போடுபவர்கள் பொலித்தீன் கழிவுகளைத் தெரிவுசெய்து அப்புறப்படுத்தி விடுவது நன்மை தரும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ப.திருநாவுக்கரசு, நவாலி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒர்லான்டோ தாக்குதல்;

## மனைவியுடன் தொடர்பில் இருந்துள்ள ஓமர் மாட்டீன்



வோஷிங்டன், ஜூன் 18
அமெரிக்காவின் ஒர்லாண்டோ பகுதியில் அமைந்துள்ள கேளிக்கை விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய ஓமர் மாட்டீன், சம்பவத்தின்போது மனைவியுடன் தொடர்பில் இருந்தார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
தாக்குதல் நடத்த ஆரம்பித்து 2 மணி நேரங்களின் பின்னர் அதிகாலை 4 மணியளவில் செய்தியைப் பார்த்தாயா என மனைவிக்குத் தகவல் அனுப்பியுள்ளார். உடனடியாக அவரது மனைவி, நான் உன்னை விரும்புகிறேன் எனப் பதிலுக்கு குறுந்தகவல் அனுப்பியுள்ளார்.
அத்துடன் பல தடவைகள் மனைவியான நூர் சல்மான் கணவனுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார் எனவும், அதற்கு கணவனான ஓமர் பதிலளிக்கவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
கொலைச்சம்பவம் இடம்பெறுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் கணவர் துப்பாக்கிக் கொள்வனவுக்காக ஆயிரக்கணக்கான டொலர் செலவு செய்தார் என நூர் சல்மான் விசாரணையில் தெரிவித்தார்.
தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் ஓமர், பேஸ்புக்கில் தாக்குதல் தொடர்பான பதிவுகளை தரவேற்றியுள்ளார் என பேஸ்புக் நிறுவுநர் மார்க் சுக்கர்பேர்க் தெரிவித்தார்.
விசாரணைக்காக ஒமரின் சமூக வலைத்தளங்களை ஆராய்ந்தபோது, அமெரிக்கா வான் தாக்குதல் மூலம் அப்பாவி இஸ்லாமியப் பெண்கள், குழந்தைகளைக் கொன்று வருகின்றது. இதற்குப் பதிலான தாக்குதல்கள் இடம்பெறும். எதிர்வரும் சில தினங்களில் அமெரிக்காவில் ஐ.எஸ். தாக்குதல்கள் இடம்பெறும் என அவர் பதிவு செய்துள்ளார் என்று சுக்கர்பேர்க் மேலும் தெரிவித்துள்ளார்.
(த-ரி4)

# சிரிய அரசுக்கு [illegible] களமிறங்குகிற[illegible]

## இராணுவத் தாக்குதல்களை நடத்தத் திட்டம்

வொஷிங்டன், ஜூன் 18
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 50 க்கும் மேற்பட்ட ராஜதந்திரிகள், சிரிய ஜனாதிபதி அசாத்தின் உள்நாட்டுப் போருக்கு எதிராக இராணுவத் தாக்குதல்களை நடத்தும் உடன்பாடு ஒன்றில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டனர்.
சிரியாவில் அமெரிக்காவின் வகிபங்கு உள்நாட்டுப் போரைக் கட்டுக்குள் கொண்டுவருவதாகும். இந்த நிலையில் விடாப்பிடியாக தொடர்ந்து இடம்பெற்று வரும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த சிரியப் படைகளுக்கு எதிராக அமெரிக்கா இராணுவத்தைக் களமிறக்க தயாராகியுள்ளது.
சிரியக் கொள்கையை வகுக்கும் இராஜாங்கத் திணைக்களத்தின் 51 மாநிலங்களைச் சேர்ந்த ராஜதந்திரிகள் இதில் கைச்சாத்திட்டுள்ளனர்.
அசாத்துக்கு எதிரான அமெரிக்காவின் இந்த முடிவு,



ஒபாமாவின் அதிகாரத்தில் இடம்பெற்ற பெரிய அளவிலான மாற்றம் என அவதானிகள் தெரிவித்தனர். அத்துடன் அசாத் பதவி விலகவேண்டும் என்பது

## பாரிஸ், பிரஸ்சல்ஸ் நகரங்களில் மீண்டும் தாக்குதல் அபாயநிலை

வொஷிங்டன், ஜூன் 18
அமெரிக்காவின் ஒர்லான்டோவில் இடம்பெற்ற தாக்குதல் போன்று பிரஸ்சல்ஸிலும், பாரிசிலும் தாக்குதல் இடம்பெற வாய்ப்புள்ளதாக அமெரிக்க உளவுப்பிரிவுப் பணிப்பாளர் ஜோன் பெர்னான் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
இந்த வகைத் தாக்குதல்கள் கெரில்லாத் தாக்குதல்கள் என்றும், எந்தச் சலசலப்புமின்றி அவர்கள் தாக்குதலை நடத்துவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
முன்னதாக இஸ்லாமியத் தம்பதி ஒன்று 14 பேரைக் கொலை செய்தமை போன்றும், ஓமர் மாட்டீன் 49 பேரைக் கொன்றமை போன்றும் மக்களோடு மக்களாக இருந்து தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இணையத்தில் உள்ள பரப்புரைக் காணொலிகள், போதனைகளை செவிமடுத்து, மூளைச் சலைவைக்கு உட்பட்டுச் சிலர் தாமாகவே போராளிகளாக மாறுகின்றனர். பின்னர் இணையத்தில் உள்ள அறிவுறுத்தலுக்கு அமையத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.
ஐ.எஸ். அமைப்பினர் அகதிகளுடன் போராளிகளையும் மேற்கு நாடுகளுக்கு அனுப்புகின்றனர். அத்துடன், கடத்தலில் ஈடுபடுபவர்களுடன் இணைந்து பாதுகாப்புப் பலவீனங்களையும் தெரிந்து கொள்கின்றனர். இதன் மூலம் தாக்குதல்களை நடத்துவது சாதகமான காரியமாக அமைந்துள்ளது. இதற்காக ஆயிரக்காணக்கான போராளிகள் ஐரோப்பில் உள்ளனர்.
ஐ.எஸ். அமைப்பு எண்ணெய், வரி மூலம் பெருந்தொகை பணத்தை வருமானமாக ஈட்டுவதால், அவர்களை முறியடிப்பது நீண்ட காலப் போரின் மூலமே சாத்தியம்.
சிரியா மற்றும் ஈராக்கில் 20 ஆயிரம் ஐ.எஸ். போராளிகள் களத்தில் உள்ளனர். கடந்த வருடம், 33 ஆயிரம் பேர் களத்தில் இருந்தனர். லிபியாவில் இருந்த ஐ.எஸ். போராளிகள் மிக ஆபத்தான போர் ஆயுதங்களைக் கொண்டிருந்தனர் - என்றார்.
(த-ரி4)

## பாகிஸ்தா[illegible] அமெரிக்க [illegible]

வொஷிங்டன், ஜூன் 18
பாகிஸ்தானுக்கு 30 கோடி [illegible] டொலர்கள் ராணுவ உதவி [illegible] தற்கு அமெரிக்க செனட் [illegible] விதித்துள்ளது.
தேசிய பாதுகாப்பு அங்கீகாரச் சட்டம் (என்.டி.ஏ.ஏ)-2017 அமெரிக்க செனட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 85:13 என்ற கணக்கில் நிறைவேறியது. கடந்த ஆண்டு என்.டி.ஏ.ஏ-2016 சட்டத்தில், பாகிஸ்தானுக்கு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் நற்சான்றிதழ் வழங்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், [illegible] அமைச்சர் ஆஷ்டன் கார்டர் [illegible] அளிக்கவில்லை.
இதனையடுத்து கூட்டாளி [illegible] யத்திலிருந்து 30 கோடி [illegible]





## பிரிட்டனின் பெண் எம்.பி. வீதியில் சுட்டுக் கொலை

லண்டன், ஜூன் 18
பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெலன் ஜோவான் வீதியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் பிரிட்டன் செல்வாக்கு மிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். இவரது கொலை தொடர்பில் 52 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
இந்தக் கொலை குறித்து ஹெலனின் கணவர் பேர்டன் தெரிவித்ததாவது:
[illegible]தைகளை அன்புடன் வளர்ப்[illegible] மக்களுள் உள்ள வெறுப்பை [illegible] வகையில் செயற்படவேண்டும் என்பதும் ஹெலனின் ஆசை. இன்று இவரது இறப்புக்கு இதுவே காரணமாகியுள்ளது - என்றார்.
இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்ததாவது:
மிகச்சிறந்த பெண்மணியை இழந்துவிட்டோம். அரசியல் சூழலில் மிக துடிப்புடனும், ஆர்வத்துடனும் செயற்பட்டவர். இந்தச் செய்தி எமக்கு ஆழ்ந்த வேதனையை அளித்துள்ளது எனத் தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவது தொடர்பாக இடம்பெற்ற கருத்து மோதல்களால் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
(த-ரி4)



ஒர்லாண்டோ துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், அ[illegible] வன்முறை, தீவிரவாதம் எழுவதைக் கட்டுப்படுத்தவேண்டும் என அவர் அங்கு தெரிவி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த எதிராக
# றது அமெ.



அமெரிக்காவின் குறிக்கோளாகும். இந்த நிலையில் அமெரிக்காவின் அளவுக்கும் மிஞ்சிய தலையீடு தேவையற்றது. முன்தாக ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் தலையீடு செய்து இன்னமும் முடிவின்றியுள்ளது. இந்த நிலையில் அங்குள்ள களநிலவர ஆய்வின்படி தற்போதைய ஒப்பந்தம் பயனற்றது என ராஜதந்தரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் படைகளுடன் போரிடும் சூழல் ஏற்பட்டால் சிரியா மேலும் அழுத்தத்துக்கு முகம் கொடுக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக அமெரிக்காவின் விசேட படையினர் 300 பேர் ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் பங்குகொண்டுள்ளனர். ஆனால் இதுவரை அசாத்துக்கு எதிராக எந்தத் தாக்குதலையும் அவர்கள் நடத்தவில்லை என அவதானிகள் கருத்து தெரிவித்தனர்.

(த-ரி4)

ரிய அள
ித்தனர்.
என்பது



# கலிபோர்னியாவில் காட்டுத் தீ 1,400 ஏக்கர் எரிந்து நாசமானது

வொஷிங்டன், ஜூன் 18

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று முன்தினம் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரத்து 400 ஏக்கர் தீயில் கருகியது.

இதனையடுத்து அரிசோனா, நியூ மெக்ஸிக்கோ, உட்டா மாகாணங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நிலவும் வறட்சியான – வெப்பமான காலநிலை தீயணைப்பு வீரர்களுக்குக் கடும் சவாலாக அமைந்துள்ளது. இதனால் தீயணைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளன.

கடந்த 70 வருடங்களாகக் காட்டுத் தீயினால் பாதிப்படையாத பிரதேசங்கள் பல இப்போது காட்டுத் தீயினுள் அகப்பட்டுள்ளன. கடும் காற்றும் தீ பரவும் வேகத்தை அதிகரித்துள்ளது.

800 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்தப் போராடி வருகின்றனர்.

இதனிடையே பல மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். செவிட்டா மாகாணத்தில் 300 ஏக்கர் பரப்பில் தீ பரவியது. அங்கு 75 சதவீதமான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

(த-ரி4)

# ...தானுக்கு ராணுவ உதவி; ...ரிக்க செனட் நிபந்தனை

ஜூன் 18
...த 30 கோடி அமெரிக்க
...ணுவ உதவி வழங்குவ
...க செனட் நிபந்தனை

...பு அங்
(என்.
அமெ
நேற்று
இடம்
...டுப்பில்
...கணக்
...றியது.
...டு என்.
சட்டத்
...னுக்கு
...துகாப்பு
...சான்றி
...ண்டும்
...விதிக்



... ஆனால், பாதுகாப்பு
...டன் கார்டர் சான்றிதழ்
...ல.
... கூட்டாளி ஆதரவு நிதி
...30 கோடி அமெரிக்க

டொலர்களைப் பாகிஸ்தானுக்கு அளிக்க முடியாத சூழலுக்கு அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் ஆளாகியுள்ளது. இந்த நிதி நடப்பு நிதியாண்டுக்கானது. வரும் செப்ரெம்பருடன் நடப்பு நிதியாண்டு நிறைவடைய உள்ளது.

செனட்டின் இந்த முடிவுக்கு அதிபர் மாளிகை ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

(த)

# வன்முறையில் ஈடுபட்ட 400 பேர் எத்தியோப்பியாவில் படுகொலை

## மனித உரிமைகள் அவதானிப்புக் குழு தெரிவிப்பு

அடிஸ் அபாபா, ஜூன் 18

எத்தியோப்பியப் பாதுகாப்புப் படையினர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த 400 பேரைக் கொன்று குவித்துள்ளனர் என அமெரிக்க மனித உரிமைகள் அவதானிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அரசு குற்றத்தை ஒப்புக்கொண்டபோதும், கொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைமிகவும் அதிகம் என மனித உரிமைகள் அமைப்பு மேலும் கூறியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா பகுதியில் உள்ள ஒரோமியாவின் நிலப்பரப்பை அதிகரிக்க விவசாயிகளின் இடங்கள்



சூறையாடப்படவுள்ளன என்ற அச்சம் காரணமாக விவசாயிகள், அப்பகுதி மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணைகளின் தொகுப்பு அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் பாதுகாப்புப் படைவீரர், அரசு உத்தியோகத்தர் என 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக வெளியிடப்பட்ட அறிக்கையில் 173 பேர் கொல்லப்பட்டனர் என்றும், அதற்காக பிரதமர் ஹயில்மரியம் டெசாலஜின் மன்னிப்புக் கோரினார் என்றும் தகவல் வெளியானது.

ஆனால், தற்போதைய அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையில், கிட்டத்தட்ட 400 பேர் கொல்லப்பட்டனர் என்பதுடன், 100 க்கும் மேற்பட்ட சாட்சியங்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-ரி4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பதுடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபமா உயிர்தப்பியவர்களை நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் அமெரிக்காவில் துப்பாக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டும். வீட்டி...
...ங்கு தெரிவித்தார்.

(த-ரி...)



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 6

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 6 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இவர்கள் மற்றவர்களைத் தங்கள் வசப்படுத்தி, தங்களது காரியங்களை முடித்துக் கொள்வதில் வல்லவர்கள். தங்களின் முன்னேற்றத்தின் மீதே கருத்தாக இருப்பார்கள். தங்களின் வசதியைப் பெருக்குவது எப்படி? பணத்தை இன்னும் பெருக்குவது எப்படி? என்று சிந்தித்தே, காய்களை நகர்த்துவார்கள். 6 எண் வலுப்பெற்றால், ஆன்மிகத்திலும் வெற்றி அடைவார்கள்.

தங்களது சுயலாபத்துக்காகவே, அடுத்தவர்களுக்கு உதவி செய்வார்கள். எந்தக் காரியமானாலும் நன்றாகச்சிந்தித்தே ஒரு முடிவுக்கு வருவார்கள். மந்திரங்கள், மாய தந்திரங்கள் ஆகியவற்றை அறிந்து கொண்டு, அவற்றைக் காசாக்குவதில் வல்லவர்கள்.

இவர்கள் செல்வத்தைக் குவித்திடும், லட்சுமியின் புத்திரர்கள் ஆவார்கள். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையும் உண்டு. இன்பங்கள் துன்பங்களில் சலிக்கமாட்டார்கள். அதற்கேற்றவாறு உடல் சக்தியும் மிகுந்திருக்கும். இவர்களது உருவம் அழகாக இருப்பதால் பெண்களை எளிதில் கவர்ந்து விடுவார்கள். அவர்களும் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கமாட்டார்கள். இன்ப அனுபவங்களில் தீவிர ஈடுபாடு உண்டு. தலை முதல் பாதம் வரை ஒரே சீராகவும், அழகாகவும் இருப்பார்கள். அழகான உடை மற்றும் வாசனைத் திரவியங்கள் மூலம் தங்களை மேலும் அழகுபடுத்திக்கொள்வார்கள். தாங்கள் வசிக்கும் இடத்தையும் மிகவும் அழகாக வைத்துக் கொள்வார்கள்.

காதல் விடயங்களில் அதிர்ஷ்டகாரமானவர்கள். அதிக காம குணம் இருப்பதால், ஒழுக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள்.

இவர்களுக்கு நல்ல அழகும், குணங்களும் உள்ள கணவன் மனைவி அமைவர். தம்மிடமுள்ள கவர்ச்சியை வெளிப்படுத்தும் சூழ்நிலைகளில் சிக்கிக் கொள்ளாமல், எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். எனவே, திருமணமாகாதவர்கள். கூடிய விரைவில் திருமணம் செய்து கொண்டால் இந்தப் பிரச்சினைகளிலிருந்து சமாளித்துக் கொள்ளலாம்.

பொதுவாக இந்த எண்காரர்களுக்கு உணவு, உடை, வீடு ஆகியவற்றில் குறைபாடுகள் ஏற்படாது. வசதிகளை எப்படியும் உருவாக்கிக் கொள்வார்கள். பெரும் புகழ் பெற்ற கலைஞர்களும் பேச்சாளர்களும் இவர்களே. இவர்கள் மற்றவர்களின் கலைத் திறமையைப் பாராட்டுவார்கள். பொறாமையும் பிடிவாதமும் உண்டு.

கீழ்த்தரமானவர்கள் (எண்பலம் மிகவும் குறைந்தவர்கள்) பிறரை ஏமாற்றியும், வஞ்சித்தும் பிழைப்பார்கள். கெட்ட வழிகளில் துணிந்து செல்வார்கள். தங்களை நம்பியவர்களைக் கூட ஏமாற்றுவார்கள். இவர்களது மனதில் அதிக காமமும், பணத்தாசையும் இருக்கும்.

இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் நிறைய உண்டு. பெண் குழந்தைகள் அதிகம் உண்டு. பொதுவாக உலக கலைகளை அனுபவிக்கப் பிறந்தவர்கள் இவர்களே. இவர்களால்தான் உலகில் பழைய கலைகளும், இலக்கியங்களும் இன்னும் நிலைபெற்று உள்ளன.

**அதிர்ஷ்ட தினங்கள்**

ஒவ்வொரு மாதத்திலும் 6, 15, 24 ஆகிய திகதிகளும் 9, 18, 27 ஆகிய திகதிகளும் மிக அதிர்ஷ்டகரமானவையே. கூட்டு எண் 6 மற்றும் 9 எண் வரும் தினங்களும் நல்ல பலன் களையே கொடுக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் 3, 12, 21 ஆகிய தினங்களும் கூட்டு எண் 3 வரும் தினங்களும் மிகவும் துரதிர்ஷ்டமானவை. 5, 14, 23 திகதிகளில் முக்கிய முடிவுகள் எடுக்கக்கூடாது. நடுத்தரமான பலன்களே கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

இவர்களுக்கு மிகவும் உகந்தது பச்சை, நீலம் மற்றும் இரண்டு கலந்த நிறங்கள். இலேசான சிவப்பும் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். வெள்ளை, ரோஸ், மஞ்சள் ஆகிய நிறங்களைத் தவிர்த்து விடவும்.

**6 ஆம் திகதி பிறந்தவர்கள்**

எப்போதும் செல்வத்தில் திளைக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதற்காகக் கடுமையாக உழைப்பார்கள். எவரையும் சமாளித்து, தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வார்கள். இவர்களிடத்தில் பெண் தன்மையும் காணப்படும். எதிலும் மிகுந்த ஊக்கத்துடன் ஈடுபடுவார்கள். அடக்க சுபாவமும், ஆழ்ந்த சிந்தனைகளும் உண்டு.

(தொடரும்)

# சமையல் பாகமும் ஜனநாயகமும்

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

வாக்கெடுப்பு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்த கிரேக்க குடியாட்சி முறை கிறிஸ்துவுக்கு முன்னரே அந்த நாட்டில் பெருவாரியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆட்சி அமைப்பிலும் நீதித் துறையிலும் மக்களில் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே முடிவுகளைச் செய்தார்கள். குடி ஆட்சியில் இருந்த வாக்கெடுப்பு முறையினாலேயே சோக்கிறடீஸ்க்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டது. குடியாட்சியில் பலவிதமான கொள்கைகளும் கட்சிகளும் தோன்றி ஒன்றோடு ஒன்று மோதி அரசை எவர் ஆள்வது எனும் போட்டியும் குழப்பமும் உண்டாகின்றன. ஆட்சி என்ற கப்பலில் ஏறியுள்ள சகல பயணிகளும் தானே

கப்பலை ஒட்டும் மாலுமியாக இருப்பேன் என்று தங்களுக்குள் சண்டை பிடித்துக் கொள்வார்கள். உரியவர்களின் வெளிப்படைப் பண்புகளுக்கு ஏற்ப அரசுகள் இருக்கும், இயங்கும். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி இதுவே ஜனநாயகப் பண்பு. மக்களால் மக்களுக்கு மக்களுக்காக அமைவதே ஜனநாயக அரசு. மக்கள் நல்லவர்கள், வல்லவர்களைத் தெரிவு செய்யின் நல்லாட்சி அமையும். அரசியல் நீதி தனிமனித நீதி இரண்டும் அடிப்படையில் ஒன்றே. ஆளப்படுபவர்களை விட, ஆள்வோர் அறிவாற்றல் மிக்கவராக இருத்தல் வேண்டும். அறுசுவை உணவைத் தயாரித்து வழங்கும் சமையல் பாகம் கவனிக்கத்தக்கது. உறைப்பு, உவர்ப்பு, கசப்பு, இனிப்பு, துவர்ப்பு புளிப்பு ஆகியவை ஒன்றோடொன்று முரண்பட்டவை. பாகற்காய், கத்தரி, பூசணி, புடோல், வெண்டி, பலாக்காய் போன்ற தாவர வகைகளும் மீன், இறைச்சி, கருவாடு, முட்டை போன்ற மாமிச வகைகளும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டுள்ளன. திறமையான சமையல் பாகம் தெரிந்த பெண்மணி ஒருவர் பொறுமையுடன் உரிய முறையில் கலந்து ருசியான கறி சமைத்துத் தருகின்றாள். எனவே முரண்பட்டவர்களைப் பதமாக்கி உரிய பயன்பெறுவதே ஜனநாயகத்தின் சிறப்பு.



உரியவர்களின் வெளிப்படைப் பண்புகளுக்கு ஏற்ப அரசுகள் இருக்கும், இயங்கும். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. இதுவே ஜனநாயகப் பண்பு. மக்களால் மக்களுக்கு மக்களுக்காக அமைவதே ஜனநாயக அரசு. மக்கள் நல்லவர்கள், வல்லவர்களைத் தெரிவு செய்யின் நல்லாட்சி அமையும். அரசியல் நீதி தனிமனித நீதி இரண்டும் அடிப்படையில் ஒன்றே.

பல் குழுவும் பாழ் செய்யும்
உட்பகையும்
வேந்தலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு
(குறள் 735)

மனிதனின் அடிப்படைக் குணங்களை ஆசை, உணர்ச்சி, பகுத்தறிவு எனப் பகுப்பர். பகுத்தறிவு உள்ளோரிடமே ஆளும் அதிகாரம் இருத்தல் நன்று. முறைகேடானதை எதிர்ப்போம். ஜனநாயகத்திலும் நல்லன பெற்று உய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வி வாய்ப்புக்களுடன் கூடிய பாடத்தேர்வுகளும் நடைமுறைகளும்

சேனாதிராசா ஜெயானந்தன்

(நேற்றைய தொடர்ச்சி)

பல்கலைக் கழகங்களில் கிடைக்கும் பட்டக் கற்கை நெறிகள்

**01.கலை**

01. கலை, 02. கலை (SP), 03. கலை (SAB), 04. தொடர்பாடல் கற்கைகள், 05. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும், 06.இஸ்லாமியக் கற்கைகள் 07. அரபு மொழி, 08. சங்கீதம், 09 நடனம், 10. சித்திரமும் வடிவமைப்பும், 11. நாடகமும் அரங்க மும், 12. கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் 13. கட்புலக்கலை, 14. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல்.

**இந்தத் துறைக்கான பொதுக் கற்கைகள்**

**01.சட்டம்**

02.முகாமைத்துவக் கற்கைகள் (TV)

03.கட்டடக்கலை, 04.வடிவமைப்பு, 05.நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும், 06.கணிய அளவியல், 07.தகவல் தொழில்நுட்பம், 08.பட்டினமும் நாடும் திட்டமிடல், 09.தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும், 10. கணக்கிடலும் முகாமைத்துவமும், 11.தொழில் முயற்சியும் முகாமைத்துவமும், 12.கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், 13.முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும், 14.உடற்றொழில் கல்வி, 15.விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும், 16. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும், 17.விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம், 18.தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்,19.சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும், 20.தகவல் முறைமைகள், 21.நிலத்தோற்றக் கட்டடக் கலை, 22.மொழிபெயர்ப்பு கற்கைகள், 23.திரைப்படமும் தொலைக் காட்சிக் கற்கைகளும், 24.செயற்றிட்ட முகாமைத்துவம், 25.உணவு வியாபார முகாமைத்துவம்.

**02. வணிகவியல்**

01. முகாமைத்துவம், 02. பொது முகாமைத்துவம், 03. சொத்து முகாமைத்துமும் மதிப்பீடும், 04. வணிகவியல்.

**இந்தத் துறைக்கான பொதுக் கற்கைகள்**

01. சட்டம், 02.கலை(SAB), 03. கணித அளவயியல், 04.கட்டடக் கலை, 05. வடிவமைப்பு, 06.நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும், 07. தகவல் தொழில்நுட்பம், 08. பட்டினமும் நாடும் திட்டமிடல், 09. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும், 10. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்,11வசதிகள் முகா மைத்துவம், 12. கணக்கிடலும் முகாமைத்துவமும், 13. தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்,14. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், 15.முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்(SEUSL), 16. உடற்றொழில் கல்வி, 17. விளை யாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும். 18. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும், 19. தகவல் முறைமைகள், 20. நிலத்தோற்றக் கட்டடக்கலை, 21.மொழிபெயர்ப்புக் கற்கைகள், 22.திரைப்படமும் தொலைக்காட்சிக் கற்கைகள், 23செயற்றிட்ட முகாமைத்துவம், 24. முகாமைத்துவ கற்கைகள்(TV), 25. வியாபார தகவல் முறைமைகள், 26. உணவு வியாபார முகாமைத்துவம்

**03. உயிரியல்**

01. மருத்துவம், 02. பல்லறுவைச் சிகிச்சை, 03. விலங்கு மருத்துவ விஞ்ஞானம், 04. விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும், 05. விவசாயம், 06.உணவு விஞ்ஞானமும் போசாக்கும், 07. உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், 08. ஆயுர்வேதம், 09. யுனானி, 10. சித்தவைத்தியம், 11. உயிரியல் விஞ்ஞானம், 12. பிரயோக விஞ்ஞானங்கள், 13.சுகாதார விருத்தி, 14.தாதியியல், 15.மருந்தகவியல், 16.மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், 17.ஊடுகதிர் படமெடுப்பு, 18.இயன்மருத்துவம், 19.மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும், 20.மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானம், 21.சூழல் பேணலும் முகாமைத்துவமும், 22.விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும், 23.உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும், 24.விவசாயவள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும்,25.விவசாய வியாபார முகாமைத்துவம், 26.பசுமைத் தொழில் நுட்பம், 27.விலங்கு விஞ்ஞானம், 28.ஏற்று மதி விவசாயம், 29.நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம்.

**இந்தத் துறைக்கான பொதுக் கற்கைகள்**

01.சட்டம், முகாமைத்துவக் கற்கைகள், 03. கட்டடக்கலை, 04.வடிவமைப்பு, 05.நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி விருத்தியும், 06.தகவல் தொழில்நுட்பம், 07.பட்டினமும் நாடும் திட்டமிடல், 08.முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும், 09.சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும், 10.தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும், 11.தொழில் முயற்சியும் முகாமைத்துவமும், 12.விஞ்ஞானத் தொழில்நுட்பம், 13. கணனி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், 14. தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், 15. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், 16. கனிப்பொருள் வளங்களும் தொழில் நுட்பமும், 17. முகாமைத்துவமும் தகவல் தொழில் நுட்பமும்(SEUSL), 18. உடற்றொழில் கல்வி, 19. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும், 20. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும், 21. விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம், 22. பனைஇனத்தாவரம் மற்றும் இறப்பர்ப்பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், 23. தகவல் தொழில் நுட்பமும் முகாமைத்துவமும், 24. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும், 25. தகவல் முறைமை, 26. நிலத்தோற்றக் கட்டடக்கலை, 27.மொழிபெயர்ப்புக் கற்கைகள், 28. திரைப்படமும் தொலைக்காட்சிக் கற்கைகள், 29. செயற்திட்ட முகாமைத்துவம், 30. உணவு வியாபார முகாமைத்துவம், 31. கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம்



**பௌதிகவியல்**

01. பொறியியல், 02.பொறியியல்(சினி), 03.பொறியியல்(TM), 04.பௌதிக விஞ்ஞானம், 05. கணனி விஞ்ஞானம், 06.பிரயோக விஞ்ஞானங்கள், 07. போக்குவரத்தும் சேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும், 08. கைத்தொழில் புள்ளிவிவரவியலும் கணிதவியலும் நிதியும், 09. புள்ளிவிவரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும், 10. கணக்கிடலும் தகவல்முறைமைகளும், 11. பௌதிக விஞ்ஞானம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

**இந்தத் துறைக்கான பொதுக்கற்கைகள்**

01. இயன்மருத்துவம், 02. மென்பொருள் பொறியியல், 03.சட்டம், 04.முகாமைத்துவக் கற்கைகள்(TV), 05.கட்டடக் கலை, 06. வடிவமைப்பு, 07. நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும், 08. தகவல் தொழில் நுட்பம், 09.பட்டினமும் நாடும் திட்டமிடல், 10.முகாமைத்து வமும் தொழில் நுட்பமும், 11. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும், 12. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும், 13. வசதிகள் முகாமைதுவம், 14. கணக்கிடலும் முகாமைத்துவமும், 15.முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்(SEUSL), 16. தேயிலைத் தொழில் நுட்பமும் பெறுமதி சேயர்ப்பும், 17. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், 18. கணிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும், 19. உடற்றொழில் கல்வி, 20. விளை யாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும், 21. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானம், 22. விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம், 23. பனை இனத் தாவரம் மற்றும் இறப்பர்ப்பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், 24. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத் துவமும், 25. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத் துவமும், 26. தகவல் முறைமைகள், 27. நிலத்தோற்றக் கட்டடக் கலை, 28. மொழிபெயர்ப்புக் கற்கைகள், 29. திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகளும், 30. செயற்திட்ட முகாமைத்துவம், 31. உணவு வியாபார முகா மைத்துவம், 32. கடல்சார் மற் றும் நன்னீர் விஞ் ஞானம், 33.விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், 34. கணிய அளவையியல், 35.அளவையியல் விஞ்ஞானம், 36.கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், 37, தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்.

பொறியியல் தொழில்நுட்பம் (ET)
பொறியியல்தொழில்நுட்பமாணி (BET)

01. சக்தி மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பம்
02. மெகாடிரோனிக் தொழில்நுட்பம்
03. நிர்மாணத்துறை கட்டடச் சேவைகள் தொழில்நுட்பம்
04. தோல் தொழில்நுட்பம்

**இந்தத் துறைக்கான பொதுக் கற்கைகள்**

01. முகாமைத்துவக் கற்கைகள்(TV), 02. தகவல் தொழில் நுட்பம், 03.சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும், 04. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்(ICT), 05. உடற்றொழில்கல்வி, 06. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்,07. வடிவமைப்பு, 08. நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும், 09.கணக்கிடலும் முகாமைத்துவமும், 10. தொழில் முயற்சியும் முகாமைத்துவமும், 11. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், 12.முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL), 13. விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம், 14. தகவல்தொழில் நுட்பமும் முகாமைத்துவமும், 15. மொழிபெயர்ப்புக் கற்கைகள், 16. திரைப்படமும் தொலைக்காட்சிக் கற்கைகள், 17.செயற்திட்ட முகாமைத்துவம், 18. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்(TESL).

(தொடரும்)

கட்டுரையாளர் : ஆசிரியர்,
வழிகாட்டல் ஆலோசனை,
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*




"எங்கள் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம்" என்று அன்னை தெரேசா அடிக்கடி சொல்லும் போது அவருடைய முகத்திலும் மகிழ்ச்சியான ரேகைகள் தெரியும். "எங்களுக்கிடையே அதிக நெருக்கம் இருந்தது. குறிப்பாக எங்கள் தந்தையின் மறைவு எங்களுக்கிடையேயுள்ள ஒன்றிப்பில் மேலும் பசை தடவி இறுக்கமாக ஒட்ட வைத்துவிட்டது" இயேசுவின் திரு இருதயப் பள்ளியில் எங்களுடைய அரிச்சுவடியும், ஆரம்பக் கல்வியும் நிறைவடைந்தது. பின்னர் அரசுப் பள்ளிக்குச் சென்றோம். அங்கே செர் போகுரோவாசிய மொழி கட்டாய பாடமாக இருந்தது. எனினும் மறைக்கல்வி வரவர வலுப் பெற்றது. வீட்டிலும் பங்கிலும் இறைவனையும் மறையையும் பற்றிய கல்வி அளிக்கப்பட்டது. தன் குடும்பத்தைப் பற்றி அன்னை தெரேசா அதிகம் பேசமாட்டார். அப்படிப் பேசிய 'கொஞ்ச நஞ்ச' நேரங்களில் "எனக்கும் அன்னைக்குமிடையே சொல்லமுடியாத நெருக்கம் இருந்தது". "என் தாய் புனிதை" என்று கூறுவார். இளம் ஆஞ்ஞேஸ் மீது அவளுடைய அன்னை ஏற்படுத்திய தாக்கம் வெகு தொலைவில் அவளுடன் இருந்து அதிக விளைச்சலைக் கொடுத்தது. பிறந்த மறுநாளே இந்தக் குழந்தைக்குத் திருமுழுக்கு அளிக்கப்பட்டது. இறைவனுடன் கொண்டிருந்த படிப்பில் அதிக இறுக்கத்தை ஏற்படுத்தியது. அவருடைய அன்னை ஏதோ பொத்தாம் பொதுவான சமயவாதியல்ல. உண்மையான இறைபற்றுடையவர். ஆழமான விசுவாசத்தினால் தன் சமயக் கடமைகளை முழு அக்கறையுடன் செய்து வந்தவர். இத்தகைய ஓர் இறைப்பற்றினால் தேவை நாடி தன் கதவைத் தட்டி வந்த எவரையும் வெறுங்கையோடு அனுப்பிய தில்லை. கதவைத் தட்டி உணவோ, புகலிடமோ, உடையோ அல்லது பணமோ எதைக் கேட்டாலும் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து அனுப்பும் அவளவுக்கு அன்புணர்வு உடையவர். "எங்கள் அன்னை இறைவனை நேசிப்பது எப்படியென்றும் பிறரை அன்பு செய்வது எப்படியென்றும் எங்களுக்குப் பாடல் சொல்லிக் கொடுத்தார்" என்று அன்னை தெரேசா தன் தாயைப் பற்றிச் சாட்சியம் சொன்னார்.

*(அடுத்த சனிக்கிழமை தொடரும்)*



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# பேராசையால் ஏற்பட்ட விபரீதம்

அந்த இடையன் காட்டில் ஆதரவற்றுக் கிடந்த ஓர் ஓநாய்க் குட்டியை வீட்டுக்கு எடுத்து வந்து வளர்த்தான்.

ஓநாய்க்குட்டி வளர்ந்து பெரிய ஓநாயாக ஆனதும் இடையன் அதற்கு மற்றவர்களின் ஆட்டு மந்தையிலிருந்து ஆடுகளைத் திருடிக்கொண்டு வருவதற்குக் கற்றுக் கொடுத்தான்.

இடையனிடமும் ஓர் ஆட்டு மந்தை இருந்தது. ஓநாய் இரவு நேரத்தில் அண்டை அயலில் வசிக்கும் இடையர்களின் வீடுகளுக்குச்சென்று அவர்களின் ஆடுகளில் ஒன்றிரண்டை உயிருக்கு ஆபத்தில்லாமல் கொண்டு வந்து விடும்.

அவ்வாறு ஓநாய் கொண்டு வரும் ஆடுகளைத் தனது மந்தையோடு அந்த இடையன் சேர்த்துக் கொள்வான்.

ஓநாய் திருடிக் கொண்டு வரும் ஆடுகளில் ஒன்றை அதற்கே தின்னக் கொடுத்தும் விடுவான்.

தங்கள் மந்தையிலிருந்து அடிக்கடி ஆடுகள் காணாமற் போவதைக் கண்ட இடையர்கள் தமது ஆடுகளுக்குப் பலமான கட்டுக் காவல் போட்டு விட்டனர்.

அதனால் இடையனுடைய ஓநாயினால் தொடர்ந்து ஆடுகளைத் திருடிவர இயலவில்லை.

ஓநாய் முன்போல ஆடுகளைத் திருடி வராததைக் கண்ட இடையன் ஓநாயைக் கவனத்துடன் போஷிப்பதை விட்டுவிட்டான்.

பல நாள்கள் பட்டினியும் பசியுமாய்க் கிடக்கவேண்டியிருந்த ஓநாய் இனியும் சும்மா இருந்து பயனில்லை என்று தன்னை வளர்த்த இடையனின்ஆட்டு மந்தைகளிலிருந்த ஆடுகளையே நாள்தோறும் தின்று பசியாறத் தொடங்கியது.

தன் மந்தையிலிருந்த ஆடுகள் வேகமாகக் குறைந்து வருவதைக் கண்ட இடையன் ஒரு நாள் இரவு மறைந்திருந்து கவனித்தான்.

தான் வளர்த்த ஓநாயே தன் ஆடுகளைத் தின்று அழிப்பதைக் கண்ட இடையன் அதைப் பிடித்து நையப்புடைத்துக் காட்டுக்குள் விரட்டிவிட்டான்.

காட்டுக்குள் ஓட்டப்பட்ட ஓநாய் காட்டில் இருந்து பழகப்படாததால் அங்கே வேட்டையாடிப் பிழைக்க அதனால் இயலவில்லை. பகல் முழுவதும் காட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் ஓநாய், இரவில் வெளிப்பட்டு தன்னை வளர்த்த இடையனின் வீட்டுக்கே சென்று ஆடுகளை ஒவ்வொன்றாகப் பிடித்துத் தின்னுவதை வழக்கமாகக் கொண்டு விட்டது.



தனது திருட்டு வேலையை ஓநாய் சாமர்த்தியமாகச் செய்து வந்ததால் இடையனால் அதைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. கண்டு பிடித்தாலும் அவனிடம் பிடிபடாமல் ஓநாய் காட்டுக்கு ஓடிப் போய் விடும்.

தான் வளர்த்த ஓநாய் தன்மந்தைஆடுகளைத் தின்று அழிப்பதை இடையனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

பேராசை காரணமாக அவன் ஓநாய்க்குக் கற்றுக் கொடுத்த திருட்டுத் தொழில் அவன்மந்தைக்கே நஷ்டத்தை ஏற்படுத்தத் தொடங்கி விட்டது.

கடைசியில்அவனுடையபேராசை காரணமாக அவனுடைய மந்தையிலிருந்த ஆடுகள் ஒன்று கூட மிச்சப்படாமல் அழிந்து விட்டன.



# வரலாற்றில் இன்றைய தினம்

1264 - ஜரிஷ் சட்டப்பிரமாணத்துக்கமைய அறியப்பட்ட முதலாவது அயர்லாந்து நாடாளுமன்றக் கூட்டம் களில் டெமோட் இல் கூட்டியது.

1429 - ஜோன் ஒப் ஆர்க் தலைமையிலான பிரான்சியப் படைகள் சேர்ஜோன் பாஸ்றலோப் தலைமையிலான பிரதான ஆங்கிலப் படையை, பட்டே போரில் தோற்கடித்தது. இது நூறு ஆண்டு காலப் போரின் போக்கை மாற்றியமைத்தது.

1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்; பிரித்தானியப் படைகள் பிலடெல்பியாவை கைவிட்டன.

1812 - அமெரிக்கக் காங்கிரஸ் பெரிய பிரித்தானியா கனடா மற்றும் அயர்லாந்து நாடுகள் மீது போர்ப் பிரகடனம் செய்தது.

1830 - அல்ஜீரியாவை பிரான்ஸ் ஆக்கிரமித்தது.

1887 - ஜேர்மனி மற்றும் ரஷ்யா நாடுகளுக்கு இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

1900 - சீனப் பேரரசி டொவாகர்லோங்யு. இராஜதந்திரிகளின் குடும்பம், உட்பட வெளிநாட்டவர் அனைவரையும் கொன்றுவிட உத்தரவிட்டார்.

1908 - கசாட்டு மாறு கப்பலில் இருந்து 781பேர் சன்தோஸில் தரையிறங்கியதை அடுத்து பிரேசிலுக்கான ஜப்பானிய குடியேற்றம் தொடங்கியது.

1953 - அமெரிக்க விமானப் படைக்குரிய விமானம் சி-124 ஜப்பான் தச்சிக்காவாவுக்கு அண்மையில் விபத்துக்குள்ளாகித் தீப்பற்றியதில் 129 பேர் உயிரிழந்தனர்.

1981 - லொக்ஹீட் எப்-117 நைற்ஹாங்க் விமானம் தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.

1984 - ஐக்கிய ராச்சியத்தில் இடம்பெற்ற சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது தென் யோக்ஷயர் ஓர் கிரீவில் 5000 பொலிஸாரும் அதே எண்ணிக்கை வரையிலான சுரங்கத் தொழிலாளர்களும் மோதிக் கொண்டனர்.

1990 - ஆயுதங்களைக் கைவிட்டால்தான் இனிப் புலிகளுடன் பேச்சு என நாடாளுமன்றில் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவிப்பு.

1992 - ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பான குற்றப் பத்திரப் பிரதிகள் கையளிக்கப்பட்டன.

- இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு தற்போது நல்ல வாய்ப்பு என நாடாளுமன்றில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

- வலி.வடக்கில் இருந்து 5196 குடும்பங்கள் இடம் பெயர்ந்தன.

2004 - நாட்டில் சமாதானமே அவசியத் தேவை என முத்தையா முரளிதரன் தெரிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவிலூர் கலா

**பெண்ணே நீயும் பொங்கியெழு
பெருமை சொல்லத் துணிந்தெழு
வன்முறைகள் உனை நெருங்குகையில்
வந்தீயாய் நீயும் மாறிவிடு.**

# பெண்ணே இனியாவது பொங்கியெழு

பெண்கள் வாழப் பிறந்தவர்கள் மட்டுமல்ல ஆளப்பிறந்தவர்களும்கூட. ஆனால் சுயமாக வாழமுடியாது தினம் தினம் செத்துக்கொண்டிருக்கிறார்கள். செல்லும் இடமெங்கும் வன்முறைகளும் கூடவே செல்கின்றன. பெண்ணுரிமை, பால்நிலை சமத்துவம் என ஏதேதோ சொல்கிறார்கள். பெண்களோ கண்ணீரோடுதான் வாழ்கிறார்கள். பெண்கள் மிகுந்த ஆத்மபலம் கொண்டவர்கள். வெற்றியை நோக்கிய இலக்கோடு தன்னம்பிக்கை துணைவரப் பயணம் செய்கிறார்கள். அடுக்களையைச் சுத்தம் பண்ணியவள் இன்று மானிட வாழ்வைச் சுத்தம்பண்ணிச் சாதிக்கவேண்டும் என்கிற வெறியோடு தொடர்ந்து போராடுகிறாள். தன் வாழ்வின் தடைக்கற்களை சாமர்த்தியம், சமயோசிதம், சாதுரியம் என்னும் முக்குணங்களால் மிக எளிதாக அகற்றி சிகரத்தில் கால் பதிக்கிறாள். ஆனாலும் பாலியல் வன்முறை என்னும் அம்பு அவளை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. பாலியல் வன்முறை பாவையரைத் தொடர்ந்து வதை செய்கிறது. அது அவர்களது அதிவேக வெற்றிப்பயணத்தில் பெரும் தடைக்கல்லாக உள்ளது. ஆண்களைவிட பெண்களே எந்த ஒரு நிர்வாகத்தையும் நிர்வகிக்கும் ஆளுமை கொண்டவர்கள். எதையும் பொறுமையோடு நிறைவாகச் செய்து முடிப்பார்கள். பாலியல் வன்முறை ஒன்றால் பெண்கள் அச்ச உணர்வோடு மனமுடைந்து வாழ்கிறார்கள். பாலியல் வன்முறை சமுதாயத்தில் நிலை கொண்டு விட்டது. எம்மிடையே கடந்த நாள்களில் சாதாரண பார்வை தொடுகையில் தொடங்கி படுகொலைகளை உள்ளடக்கி கொடூரமான பாலியல் வன்முறைகள் நடந்தேறியுள்ளன. இவற்றுக்கெல்லாம் கைது ஒன்றே இதுவரை தண்டனையாக உள்ளது. இன்னும் வெளிவராத ஏராளமான பாலியல் வன்முறைகள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்தோனேசியாவில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கான 14 வருடச் சிறைத் தண்டனை, சாவுத் தண்டனையாக மாற்றம் பெற்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எமது நாடும் கட்டாயமாகச் சட்டத்தைத் தூசு தட்டியாக வேண்டும்.

பாலியல் வன்முறைகளுக்கு எமது வாழ்வியல் நடைமுறைகளே காரணம். தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை எல்லையை மீறியுள்ளது. வேற்றுக் கலாசாரத் திணிப்பு, ஆடம்பர மோகம், மெகாத் தொடர்கள் என்பவை முக்கிய காரணிகளாகின்றன. தொலைக்காட்சி சிறந்ததொரு பல்கலைக் கழகமாக இன்று செயற்படுகிறது. அலங்கோல வாழ்வுக்கான அத்தனை கற்பித்தல்களும் வழிகாட்டல்களும் மெகாத் தொடர்களிலேயே உள்ளன. இருதார திருமணம், கற்பழிப்பு, ஆபாச முத்தக் காட்சிகள், பழிவாங்கல், களவு, கொள்ளை, பெண்ணடிமை என்பனவெல்லாம் அப்பட்டமாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஒரு பெண் தாயாக, தாதியாக, மந்திரியாக, தோழியாக வாழ்வில் பாத்திரமேற்கிறாள். ஆனால் மெகாத் தொடர்களில் இவற்றோடு சூத்திரதாரியாக, தாலியைச் சூறையாடுபவளாக, கொள்ளைக்காரியாக, ஆபாசத்தைத் தூண்டுபவளாக, குடும்பத்தை பிளவுபடுத்துபவளாக, பாம்பாக எனப் பல்வேறு இழிநிலைப் பாத்திரங்களில் நடிக்கிறாள். பணத்தை வசூலிப்பதற்காகத் தயாரிக்கப்படும் பொழுது போக்குக்கான இந்த மெகாத் தொடர்களை பெண்களே விரும்பிப் பார்க்கின்றனர். பெண்ணடிமை இல்லாத தொடர்களே இல்லை.



ஆனால் இந்தத் தொடர்களுக்கு பெண்களாலேயே பெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகள் ஏராளமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியா, கலாசாரத்தை மறந்து தம்நாட்டுப் பெண்களை அரைகுறை ஆபாச உடைகளில் காட்சிப்படுத்துவது கொடுமையல்லவா? இவையெல்லாம் பாலியல் வன்முறைக்கான காத்திரமான காரணங்கள் ஆகும். எல்லாத் தொடர்களுமே முழுக்க முழுக்க பொழுது போக்கிற்காகவே தயாரிக்கப்படுகின்றன. அவையே வாழ்க்கையாகாது என்பதை எமது பெண்கள் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். எள்ளுக்காட்டில், வாழைத்தோட்டத்தில், பாழடைந்த வீட்டில், பணியிடங்களில், கல்வி நிலையங்களில், ஓடும் பஸ்ஸில் எங்கும் பாலியல் வன்முறை. பாலியல் அடிமைகளாகாத 19 பெண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் நடுவீதியில் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். எப்படிப் பெண்கள் வாழ்வது?

பெண்கள் உணவின்றியோ, உறக்கமின்றியோ வாழலாம். வன்முறைகள் மன உளைச்சல்களையும், வேதனைகளையும் மட்டுமல்ல வாழ்க்கையையே நரகமாக்கி விடுகிறது. ஆண்களைப்போல பெண்களும் சுயமாக வாழப் பிறந்தவர்கள். ஆண்கள் தமது பலவீனத்தை வன்முறைகளால் பெண்களை நிந்தை செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். பெண்ணின்றி குடும்பமோ, சமுதாயமோ உலகமோ ஏன் ஆண் கூட வாழ முடியாது. ஒவ்வொரு ஆணின் இயக்கசக்தி பெண். வேலை முடிந்து ஆண் வீடு நோக்கித் திரும்புவது ஒரு பெண்ணிடமே. பசித்தழும் குழந்தை பால் குடித்துப் பசியாறுவது தாயிடமே. பசி எடுக்கும் ஆண் அடுக்களை சென்று மனைவி சமைத்த உணவையே உண்கிறான். பெண்ணின் சக்தி ஆணைச் சரணடைய வைக்கின்றது. ஆணிண் பலவீனம் பெண்ணைப் பலவீனப்படுத்தலாமா?

அடுக்களை துடைப்பதும், அம்மி அரைப்பதும், படுக்கை விரிப்பதும், பாசத்தைப் பகிர்வதும், சலவைக் கல்லாய் அடி வாங்குவதுமா பெண்ணின் வேலை? ஆறிய தேநீருக்கும் அடிப்பானைச் சோற்றுக்கும் காத்திருந்து கண்ணீர் சிந்துவதா பெண்ணின் நிலை? வன்முறையில் வதங்கிப்போவதும் குறுகி நின்று குற்றுயிராவதுமா பெண் வாங்கி வந்த வரம்? இல்லை. பெண் தனிமனிதனின் சக்தி மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வணங்கிடும் ஆதி சக்தியவள். பாலியல் வன்முறையிலோ, குடும்ப வன்முறையிலோ அவளைக் கூறு போடுவதை நிறுத்துங்கள். எந்த வீட்டில் பெண் கௌரவமாக நடத்தப்படுகிறாளோ அங்கு தேவதைகள் குடியேறும் என்கிற சான்றோர் வாக்கிற்கமைய பெண்மை மதிக்கப்பட வேண்டும். பெண் விடுதலையின் பூபாளம் எங்கும் ஒலிக்க ஆண்கள் ஆண்களாக வாழவேண்டும். மானிட தர்மத்தை குடும்பங்களில் பெண்மையின் ஊடாக வளர்க்க வேண்டும். தம் இழி குணங்களைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். பறைசாற்றி நிற்கின்ற வன்முறைக் கலாசாரத்தை வன்முறை செய்ய ஒவ்வொரு பெண்ணும் துணிந்தெழ வேண்டும்.

ஆக பெண்களே உங்களது வாழ்க்கை உங்கள் கைகளில். வெறுமனே கடமைகளையும், பொறுப்புக்களையும் சிரமேற்கொண்டு மாடாய் உழைத்தது போதும். உங்கள் உரிமைகளை வென்றெடுக்க குடும்ப வன்முறை, பாலியல் வன்முறையில் இருந்து உங்களைக் காக்கப் புயலெனப் புறப்படுங்கள்.

# கொள்கைவெறி அழிவுக்கு காரணமாக அமையும்..! ஆக்கபூர்வமான நன்மையைத் தராது..!

அரச கொள்கை என்பது இலட்சிய நோக்கை உடையதாக இருக்க வேண்டும். அந்த நோக்கை அடைவதற்கான ஆத்மார்த்தமான முயற்சிகளை, முன்னகர்தல்களை வழங்குவதாக இருக்கவேண்டும். இலட்சியங்களை அடைவதற்கான செயல்நிலைகளில் மக்கள் கருத்தறிதலையும், அவர்களின் நலன் சார்ந்த கரிசனையையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நாட்டில் வாழ்கின்ற இனக் குழுமங்களின் சமத்துவத்தையும் அவற்றுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் பேணிப் பாதுகாத்து ஆட்சி அதிகாரம் செய்யவேண்டும். மாறாக சமத்துவம் என்பதில் சமனிலையற்ற தன்மைகளை ஏற்படுத்தக்கூடாது. திட்டமிட்ட முறையிலே ஓர் இனக் குழுமம் சார்ந்து அழிவுகளை அடிமைப்படுத்தித் திணித்து விட்டு அந்தக் குற்றங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் தங்களை மீளமைத்துக் கொள்ளவும் திட்டமிடக்கூடாது. ஒரு நாள் மனம்போன போக்கில் பண்டிதர்கள் சிலர் தங்களுக்குள் காரசாரமாக விவாதமொன்றை முடிவின்றிச் செய்து கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர், அவர்களுக்கொரு படிப்பினையைத் தரும் வகையில் பின்வரும் கதையைக் கூறினார். ஓர் அரசன் தன்னுடைய நாட்டை ஆட்சி செய்து வருகிறான். திடீரென எவரும் எதிர்பாராதவிதமாக பக்கத்து நாட்டு அரசன் படையெடுத்து வந்து நாட்டை முற்றுகையிடுகிறான். அரசனும் நாட்டிலுள்ளவர்களை அழைக்கிறான். பகைவர்களின் படை விரைந்து வந்து கொண்டிருக்கிறது. எப்படி அவர்களை எதிர்கொள்வது..? அவர்களைத் தடுத்து நிறுத்த நாம் என்ன செய்யலாம்..? என்பதாக ஆலோசனை கேட்கிறான்.

அங்கு சூழமியிருந்த பொறியியல் வல்லுநர்களோ தலைநகரைச் சுற்றிலும் பெரிய மண் அணை ஒன்றை எழுப்ப வேண்டும். பின்னர் அதைச் சுற்றியதாக அகழி ஒன்றை அமைக்க வேண்டும் என்றார்கள்.

தச்சுத் தொழில் செய்பவர்களோ மண் சுவர் அமைப்பதென்பது பயனற்றது. மழை வந்தால் அது கரைந்து போய்விடும். அதைவிடுத்து மரத்தினாலான சுவர் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கூறினார்கள். இதைக் கேட்ட கொல்லர்களோ நீங்கள் சொல்லும் திட்டங்கள் எதுவுமே சரியில்லை என்றனர். இரும்புச்சுவரைப் போன்ற ஒரு பாதுகாப்பை வேறு எதனாலும் தரமுடியுமா..? இல்லை..இரும்பினால் தான் சுவரைக் கட்ட வேண்டும் என்று கூக்குரலிட்டனர். அப்போது அந்த இடம்நோக்கி வந்த சட்ட நிபுணர்களோ புதிய உத்தியைச் சொன்னார்கள். நாம் பகையரசனிடம் செல்வோம். நீங்கள் இப்படிப் பலவந்தமாக வருகை தந்து எங்கள் நாட்டின் மீது படையெடுப்பது முறையற்றது.சட்டத்திற்குப் புறம்பானது. எதையுமே சட்டப்பூர்வமாக அணுகுவதுதான் சிறப்பு. எனவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின்படி நீங்கள் நடந்து கொள்வது தான் நியாயமான செயற்பாடு என்று அவர்களுக்கு அறிவுரை சொல்லவேண்டும் என்று வாதிட்டார்கள். இறுதியும் அறுதியுமாக அரசவை அந்தணர்கள் அவ்விடம் வருகை தந்தார்கள். அது வரையில் ஆலோசனை கூறிய எல்லோரையும் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். நீங்கள் எல்லோரும் ஏன் இப்படிப் பைத்தியக்காரர்கள்போலப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இதனைத் தடுக்க வேண்டுமெனில் இந்த நாட்டில் முதலில் பெரிய யாகங்களைச் செய்ய வேண்டும். அதன் மூலம் தேவர்களை மகிழ்விக்க வேண்டும். அப்படிச் செய்து விட்டோமானால் எம்மை எவராலும் அசைத்துவிட முடியாது, வென்றுவிட முடியாது என்றுரைத்தார்கள்.

இப்படியே நாட்டைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கடமையை மறந்தார்கள். அதற்குப் பதில் வீண்வாக்கு வாதம் செய்வதிலும், தங்களுக்குள் சண்டையிடுவதிலும் காலத்தை வீணடித்துக்கொண்டிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தி பகை அரசனோ புயல்போலப் புறப்பட்டான். தன் படைகளுடன் தலைநகரத்திற்குள் புகுந்தான். எந்த எதிர்ப்பும் இன் மிகச் சுலபமாகத் தலைநகரைக் கைப்பற்றினான். பின் அதை இடித்துத் தரைமட்டமாக்கியும் சென்றான். நம்ப பலரும் இப்படித்தான் நடந்து கொள்கிறோம் என்று சுவா விவேகானந்தரும் கதையைச் சொல்லி முடித்தார்.

பிரச்சினை என்று வந்துவிட்டால், அதைத் தீர்ப்பதா சொல்லப்பட்ட ஆக்கபூர்வமான வழியைப் பின்பற்றி, செ படுத்தி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதுவே லிணக்கமான அறிவுடைமையாகும். இதற்கு மாறாகப் புரி கொள்ளாமல் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோது இடமில்லை என்று விவாதம் செய்வது திக்குத் தெரிய காட்டில் நுழைவது போன்றது. இவ்வாறான கொள் வெறி அழிவுக்கு காரணமாக அமையுமே தவிர, இன சமத்துவம் தொடர்பிலான எந்தவொரு ஆக்கபூர்வமான நன்மையையும் தராது.. புரிந்து நடந்து கொள்ள வேண்டும்...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | 4 | | |
| 4 | | 1 | | | | | 8 | 3 |
| | 8 | | 5 | | | 1 | | 6 |
| 5 | | | | | | 8 | 7 | |
| 2 | 1 | | | | | | 5 | 4 |
| | 7 | 4 | | | | | | 2 |
| 1 | | 5 | | | 9 | | 3 | |
| 6 | 9 | | | | | 7 | | 5 |
| | | 2 | 8 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 3 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 4 | 8 | 2 | 3 | 5 | 9 |
| 7 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதேவேலை. சுடோக்குஎன்பதுஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






**அவர்:** தினமும் நாய் துரத்திக்கிட்டு வருகிற மாதிரி கனவு வருகிதெண்டு சொல்லி டாக்டர்கிட்டே போனீங்களே.. . என்ன சொன்னார் ?

**இவர்:** ரெண்டு மூன்று கல்லைக் கொடுத்து கையில வச்சிக்கிட்டே தூங்கச் சொன்னாரு !

SaThiYa ..

நல்ல நண்பர்கள் எம்மை விட்டு விலகுகிறார்கள் என்றால் அவர்களிடம் குறை தேடாதீர்கள். குறைகள் எம்மிடமே இருக்கலாம்.

57 54

# குற்றம் 23 படத்தில் அபிநயா

'ஈரம்', 'ஆறாது சினம்' படங்களுக்குப் பிறகு அறிவழகன் இயக்கும் படம், 'குற்றம் 23'. இதற்கு விஷால் சந்திரசேகர் இசை அமைக்கிறார். அருண் விஜய் ஹீரோவாக நடிக்கிறார். மகிமா ஹீரோயின். மருத்துவத்துறை பின்னணியில் நடக்கும் த்ரில்லர் கதையான இதில், 'நாடோடிகள்' அபிநயாவும் இணைந்திருக்கிறார். 'முதன் முறையாக அருண் விஜய் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். 90 சதவீத படப்பிடிப்பு முடிந்தது. அண்மையில் வெளியான இப்படத்தின் முன்னோட்டத்துக்கு அதிக வரவேற்பு கிடைத்து இருக்கிறது' என்று படக் குழுவினர் தெரிவித்தனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அரசு சார்ந்த உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணி புரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** பேச்சில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். வருமானம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது அவசியம். மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது அவசியம்.

**சிங்கம்:** புதிய நண்பர்களின் அறிமுகத்தால், நன்மை காண்பீர்கள். தொழிலில் அதிக வளர்ச்சி உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள், புதிய பதவி பெற அனுகூலம் உண்டு.

**கன்னி:** முக்கிய பணிகளைப் பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராகவே இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழிலில் அபிவிருத்தி செய்ய, தாராள பணவசதி கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** நிதானமுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமார். பண விடயத்தில் விழிப்புடன் செயற்படுவது அவசியம். சீரான ஓய்வு உடல்நலனைப் பாதுகாக்கும்.

**தனுசு:** திறமையைப் வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் விற்பனை உயர்வால் வருமானம் உயரும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை பிறக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். நிலுவைப் பணம் வசூலாகும். விலகிச் சென்ற உறவினர் சொந்தம் கொள்வர்.

**கும்பம்:** பிறருக்கு உதவி செய்ய முயல்வீர்கள். அதிக உழைப்பு தொழிலில், உற்பத்தி, விற்பனையைச் சீராக்கும். வருமானத்தை விட, குடும்பச் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மீனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது. வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையலறைத் தொட்டி



### இது புதுசு

கண்ணாடி நிலையுடன் கழுவும் கோப்பை அறிமுகமாகியுள்ளது. முழுவதும் கிரனைட் மாபிள்ால் உருவான வடிவமாகும். இது 125,000 இருந்து 130,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

## நாளை ஆனி-05


ஞாயிற்றுக்கிழமை - 19.06.2016
திதி: சதுர்த்தசி பி.ப.04.14
நட்சத்திரம்: கேட்டை முழுவதும்
ராகுகாலம்: 04.24-05.54 வரை
சுபநேரம்: 08.54-10.24 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 900 | 800 |
| நண்டு | 250 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 550 | 500 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 700 | 500 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 450 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 50 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 600 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 450 | 400 | 350 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 300 | 400 |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 300 | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | – | 370 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 100 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 250 | 150 | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 250 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 250 | – | – |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 500 | 100 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | – | – |

## முருங்கைக்கீரை வடை



### தேவையானவை

சுத்தம் செய்த முருங்கைக்கீரை - 1 பெரிய கப்
கடலைப் பருப்பு - 1 பெரிய கப்
இஞ்சி, உள்ளி (பொடித்தது) - சிறிது
நறுக்கிய பச்சை மிளகாய் - சிறிது
காய்ந்த மிளகாய் - 4
சோம்பு - தேவைக்கு
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1
உப்பு - தேவையான அளவு
பல் பல்லாக வெட்டிய தேங்காய் - சிறிது
எண்ணெய் - பொரிப்பதற்கு.

### செய்முறை

கடலைப் பருப்பை ஒரு மணி நேரம் ஊறவைத்து காய்ந்த மிளகாய், சோம்பு சேர்த்து கரகரப்பாக, கெட்டியாக அரைக்கவும். அத்துடன் வெங்காயம், இஞ்சி, பூண்டு, உப்பு, முருங்கைக்கீரை, பச்சை மிளகாய், தேங்காய் சேர்த்துக் கலந்து வடைகளாகத் தட்டி, எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 160 | 100 | 120 | – | 60 |
| கத்தரி | 160 | 140 | 160 | 200 | 200 | 200 | – | 80 |
| கரட் | 200 | 140 | 250 | 120 | 240 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | – | 40 |
| பயிற்றை | 180 | 160 | 160 | 180 | 180 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 220 | 250 | 240 | 220 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 110 | 120 | 160 | 100 | – | – | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 180 | 140 | 200 | – | 130 |
| பூசணி | 70 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 300 | 170 | 200 | 240 | 200 | 200 | – | 150 |
| வாழைக்காய் | 30 | 80 | 60 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 30 | 50 | 50 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 600 | 600 | 600 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 120 | 100 | 140 | 120 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 180 | 180 | 180 | 220 | – | 140 |
| வெண்டி | 140 | 100 | 160 | 140 | 140 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 180 | 180–240 | 240 | 200 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 160–240 | 240 | 200 | 250 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 30–35 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 100 | 120 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 250 | 250 | 200 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 220 | 240 | 240 | 350 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 160 | – | 200 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 550 | 240 | 350 | 300 | – | 400 |

## புடைவைகட்டும் பெண்களுக்கு...

* புடைவை இளவண்ணமுடையதாக இருந்தால், பிளவுஸ் சற்று அடர் வண்ணம் உடையதாக இருப்பது நல்லது. புடைவையின் வண்ணம் அடர்த்தியானதாக இருந்தால், பிளவுஸ் மெல்லிய வண்ணத்தில் இருப்பது நல்லது. ஒரே நிறத்தில் புடைவை, பிளவுஸ் என்று பார்த்து வாங்குவதை விட, இவ்வாறு அணிவது அழகை மேம்படுத்திக் காட்டும்.
* கோயில், கடற்கரை போன்ற பொது இடங்களுக்குச் செல்லும்போது அடர்வண்ணம் கொண்ட 'கொட்டன்' புடைவைகள் ஏற்றவை.
* உயரமாக உள்ள பெண்கள், தங்கள் உயரத்தைக் குறைத்துக் காட்ட குறுக்குக்கோடு போட்ட புடைவைகளைத் தேர்ந்தெடுத்து அணிய வேண்டும்.
* குள்ளமான பெண்கள், உயரத்தைச் சற்று அதிகரித்துக் காட்ட நேர்வாக்கில் கோடு போட்ட புடைவைகளை அணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### வருகிறது அப்பிள் வோச் 2

அப்பிள் நிறுவனம் தனது புதிய அப்பிள் வோர்ச் 7 சாதனத்தை ஐபோர்ன்7 வெளியிடும் அதே நேரத்தில் வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அப்பிள் நிறுவனம் வெளியிடும் ஐபோர்ன்7 மற்றும் ஐபோர்ன்7 பிளஸ் போன்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தனது புதிய அப்பிள் வோர்ச் 2 சாதனத்தையும் ஐபோர்ன்7 வெளியிடும் நேரத்திலே அறிமுகப்படுத்த அப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

வெளிவரவிருக்கும் அப்பிள் வோச் 7 இன் எதிர்பார்ப்பு நினைத்ததை விட அதிமாக இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், மாதம் 2 மில்லியன் அப்பிள் வோச் 7 ஐ தயாரித்து அனுப்பவும் திட்டமிட்டுள்ளதாக அந்நிறுவனத்தில் இருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதேபோல் அப்பிள் வோச் இன் விற்பனை மந்தமாகவே இருக்கும் நிலையில், வெளிவரவிருக்கும் அப்பிள் வோச் 2 தற்போது இருப்பதை விட சிறப்பானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அப்பிள் வோச் 2இன் வடிவமைப்பில் எந்த ஒரு மாற்றமும் இல்லை என்றும், புதிய வன்பொருள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### கொப்பியடித்ததா அப்பிள்? பரபரப்பை கிளப்பும் சீன நிறுவனம்

சீனாவின் 100சி என்ற செல்போன் நிறுவனம், அவர்களின் வடிவமைப்பை அப்பிள் நிறுவனம் கொப்பியடித்து ஐபோன் 6 மற்றும் 6எஸ் பிளஸ் போனை வடிவமைத் துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது.

சீனாவில், கடந்த ஏப்ரல் மாதம் அப்பிளின் என் டியூன்ஸ் மூவிஸ் மற்றும் என் புக் ஸ்டோர் தடை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அப்பிள் உட்பட பல முன்னனி நிறுவன போன்களின் பிற சாதனங்களை போலியாக தயரிப்பதை சீன நிறுவனங்கள் வழக்கமாக வைத்துள்ளது உலகறிந்ததே.

எனினும் குறித்த விடயத்தில், the Beijing Intellectual Property Office, சீனாவில் அப்பிள் தனது போன்களின் விற்பனையை நிறுத்தும் படி உத்தரவிட்டு, 100சி நிறுவனத்திற்கு ஆதரவாக தீர்ப்பு அளித்துள்ளது.

குறித்த தீர்ப்பு அப்பிளின் மற்ற போன்களான ஐபோன் 6எஸ் மற்றும் 6எஸ் பிளஸின் விற்பனையை பாதிக்கும் என்பதால் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையிடு செய்ய அப்பிள் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அல்லது 100சி நிறுவனத்துடன் அப்பிள் நிறுவனம் ஒப்பந்தம் செய்ய முயற்சிக்கும் எனவும் கூறப்படுகிறது.



# டி.எவ்.சி.சி. வங்கி நிவாரணங்களுக்கு அப்பால் சென்று மீளமைப்புக்கு உதவும்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சலுகை அடிப்படையிலான தனிப்பட்ட மற்றும் வியாபாரக் கடன்களை டி.எப்..சிசி வங்கி வழங்க இருக்கிறது

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவும் வேலைத் திட்டம் ஒன்றை டி.எப்.சிசி வங்கி மேற்கொள்ள இருக்கிறது. நிவாரணம் வழங்கும் குறுகியகாலத் திட்டத்திற்கு அப்பால் சென்று பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சலுகை அடிப்படையிலான தனிப்பட்ட மற்றும் வியாபாரக் கடன்களை வழங்குவதன் மூலம் நீண்டகால மீளமைப்பு முயற்சிகளுக்கு உதவுவதில் வங்கி இப்பொழுது கவனம் செலுத்துகிறது.

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. அர்ஜுன் பெர்னாண்டோ இது பற்றிக் குறிப்பிடுகையில் சமீபத்திய வெள்ளப்பெருக்கினால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். தேசத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் கடந்த 60 ஆண்டுகளாகத் தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு வங்கி என்ற முறையில் நாம் இச் சந்தர்ப்பத்தில் தற்காலிக நிவாரண நடவடிக்கைகளுக்கு அப்பால் சென்று பாதிக்கப்பட்டவர்களின் மீளமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்குக் கைகொடுத்து உதவ விரும்புகிறோம். இலங்கை மக்கள் சுய முயற்சியினால் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும் எமது குறிக்கோள் நிறைவேறும் என்று தெரிவித்தார்.

DFCC BANK
Keep Growing

சம்பளம் பெறும் ஊழியர்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சேதமடைந்த தமது வீடுகள் மற்றும் சொத்துக்களை மீளக் கட்டியெழுப்ப தனிப்பட்ட கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வெள்ளத்தினால் அழிந்துபோன பாடப்புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வாங்குவதற்கும் அவர்களுக்குக் கடன் வழங்கப்படும். தொழில் நிறுவனங்கள் தொழிற்படு மூலதனத் தேவைக்காகவும் சேதமடைந்த சொத்துக்களுக்குப் பதிலாக புதிய சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் டி.எப்..சிசி வங்கி கடன் வழங்கும். இக்கடன்கள் அனைத்தும் மிகவும் குறைந்த வட்டி வீதங்களிலும் இலகுவான மீளளிப்பு நிபந்தனைகளின் பேரிலும் வழங்கப்படும்.

**வெள்ளப் பாதிப்பின் காரணமாக நிதியுதவி**

தனிநபர் களும் வியாபார உரிமையாளர்களும் மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு (011) 2350000 என்ற டி.எப்.சிசி வங்கி ஹொட்லைன் ஊடாகத் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது அருகிலுள்ள டி.எப்.சிசி வங்கி கிளைக்குச் செல்ல வேண்டும். நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் அதே சமயத்தில்ரூபவ் நிதி ரீதியாக அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கும் முயற்சிக்குத் தலைமைதாங்க டி.எப்.சிசி வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது. சகல பங்காளிகளுக்கும் தொடர்ச்சியான பெறுமதி ஆக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக புதுமையான மற்றும் விரிவான வங்கியியல் தீர்வுகளை வழங்குவதிலும் பொறுப்பு வாய்ந்த நிறுவனப் பிரஜையாகச் செயற்படுவதிலும் வங்கி ஈடுபட்டுள்ளது. சமூகத்தையும் சுற்றாடலையும் பேணிப் பாதுகாப்பதில் டி.எப்.சிசி யின் விழுமிய அமைப்பு ஆழ்ந்த அக்கறை காட்டுகின்றது. சகல மட்டங்களையும் சேர்ந்த ஊழியர்கள் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஊடாக அவ்வப் பிரதேச மக்களின் நலனுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள். மே மாத நடுப்பகுதியிலிருந்து பெய்த கடும் மழையைத் தொடர்ந்து நாடெங் கிலும் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்ற வங்கி நடவடிக்கை எடுத்தது. இப்பொழுது மக்களின் வழமையான வாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்த அது முக்கிய பங்களிப்புச் செய்கின்றது. நிதி ரீதியான சுயாதீனம்ரூபவ் பாதுகாப்பு மற்றும் மன நிம்மதியை மக்களுக்கு வழங்கி எதிர்காலம் குறித்த நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். (து)

**வணிகம்**

# சம்பத் முகாமைப் பணிப்பாளர் அரவிந்த பெரேராவுக்கு விருது

சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அரவிந்த பெரேராவுக்கு ஆசிய வங்கியாளர்கள் தலைமைத்துவ சாதனையாளர் விருது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2016 மே மாதம் 10ஆம் திகதி, துறு மெரியொட் ஹனாய், வியட்நாமில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வில் "பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமைத்துவச் சாதனையாளர் விருது 2016" வழங்கப்பட்டுள்ளது.



வங்கித் துறையில் நேர்மையான நிர்வாகம், தேசிய மதிப்பு மற்றும் வெற்றிகரமான உத்திகளை நோக்கிய அர்ப்பணிப்புடனான சேவை என்பவற்றுக்காக, சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அரவிந்த பெரேராவுக்கு இவ்விருது வழங்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டுள்ளதோடு, இந்த விருதானது அரவிந்த பெரேரா தகுந்த உத்திகளைக் கையாண்டு பெரும் சவால்களை எதிர்கொண்டு வெற்றிகரமான தீர்வுகளைப் பெற்றமை, பல்வேறுபட்ட வணிக மட்டங்களிலும் சிறப்பான சேவையை வெளிப்படுத்தியமை, அதன் மூலம் வங்கியின் உயர் வளர்ச்சிக்கு பங்களித்தமை போன்றவற்றையும் அங்கீகரிக்கின்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமைத்துவச் சாதனையாளர் விருது வழங்கல் நிகழ்வானது, மூன்று வருடங்களுக்கு ஒரு முறையே நடத்தப்படுகிறது. கடுமையான மதிப்பீட்டு செயன்முறைகள் காரணமாக நிதியியல் துறையில் பணியாற்றும் உயர் வங்கியாளர்களுக்கு கிடைக்கும் கடினமானதும் தனித்துவமானதுமான ஓர் உயர் விருதாக இது கருதப்படுகிறது. (து)

# 280,000 மெட்ரிக் தொன் கரும்பு அறுவடை




பெல்வத்த சீனி நிறுவனத்துக்கு இம்முறை இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் தொன் கரும்பு அறுவடை கிடைத்துள்ளது.

கடந்த சில காலமாக நாடு எதிர்கொண்டிருந்த சீரற்ற காலநிலை காரணமாக கரும்பு அறுவடை வீழ்ச்சியடைந்திருந்தது.

இந்த நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி கரும்பு அரைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். (து)

CSE
COLOMBO STOCK EXCHANGE

| 17/06/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| ASPI | 30.22 | [illegible] | 6,435.77 |
| S&P SL20 | 17.15 | [illegible] | 3,385.06 |
| வியாபாரப் புரள்வு | | 261,707,673 | 325,595,413 |
| உள்நாடு: கொள்வனவு | | 239,011,794 | 245,287,040 |
| விற்பனை | | 194,089,794 | 239,442,913 |
| வெளிநாடு: கொள்வனவு | | 22,695,878 | 80,308,373 |
| விற்பனை | | 67,617,879 | 86,152,500 |



பங்குச் சந்தை தகவல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 158 | 265,085 | 41,633,949.50 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 22.7 | 1,207,997 | 27,461,409.70 |
| கொமர்ஷியல் வங்கி | COMB.N | 127.5 | 130,991 | 16,640,224.60 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 215 | 64,340 | 13,831,919.00 |
| கொழும்பு போட் லாண்ட் | CFLB.N | 22.1 | 517,480 | 11,384,580.00 |
| எல் பி பினான்ஸ் | LFIN.N | 131.5 | 52,367 | 6,797,908.90 |
| சென்றல் பினான்ஸ் | CFIN.N | 230 | 29,145 | 6,704,388.50 |
| ரெக்ஸ்டைல் பெர்வெஷி | TJL.N | 37 | 151,749 | 5,548,375.60 |
| கார்கில்ஸ் | CARG.N | 154 | 34,609 | 5,329,769.00 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 42 | 111,837 | 4,697,686.00 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
சீ டி ஹோல்டிங்ஸ் (CTHR)- பங்கு ஒன்றிற்கு Rs. 2.80

கருத்தரங்கு - தற்போதைய பங்குச்சந்தை நிலவரம்
இன்று காலை 9.30 தொடக்கம் 12.30 வரை யாழ் கிளையில்.

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | 294 |
| [illegible] | 214 |
| [illegible] | 13.3964 |
| [illegible] | 1.4945 |
| [illegible] | 2.8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிகளைத்

வெடிப்புச் சம்பவத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு துரித உதவி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல், ஜனாதிபதி தலைமையில் நேற்றுப் பிற்பகல் அவரது செயலகத்தில் இடம்பெற்றது.

ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை முறைமைப்படுத்துவதற்கென சிறப்புக் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, அறிவியல் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

"ஒழுங்கான திட்டமிடலின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குறைவின்றி அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கே அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒரு சில அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அரங்கேற்றப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக இது முன்னெடுக்கப்படவில்லை. வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப் படும் 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் துரிதமாகவும் முறையாகவும் வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் வீடுகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்யும் பணிகளை துரிதப்படுத்தவேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்கு அரச மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருந்தால், பணிக் குழாத்தினரை உதவிக்கு அமர்த்தவும் அவர் அறிவுறுத்தினார். "இந்த நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தும்போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுற்றறிக்கைகளை ஒரு தடையாகக் கொள்ளவேண்டாம்" எனவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சலாவ நகரத்தை மீண்டும் கட்டியெழுப்பும்போது, முறையான ஒரு திட்டத்துக்கு அமைய அபிவிருத்தியடைந்த ஒரு நகரமாக கட்டியெழுப்பவேண்டும் என்றும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார்.
(த-வ-5)

## பிணக்குத்

களுக்கும் கடற்படையினருக்கும் இடையே கலந்துரையாடல் ஆரம்பமானது. அப்போது அங்கிருந்த ஊடகவியலாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பணித்தார்.

"ஊடகவியலாளர்களை வெளியேற்றி விட்டு இரகசியக் கலந்துரையாடல் தேவையில்லை. நாங்கள் 7 வருடங்களாக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஊடகங்கள் மூலம் வெளிவரவேண்டும். ஊடகங்களுக்கு அனுமதியில்லாத கலந்துரையாடல் தேவையில்லை" எனக்கூறி சங்கப் பிரதிநிதிகள் அங்கிருந்து வெளியேறினர். இதனால் கலந்துரையாடல் குழம்பிப் போனது.

நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் கடற் கரைப் பகுதியில் கரைவலை விரித்த வெளிமாவட்ட மீனவர்களுக்கும், அதே பகுதியில் இறால் பிடிப்பதற்காக வலை போட்ட உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. இதையடுத்து "கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் உள்ளூர் மீனவர்களின் வலைகளைப் பறிமுதல் செய்தனர்" என்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
(த-வ-4-ரி7)

## கொழும்பு

முறையில் வெளிநாட்டு நீதிபதிகளை நிராகரித்தமையினால் ஏற்படும் நம்பிக்கையற்ற தன்மை தொடர்பில் சர்வதேச சமூகம் கடுமையான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

லண்டனைத் தளமாகக் கொண்ட தமிழ் கார்டியன் ஆங்கில ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்ரீபன் ராப் முக்கியமாகத் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயல்முறை மெதுவாகவே முன்னெடுக்கப் படுகிறது. எனவே உலக அரங்கம் தொடர்ந்து அழுத்தங்களை வழங்க வேண்டும்.

இறுதிப் போரின்போது சர்வதேச சட்ட மீறல்கள் இடம்பெற்றமைக்கான தீவிர குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுக்கான ஆதாரங்களும் இருக்கின்றன. எனவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதற்கு செயல்முறை ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும். இந்தச் செயல்முறையைச் சர்வதேச சமூகம் உறுதிசெய்ய வேண்டும்.

இது தொடர்பில் இலங்கைக்கு வலுவான ஆலோசனைகளை வழங்குவதில் அமெரிக்கா செல்வாக்குச் செலுத்துக்கின்றது. இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கத்துவ நாடுகளின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் முக்கிய பகுதியாக உள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை இலங்கைத் தலைவர்கள் நிராகரிப்பது கவலை தரும் விடயம் - என்றார்.
(உ-வ)

## பொலிஸார்

பொலிஸாரின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர. நேற்று யாழ்ப்பாணம் வந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, வடக்கில் தேசிய பாதுகாப்பு, குற்றச்செயல்கள் - போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராய்ந்தார். இவை தொடர்பிலான பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்தும் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 9 மணியளவில் ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் மாலை 6 மணியளவில் நிறைவுக்கு வந்தது. வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தனது யாழ்ப்பாணப் பயணம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்ததாவது:

இதேபோன்றதொரு சந்திப்பு மத்திய மாகாணத்தில் சிவில் அமைப்புக்களுடன் நடத்தப்பட்டது. அது வெற்றியளித்துள்ளது. அவர்களின் கேள்விகள் மற்றும் பதில்களின் ஊடாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் இத்தகைய சந்திப்புக்களை ஏனைய மாகாணங்களிலும் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி வடக்கில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இங்குளள பொலிஸாரின் குறைநிறைகளையும் கேட்டறிந்துகொண்டேன். உடனடியாகத் தீர்க்க முடியாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கிராம மட்டங்களில் உள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் ஊடான நட்புறவை வளர்த்துக்கொள்வதன் மூலமும், குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அண்மைக் காலங்களில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் மற்றும் தடுத்து வைப்புகள் தொடர்பாக அறிவதற்கு மக்கள் ஆர்வமாக இருக்கின்றார்கள். இவ்வாறான நடவடிக்கைகளை துரிதப் படுத்தப்படவேண்டும்.

சிவில் சமூகத்தினர் தமது கருத்துக்களை எம்முடன் பகிர முடியும். எமது நடவடிக்கையை விளக்குவதுடன், அவர்களும் எமக்கு ஆலோசனை வழங்க முடியும்.

மத்திய மாகாணத்தில் 60 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. வடக்கு மாகாணத்தில் 42 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. பொலிஸாரின் பதவியுயர்வின் போது, அவர்களின் தகைமைகள், ஒழுக்கம் சார்பான நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும். பதவி உயர்வு தொடர்பான விளக்கங்கள், மக்கள் பொலிஸாருடன் நடந்து கொள்ளும் விதங்கள் என்பன அவதானிக்கப்படும் - என்றார்.

இதேவேளை, இன்று சிவில் சமூகத்தினரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும்போது, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவிலும் கலந்துரையாடல்கள் நடத்த இருக்கிறார் என்று தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பிலேயே நேற்றைய கலந்துரையாடலில் அதிகம் பேசப்பட்டதாக, அதில் கலந்து கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியள பொலிஸ் மா அதிபர் யாழ். நகர விடுதியில் ஒன்றில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள், உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடல் நடத்துவார்.
(த-வ-4,ரி4,106)


### மரண அறிவித்தல்

### திருமதி லியோனி மாகிறேற் சபீனா குலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஊழியர் - தொலைத்தொடர்புத் திணைக்களம் )



கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சமனகை, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லியோனி மாகிற்றேற் சபீனா குலசிங்கம் (L.M.S) 16.06.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மகளும் மரியாம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குலசிங்கத்தின் அன்பு மனைவியும் கிறிஸ்ரி ஞானேந்திரத்தின் (L.B.Finance மானிப்பாய்) அன்புத் தாயும் ஜஸ்ரின் பிறேமளாவின் (பண்டத் தரிப்பு) மாமியும் காலஞ்சென்றவர்களான லில்லி, கிளமன்ற், டெய்சி, அருட் சகோதரி அல்பீனா (திருக்குடும்பக் கன்னியர்மடம்) ஆகியோரின் சகோதரியும் நிர்மலி, நிறோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.06.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சமனகை,
பண்டத்தரிப்பு.

(J 2212)
(14,17,18)

தகவல்:
கிறிஸ்ரி (மகன்)

021 300 8274 / 077 413 0125

### மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை செல்வநாயகம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும், கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை செல்வநாயகம் நேற்று (17.06.2016) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் மரகதம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், யசோகன் (UK), உதயணன் (UK), சுதர்சன் (Australia), லவநிஷா (ஆசிரியை - யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி), சிவராம் (UK), சுகந்தன், லவதுஷா (ஆசிரியை - யா/ கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம்), லவப்பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகிர்தா (UK), அனுசியா (UK), கௌசல்யா (Australia), டேகீஸ்வரராசன் (பிரதம செயலாளர் அலுவலகம்- திட்டமிடல் வடமாகாணம்), கஜேந்திரா (UK), மதுசாந்தினி, கஜேந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்),ஆதீபன் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜேஸ்வரி, சாரதாதேவி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஹரிஸ், கீரன், உபாஸ், அபிநாஸ், சந்தோஸ்,சைலேஸ், சானுஜா, ஒளிநிலவன், காரூரன், அனன்ஜா, ஓவியா, சாதுரியன், ஆராதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, மனத்துறை லேன்,
கந்தர்மடம்.

(J/2202)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 0307


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்

களைத் தீர்த்து இறுதித் தீர்வொன்றுக்கு நாம் வரவேண்டும். உலக நாடுகள் எமக்கு ஆதரவு வழங்குகின்றன. புதிய அரசமைப்பை உருவாக்கி நிரந்தர அரசியல் தீர்வைக் காண்போமாயின், எமக்கு இதைவிட உதவிகளும், முதலீடுகளும் கிடைக்கும். அதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட்டால், மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வர். வேலைவாய்ப்பு அதிகரிக்கும். அனை வரது சட்டைப் பையிலும் பணம் இருக்கும். மத்தியதர வர்க் கத்தினர் அதிகரிப்பர். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த மீன் ஏற்றுமதித் தடை நேற்று (நேற்றுமுன்தினம்) நீக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு மீன்பிடித் தடை ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டது. நாம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்தத் தடையை நீக்குவதாக உறுதியளித்தோம். அதுபோலத் தடையை நீக்கியுள்ளோம்.

மீன்பிடித் தடை நீக்கத்தால், நாம் இனி ஐரோப்பியச் சந்தைகளுக்கு எமது மீன்களை ஏற்றுமதி செய்யலாம். மீனவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும். இல்லாது போயிருந்த அந்த உரிமையை நாம் மீனவர்களுக்கு மீண்டும் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

நவீன மீன்பிடிப் பயிற்சிகளைப் பெறுவதற்கும், எமது மீன்பிடித்துறையை நவீனமயப்படுத்தவும் நோர்வே அரசுடன் பேச்சு நடத்தப்படுகின்றது.

**ஜி.எஸ்.பி. பிளஸ்**

இல்லாதுபோன ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் பெறுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். இரு வாரங்களுக்குள் அதற்கான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தைப் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் கையளிக்கவேண்டும். அதைச் செய்துவிட்டால், இந்த வருட இறுதிக்குள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையும் எமக்குக் கிடைத்துவிடும். தேயிலை, கடல் உணவு வகைகள், ஆடை உள்ளிட்ட மேலும் பல ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பியச் சந்தையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இலங்கைக்கு வருவர்.

**இந்தியாவுடன் ஒப்பந்தம்**

இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தைக் (எட்கா) கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வருடத்துக்குள் இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட முடியும் என எதிர்பார்க்கின்றோம். அப்படிச் செய்துவிட்டால் இந்தியச் சந்தையும் எமக்குக் கிடைக்கும். மேலும், திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை அமைப்பதற்கும் பேச்சுகள் நடத்தப்படுகின்றன.

**சீனாவுடன் உடன்படிக்கை**

சீனாவுடனான வர்த்தக உடன்படிக்கைகள் அடுத்த வருடத்திற்குள் கைச்சாத்திடப்படும். துறைமுக நகர அபிவிருத்தித் திட்டமும் நிலையான உறுதிக்கு அல்லாமல், 99 வருட குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்படும். இது துறைமுக நகரமாக அல்லாமல் சிங்கப்பூர், டுபாய்க்கு இணையாக வர்த்தக நகரமாக மாற்றப்படும். இதற்கான ஒப்பந்தம் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதமளவில் கைச்சாத்திடப்படும். மேலும், அம்பாந்தோட்டை வர்த்தக வலய அபிவிருத்திக்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும்.

**ஜப்பானுடன் ஒப்பந்தம்**

கொழும்பில் வாகன நெரிசலைக் குறைப்பதற்கு எல்.ஆர்.டி. எனப்படும் மேலே செல்லும் அதிவேக நெடுஞ்சாலை ஊடான ரயில் சேவையை ஜப்பான் உதவியுடன் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

மெகா பொலிஸ் திட்டத்தின் கீழ் வெலிக்கடை சிறைச்சாலை களுத்துறைக்கு மாற்றப்படும். அதிவேக நெடுஞ்சாலைகள் வெலிக்கடை பகுதியூடாக அமைக்கப்படவுள்ளதால், அங்கு 40 முதல் 50 ஏக்கர் நிலப்பகுதி நகரமயமாக்கப்படவுள்ளது. இதனூடாக புதிய வர்த்தக நகரம் உருவாக்கப்படும்.

அடுத்த மாதம் சிங்கப்பூர் சென்று, பொருளாதார அபிவிருத்தி குறித்து அந்த நாட்டுடன் பேச்சு நடத்தவுள்ளேன் – என்றார். (த-வ-5)

**பிரத்தியேக வகுப்புக்கள்**

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தரம் 06-O/L கணிதம், வரலாறு வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
O/L Day Classes மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்

075 248 0158

**பெயர் மாற்றம்**

சிவநகர் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த வசந்தபாலசிங்கம் சுவேந்தினி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை வசந்தபாலசிங்கம் சுவேந்திரா என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என அறியத்தருகிறேன்.
(c 22040) (17,19)
வசந்தபாலசிங்கம் சுவேந்திரா

# நன்றி கூறுகின்றேன்

இருபாலை வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த கணேசலிங்கம் சதீஸ்கரன் ஆகிய நான் நேற்றுக் காலை சுன்னாகப் பகுதியில் தவறவிட்ட 20 000/= பணம் உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்சை நீதிமன்ற வீதி.மல்லாகத்தைச் சேர்ந்த கருணாநிதி வளர்மதி என்பவர் கண்டெடுத்து சுன்னாகப் பொலிசார் ஊடாக ½ மணி நேரத்துக்குள் என்னிடம் ஒப்படைத்த நல்லுள்ளம் படைத்த கருணாநிதி வளர்மதி அவர்களுக்கும் சுன்னாகப் பொலிசார் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

(2282) (12.16)
**க.சதீஸ்கரன்**

## துரையப்பா

மோடி காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்துகொள்வார்.

அத்துடன், 10 ஆயிரம் மாணவர்களின் பங்கேற்புடன் சர்வதேச யோகா தின நிகழ்வும் திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற இருக்கின்றது.

இந்திய அரசின் 145 மில்லியன் ரூபா நிதி உதவியில் துரையப்பா விளையாட்டரங்கு சீரமைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைவார். அங்கிருந்து மத்திய கல்லூரி மைதானத்தை உலங்குவானூர்தியில் வந்தடைவார். விளையாட்டரங்கைத் திறந்து வைத்த பின்னர் அவர் அங்கு உரையாற்றுவார். அவரது உரை வடக்கில் ஆர்வத்துடன் கூர்ந்து எதிர்நோக்கப்பட்டு வருகின்றது. வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியமர்வு மற்றும் போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணையாளர்களின் பங்களிப்பு போன்ற விடயங்களில் அவரது நிலைப்பாடு என்ன என்பதை அவர் வெளிப்படுத்துவார் என்று மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

வலிகாமம் வடக்கு மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதாக ஜனாதிபதி உறுதியளித்து 6 மாத கால அவகாசம் வழங்கியிருந்தார். கடந்த ஜனவரியில் இந்த வாக்குறுதி வழங்கப்பட்டது. இந்த மாதத்தில் அது நிறைவடைந்துள்ள நிலையில் தங்களை ஜனாதிபதி மீளக்குடியமர்த்துவாரா? என்று அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர்.

துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் நிகழ்வை முடித்துக்கொண்டு, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் செல்லும் ஜனாதிபதி, அங்கு மதிய போசனத்தை முடித்துக் கொண்டு அநுராதபுரம் செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5)

## வாக்காளருக்கு

2016ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த மே மாதம் 16ஆம் திகதி இந்த நடவடிக்கை ஆரம்பமானது. கிராம சேவையாளர்களால், வீடு வீடாக வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டன. கடந்த ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை மீளவும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிராம சேவையாளர்களால் சேகரிக்கப்பட்ட பி.சி. படிவங்கள் தற்போது மாவட்டச் செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காதவர்கள், யாழ். மாவட்டச் செயலகத் தேர்தல்கள் திணைக்களத்தின் 021 222 2655 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேபோன்று வாக்காளர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைப் படுத்திக் கிராம சேவையாளர் களிடம் கையளிக்காதவர்களும் மாவட்டச்செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

மேலும், வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தகுதியான அனைவரையும் உள்ளீர்ப்பதை நோக்காகக் கொண்டு தேர்தல்கள் திணைக்களத்தினால், முதன் முறையாகக் குறுந்தகவல் ஊடாக விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. சகல அலைபேசி வலையமைப்புகளின் பாவனையாளர்கள், சி.டி.எம்.ஏ. பாவனையாளர்கள் அனைவருக்கும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்தக் குறுந்தகவல் அனுப்பப்படவுள்ளது. (த-வ-5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**ரூபரஜனி சிறிராசா**
(பாப்பா)

அன்னை மடியில்
24.12.1959

இறைவன் அடியில்
19.05.2016

கடந்த 19.05.2016 இறைபதமடைந்த எங்கள் குலவிளக்கு ரூபரஜனி சிறிராசா (பாப்பா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.06.2016) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

19, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(Sm/2810) (11,17.18)
கணவர் - சிறிராசா

மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை
Manipay Memorial English School



**180ஆவது ஆண்டு விழாவின்**
நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வுகளில்
**ஞானசிகாமணி அன்னப்பா அவர்களின்**
**99ஆம் ஆண்டு பிறந்ததின நினைவாக**
**அன்னப்பா மண்டப**
**அன்னப்பா அறிவாலயம்**
**திறப்பு விழா**
**இன்று (18.06.2016 ) சனிக்கிழமை**
**முற்பகல் 10 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மானிப்பாய் மொமேறியல் ஆங்கில
பாடசாலைச் சமூகம்.
(Sm/2814) (11,17,18)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னராசா**
**குகனேஸ்வரன்**
**(தர்சன்)**

அன்னை மடியில்
03.04.1986

ஆண்டவன் அடியில்
30.06.2015

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றது மகனே!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்துவிட்டது
உற்றார் உறவினர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
சகோதரங்களின் இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

[illegible],
மாகியப்பிட்டி வடக்கு.
(c 2225) (17,19)
க.சின்னராசா
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – இந்தியா இடையே மிகச் சிறப்பான ஒத்துழைப்பு

## யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் தூதுவர் சின்ஹறா

யாழ்ப்பாணம், ஜுன் 18
இந்திய -இலங்கை அரசின் கூட்டு முயற்சியைப் பாராட்டுகிறேன். இரு நாடுகளிடமும் சிறந்த ஒத்துழைப்பு நிலவுகிறது. அதனால் இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் குறிப்பிட்ட காலத்தினுள் நிறைவு பெறுகிறது.
இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதர் வை.கே. சின்ஹறா தெரிவித்தார்.
யாழ். பொது நூலகத்தில் அமைக்கப்பட்ட இந்திய முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான கலாநிதி அப்துல் கலாமின் சிலை திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது இந்தியத் தூதுவர் தெரிவித்ததாவது:
அப்துல் கலாம் 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார். அது அவருடைய கடைசி வெளிநாட்டுப் பயணமாகும். அப்துல்கலாம் அனைவருக்கும் கல்வி வேண்டும் என விரும்பினார். கல்வி மூலம் மனிதனுக்கு அடிப்படை அறிவு கிடைக்கிறது என நம்பினார். அத்துடன் இளைஞர்களையும், சிறுவர்களையும் நேசித்தார். தற்போதைய இளைஞர்கள் அவரை மறக்கமாட்டார்கள் என நம்புகிறேன்.
யாழ்ப்பாண நூலகம் அழிவுக்குப் பின்னரும் மீளப் பயன்பாட்டில் இருப்பது மகிழ்ச்சியை அளிக்கின்றது. வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் நுவரெலியாவில் அமைக்க திட்டமிடப்பட்டது. வடக்கில் இந்திய வீட்டுத் திட்டம் முடிவுக்கு வந்துள்ளது. முல்லைத் தீவு மாவட்டத்துக்கு 150 படகுகள் வழங்கப் படவுள்ளன. அத்துடன் யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் கட்டுமானமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கு மக்களுக்கு நன்னீர் வழங்குவதற்காக 3 ஆயிரம் சாதனங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் குடும்பத் தலைவராக இயங்கும் பெண்களின் வாழ்வை முன்னேற்றுவதற்காக சுய தொழில் வேலைத்திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன என்றார்.
இதன்போது யாழ்.துணைத்தூதுவர் நட்ராஜ் ஆகியோரை வரவேற்பதற்கு யாரும் அற்று வாசலில் காத்திருந்ததனை அவதானித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வரவேற்றார். இதனை அவதானித்த ஏற்பாட்டாளர்கள் அதன்பின்னரே தூதுவரையும் முதலமைச்சரையும் கௌரவித்து அழைத்துச் சென்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (த-வ-4,ரி4,101)

## ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர் முறைப்பாடு

கொழும்பு, ஜுன் 18
ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சமூகத் தளத்தின் ஊடாக அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள சுகத் குமார லக்மான, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.
தம்மை மலேசியாவில் சட்ட ரீதியற்ற வகையில் கைதுசெய்து, தடுத்து வைத்திருந்தமைக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
முறைப்பாட்டை செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த லக்மான, ஏப்ரல் 22 ஆம் திகதி கைது செய்யப்பட்ட என்னை ஐந்து நாள்கள் மலேசியாவில் தடுத்து வைத்திருந்தனர் என்று குறிப்பிட்டார்.
இந்த நிலையில் எனது தொழிலும் இல்லாமல் போயுள்ளது. எனவே நீதி வேண்டியே மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்ததாக லக்மான மேலும் தெரிவித்தார்.
(த-ஐ-5)

## விபத்தில் படுகாயமடைந்த முதியவர் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், ஜுன் 18
மருதனார்மடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த முதியவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். அவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற டிப்பரை மாங்குளத்தில் மடக்கிப் பிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
உரும்பிராயிலிருந்து மருதனார் மடம் நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. அதில் குப்பிளான் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த அரியகுட்டி சண்முகநாதன் (வயது 64) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை அவரின் பின்புறமாகச் சென்ற டிப்பர் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு மோதியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சாரதி டிப்பருடன் அந்த இடத்திலிருந்து தப்பியோடிவிட்டார். ஆனால் பொதுமக்கள் அந்த வாகனத்தின் இலக்கத்தைக் குறித்து பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர்.
அந்த இலக்கத்தை வைத்து விசாரணை மெற்கொண்ட பொலிஸார், குறித்த வாகனம் மாங்குளத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது பொலிஸாரால் பிடிக்கப்பட்டு சாரதி கைது செய்யப்பட்டதோடு வாகனம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

## ஐ.நா.

தயாராக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜெனிவாவில் வைத்துக் கொழும்பு இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இறுதிப் போரின்போது நிகழ்ந்த மோசமான மனித உரிமை மீறல்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்டிருப்பது மிக முக்கியமானது. ஐ.நாவுடன் கொழும்பின் புதிய அரசு இணைந்து செயற்பட முன்வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.
30 வருடகாலப் போரின் பின்னர், நல்லிணக்கத்தை நோக்கியும், நிரந்தர அமைதியை நோக்கி முன்னேறவும் ஐ.நா. தீர்மானம் மிக முக்கியமானது.
அந்தத் தீர்மானத்தை இங்கு நிறைவேற்றியதைவிட, அதனை நடைமுறைப்படுத்துவதிலேயே வெற்றி தங்கியிருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்துவது, அரசியல் ரீதியாக எந்தளவுக்குச் சிக்கலானது என்பதை நாம் நன்கு அறிவோம்.
மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்பாக இந்த விடயம் கொண்டு வரப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி யடைகிறோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இது குறித்து அறிக்கையினை வெளியிட இருக்கிறார்.
மனித உரிமைகள் சபை அதனை ஏற்றுக்கொண்டு, அதற்கு முழுமையான ஆதரவை வழங்கி, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான பங்களிப்பையும்வழங்கமுடியும். இதுவேநல்லிணக்கத்துக்கும், நிரந்தர சமாதானத்தை உறுதி செய்யக்கூடிய பொறுப்புக்கூறலுக்கும், ஜனநாயகத்துக்கும், இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்களுக்கும் வழிவகுக்கும் - என்றார். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்



### இராமநாதன் சந்திரசேகரம்
(இளைப்பாறிய கிராம சேவகர்)


அனலைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சந்திரசேகரம் நேற்று (17.06.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனலட்சுமியின் பாசமிகு கணவரும் ராஜ்குமார் (இந்தியா), நிர்மலா (ஜேர்மனி), தர்மிளா (பிரதேசசபை ஊர்காவற்றுறை), ஜீவப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் ஈஸ்வரன் (ஜேர்மனி), செந்தூரன் (பிரதேசசபை ஊர்காவற்றுறை),மதுரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.செந்தூரன் (மருமகன்)
077 771 6395
(J 2221)
(17,19)

## மரண அறிவித்தல்



### சின்னப்பு நாகராசா
(ராசா அண்ணா)

அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு நாகராசா (ராசா அண்ணா) கடந்த (15. 06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயிலர் மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவநாதன், பவானி, வசந்தராசா, சுரேஸ், தனேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, செல்லம்மா, செல்லத்துரை, செல்வமலர், செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் சோனகன் பிலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
(c 22041)
(17,19)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அன்னம்மா மரியானந்தராஜா
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

பிறப்பு 13 . 11 . 1933



இறப்பு 15 . 06 . 2016

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ். மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா மரியானந்த்ராஜா கடந்த (15. 06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செபஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மரியானந்தராஜாவின் அன்பு மனைவியும் லோறன்ஸ் ராசகுமார் (நோர்வே), மரீனா லிசியகுமார் (பிரான்ஸ்), டொரீனா லீமகுமாரி (பிரான்ஸ்), லொஜிஸ்ரன் லீனஸ்குமார் (சுவீடன்), நோயல் ஜீவகுமார் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஏபிரகாம், ஆசீர்வாதம், இன்னாசிமுத்து, பற்றிமா, காலஞ்சென்றவர்களான நிக்கிலாபிள்ளை, மரியநாயகம், புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேணி (நோர்வே), சுகந்தி (சுவீடன்), சத்தியசீலன் (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரான்சிலின், எவிலின், டெல்சன், ஏரிக், செலின், கருலின் (பிரான்ஸ்), பிராண்டன் (சுவீடன்), பிரா்யன், பிறைனா (நோர்வே),அருண்,ஆகாஷ் (சுவீடன்) ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் திருவுடல் இன்று(18.06.2016) சனிக்கிழமை மிருசுவில் புனித நீக்கிலாஸ் தேவாலயத்தில் பி.ப 3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மே/பா. சி.மரியநாயகம்
(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்)
ஸ்ரேசன் வீதி, மிருசுவில்.
(J 2220)
(17,19)

தகவல்:
நோயல் (மகன்)
076 8865399,
077 7771539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலக்கப்பட்டார் பில்லி பவுடன்



தனக்கே உரிய உடல் அசைவுகளால் ரசிகர்களின் மனங்களைக் கட்டிப் போட்ட நடுவரான நியூசிலாந்தின் பில்லி பவுடனை சர்வதேச நடுவர்கள் குழாமிலிருந்து நீக்கியுள்ளது அந்த நாட்டின் கிரிக்கெட் சபை.

1995ஆம் ஆண்டு சர்வதேச அளவில் நடுவராகப் பணியாற்ற தொடங்கிய பவுடன், இதுவரை 84 டெஸ்ட், 200 ஒருநாள் மற்றும் 24 ரி-20 ஆட்டங்களில் நடுவராகப் பணிபுரிந்தார். சர்வதேச நடுவர்கள் குழாமிலிருந்து பவுடன் நீக்கப்படுவது இது முதல் முறையல்ல. 2013ஆம் ஆண்டும் இதுபோன்று நீக்கப்பட்டு, பின்னர் 2014ஆம் ஆண்டு மீண்டும் இணைக்கப்பட்டிருந்தார். தற்போது இரண்டாவது தடவையாக நீக்கப்பட்டார். நியூசிலாந்து கிரிக்கெட் சபை, புவுடனின் நீக்கத்துக்கான காரணங்கள் எதையும் குறிப்பிடவில்லை. (ம)

## அயர்லாந்து - இலங்கை 2ஆவது ஆட்டம் இன்று

அயர்லாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் இரு ஆட்டங்கள். நேற்றுமுன்தினம் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில், இலங்கை வெற்றிபெற்றுள்ளதால் இந்த ஆட்டத்தில் வெல்ல வேண்டிய கட்டாய நிலைமை அயர்லாந்துக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறாக அயர்லாந்து வெற்றிபெற்றாலும், கிண்ணம் இலங்கையிடமிருந்து பறிக்கப்பட வாய்ப்பில்லை. மாறாக கிண்ணம் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

(ம)

## ஸ்ரொக்ஸுக்குத் தடை



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை கார் ஓட்டத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒருசில மாதங்களில் அவர் 4 முறை காரை வேகமாகச் செலுத்தி சிக்கியுள்ளார். இதனாலேயே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடை முடிந்த பிற்பாடு விதிமுறைக்கு முரணாக வேகமாகச் செலுத்தினால் சிறைத் தண்டனை வழக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் அணியை எதிர்த்து முல்லைத்தீவு இளந்தென்றல் அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.க. தொடர்**

அராலி திருமகள் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதவுள்ளது. (ம-23-108)

## மாகாணமட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான, மாகாணமட்ட சதுரங்கப் போட்டிகளும், கால்பந்தாட்டத் தொடர்களும் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 15வயது, 19வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன. 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரியின் மைதானத்திலும், 19 வயதுப் பிரிவுபெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

(ம-23-108-422)

# இலங்கைக்கு வெற்றி சிக்கியது அயர்லாந்து




இலங்கை - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை 76 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தரங்க அணியில் இணைக்கப்பட்டிருந்தாலும், அவர் ஆரம்ப வீரராக களமிறக்கப்படவில்லை. மாறாக மத்திய வரிசையிலேயே பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக குசல் பெரேரா மற்றும் குணதிலக. ஒன்பது ஓட்டங்களுடன் குணதிலகவையும் 32 ஓட்டங்களுடன் குசல் பெரேராவையும் வீழ்த்தினார் மெக்கார்த்தி. மென்டிஸ், சந்திமல் இணை நீண்டு நிலைபெற்றது. பிறிதொரு இலக்கை எட்டாமல் நூறு ஓட்டங்களைக் கடந்தது இலங்கை. 51 ஓட்டங்களுடன் மென்டிஸை வீழ்த்தினார் கெவின் ஓ பிரையன். மத்தியூஸ், சந்திமல் இணைந்து மற்றுமொரு இணைப்பாட்டத்தை அரங்கேற்றினர். ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தை தவறவிட்டார் மத்தியூஸ். பின்வரிசையில் அதிரடி காட்டி ஸ்தம்பித்திருந்த சராசரியை மீண்டும் கட்டியெழுப்பினார் சானக. மறுமுனையில் சந்திமல்லின் நிதான சதம் அரங்கேற இலங்கை 303 - 7. சானக 19 பந்துகளில் 42 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பந்துவீச்சில் அயர்லாந்து சார்பாக ரன்கின், மெக்கார்த்தி இருவரும் தலா இரு இலக்குகளையும், மர்தாஹ், சொறின்சன், கெவின் ஓ பிரைன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்துக்கு நட்சத்திர வீரரும் அணியின் தலைவருமான போட்டர்பீல்ட், ஸ்ரிர்லிங் இணை சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இணைப்பாட்டமாக 53 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில், ஸ்ரிர்லிங்கை வீழ்த்தினார் சானக. போட்டர்பீல்ட் நிலைத்து நின்றாலும், அதிரடி வீரர்களான ஜொய்ஸ், அன்டர்சன் அடுத்தடுத்து ஆட்டமிழந்து சென்றனர். இருவரையும் வீழ்த்தியவர் சானக. களமிறங்கினார் கெவின் ஓ பிரையன். கூடவே இலங்கைக்கு ஆபத்தும் களமிறங்கியது. இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 73 ஓட்டங்களுடன் போட்டர்பீல்டை வீழ்த்தினார் எரங்க. பிரையனும் ஆட்டமிழக்க அயர்லாந்தின் பின்வரிசையால் இலங்கையின் பந்துவீச்சை எதிர்த்து போராட இயலவில்லை. முடிவில் அந்த அணி 216 ஓட்டங்களில் சுருண்டது. டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 76 ஓட்டங்களால் வென்றது இலங்கை.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக சானக 5 இலக்குகளையும், மத்தியூஸ் 2 இலக்குகளையும், எரங்க, பிரதீப், பிரசன்னா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

**அறிமுக அசத்தல்**

இந்த ஆட்டம் சானகவுக்கு அறிமுக ஆட்டமாக அமைந்திருந்தது. அவர் 19 பந்துகளில் 42 ஓட்டங்களையும், 5 இலக்குகளையும் வீழ்த்தி இலங்கையின் வெற்றிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தார். (ம)

# முதல் தென்னாபிரிக்கர்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 7 இலக்குகளை வீழ்த்தியதன் மூலம் குறித்த மைல்கல்லை எட்டிய முதல் தென்னாபிரிக்கர் என்ற சிறப்பு தகிருக்குக் கிடைத்தது.

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும் தீவுகளும் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 343 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு களமிறங்கிய தீவுகள் 204 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. தகீர் 7 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.

ஒருநாள் ஆட்டங்களின் வரலாற்றில் தென்னாபிரிக்க சுழல் வீரர் ஒருவர் ஏழு இலக்குகளை வீழ்த்துவது இது முதல் முறையாகும். சர்வதேச வீரர்களைப் பொறுத்தமட்டில் மூன்றாவது வீரராக தகீர் உள்ளார். இதற்கு முன்னர் முரளி, அப்ரிடி இருவரும் இந்த மைல்கல்லை எட்டியுள்ளனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென். ஹென்றிஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் இளவாலை சென். ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கெழும்பு றோயல் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் ஏழாவது நிமிடத்தில் கில்மன் ஹென்றிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற ஹென்றிஸின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பரதி. இரண்டாவது பாதியில் ஹென்றிஸின் போராட்ட குணம் மேலும் அதிகரித்தது. அனோஜன், அஜித் இருவரும் மேலும் இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் றோயலைப் பந்தாடியது ஹென்றிஸ். (ம-23)

## கிளி. மாவட்டச் செயலகம் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

கரணவாய், ஜூன் 18
கிளிநொச்சி அரச திணைக்களங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சமநிலைத் தவிர்ப்பு உதைமூலம் சுகாதாரத் திணைக்களத்தை வீழ்த்தி கிண் ணத்தை கைப்பற்றியது கிளி நொச்சி மாவட்டச் செயலக அணி.

பரவிப்பாஞ்சான் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார திணைக்கள அணியும் மாவட்ட செயலக அணியும் மோதின. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் ராஜ் முதல் கோலைப் பதிவுசெய்ய, சுகாதாரத் திணைக்களத்தின் ஆதிக்கம் ஆரம்பமானது. அடுத்த சில நிமி டங்களில் ஜெயந்தனின் உதவியால் பதிலடி கொடுத்தது மாவட்டச் செயலகம். மேலதிக கோல்கள் எவையும் பதிவாகாத நிலையில் சமிநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதுமாவட்டச் செயலக அணி. ஆட்ட நாயகனாக ஜெயந்தனும், சிறந்த கோல் காப்பாளராக பிரதீசனும் தெரிவானார்கள். (ம-23-108)

## ஆவரங்கால் மத்தி - இந்து இறுதியில் இன்று மோதல்

கரணவாய், ஜூன் 18
சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய வி. கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கழகம் இன்று மோதவுள்ளது. கலையொளியின் மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-108)

# மாகாணமட்ட ரென்னிஸ் இந்து மகளிர் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 18
மாகாணமட்ட ரென்னிஸ் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனானது யாழ். இந்து மகளிர் அணி.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ரென்னிஸ் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டதான இந்த இறுதியில் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில் களமிறங்கிய டிலக்சனா 6:3, 7:6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் அணியின் சார்பில் களமிறங்கிய தமிழினி 6:2, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். தற்போது நிலைமை 1:1. எனவே இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது. இரட்டையர் ஆட்டம் இந்து மகளிரின் வசமாக முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

## திக்கம் இளைஞரின் அரையிறுதி இன்று

கரணவாய், ஜூன் 18
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் இன்று மோதவுள்ளது. இளைஞர் வி.கழக மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு ஆட்டம் நடைபெறும். (ம-108)

## இந்தியா - சிம்பாப்வே ரி-20 இன்று ஆரம்பம்

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது.

சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு முதலாவது ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 20ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)

## மத்திய மகளிர், இந்து மகளிர் இறுதியில் இன்று பலப்பரீட்சை

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரம் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணிகள் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற அரையிறுதிகளில் முதலாவதில் யாழ். இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து முல்லைத் தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் மோதியது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யோகபுரத்தின் சார்பாக ஹதுசா, இந்து மகளிர் சார்பில் தனுசா மோதினர். இதில் ஹதுசா 22: 6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் இந்து மகளிர் சார்பில் சுரபூஜிதா, யோகபுரம் சார்பில் டென்சிகா பலப்பரீட்சைநடத்தினர். சுரபூஜிதா 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார். இறுதித் தீர்மானமாகும் இரட்டையர் ஆட்டத்தில் இந்து மகளிரின் சார்பில் களமிறங்கிய டெனுசா, விதுர்சிகா இணை 16:1 என்ற புள்ளிக ளின் அடிப்படையில் வெற்றிபெற இறுதிக்குத் தகுதி பெற்றது இந்து மகளிர்.

இரண்டாவது அரையிறுதியில் வடமராட்சி மத்திய மகளிர் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி களமிறங்கியது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் மத்திய மகளிர் சார்பாக கஜானா, இந்துவின் சார்பில் ஜென்சிகா மோதினர். கஜானா 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் இந்துவின் சார்பில் கவியா, மத்திய மகளிர் சார்பில் லக்சினி மோதினர். இதில் கவியா 13:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார். இறுதியை தீர்மானிக்கும் இரட்டையர் ஆட்டத்தில் மத்திய மகளிரின் சார்பில் களமிறங்கிய கம்சனா, தர்சினி இணை 16:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற 2:1 என்ற செற் கணக்கில் இறுதிக்குத் தகுதி பெற்றது வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி. (ம-23)

# மாகாணமட்ட கரம்: இந்து மகளிர்-கொக்குவில் இந்து இறுதியில்


கொக்குவில் இந்து அணி


இந்து மகளிர் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 18
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரம்தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற அரையிறுதிகளில் முதலாவதில் யாழ். இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து பெரியமடு மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. இரு ஒற்றையர் ஆட்டங்கள், ஓர் இரட்டையர் ஆட்டம் என மொத்தம் மூன்று செற்களைக் கொண்டதாக அரையிறுதிகள் அமைந்திருந்தன. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் சார்பாக கிருஸ்ணபிரியாவும் பெரியமடு மத்தியின் சார்பாக சுஸ்மிதாவும் களமிறங்கினர். சுஸ்மிதா 17:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து மகளிருக்கு அதிர்ச்சி வழங்கினார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் இந்து மகளிரின் சார்பாக லக்சிகாவும் பெரியமடு மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பாக நிசானியும் மோதினர். லக்சிகா 21:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று 1:1 என்று சமநிலையாக்கினார். இரட்டையர் ஆட்டத்தில் இறுதியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட இந்து மகளிரின் சார்பாக களமிறங்கிய மேனகா, நுஸ்னா இணை 19:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற இறுதிக்குச் சென்றது இந்து மகளிர்.

இரண்டாவது அரையிறுதியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் மோதியது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துவின் சார்பில் டிசாந்தி, யோகபுரம் சார்பில் லினுசா மோதினர். 25:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் டிசாந்தி வெற்றிபெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துவின் சார்பாக துசாயினி, யோகபுரம் சார்பாக நிதுர்சாவும் மோதினர். இதில் 25:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துசாயினி வெற்றிபெற 2:0 என்ற நேர் செற் கணக்கில் இறுதிக் குத் தகுதிபெற்றது கொக்குவில் இந்து. இறுதியாட்டம் யாழ். மத்தியின் உள்ளரங்கில் இன்று நடைபெறவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய கற்கைநெறிகள் ஆரம்பம்**
MS office, Web Design *Multimedia *AutoCAD, *3D Max
*Phone Repairing, *Hardware Technician, *CCTV Technician
Engineering/ Expert-USA, Organ-Keyboard(Srikugan Sir)
*2 நாட்களில் பூர்த்தி செய்வதற்கான உத்தரவாதம்
எவ்வயதினரும் விரும்பும் நேரத்தில் கற்கலாம்
முன்பதிவுகளுக்கு
www.mcai.edu.lk
775520940
10% Discount All Credit / Debit Card Payment
கல்வியங்காட்டு சந்தியில் MCAI Campus
Qualified Lectures From American Institute-AICT
The Island Wide leader in ICT

**கம்பனி company**
புதிய கம்பனிகளை உருவாக்குதல் ( Incorporation) இயங்காமல் (Defunct) இருக்கும் கம்பனிகளை மூடுதல் ( Closure ), கம்பனி இயக்குநர்களை (Directors) நியமித்தல், மாற்றுதல் (Change) மற்றும் கம்பனி செயலாளர்களாக (Secretaries) செயற்படுதல் போன்றவை கம்பனி பதிவாளர் திணைக்களத்துடன் (Registrar of Companies) தொடர்பு கொண்டு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
Accounting systems & Management Consulatants(pvt)Ltd,
No.245, Kasthuriyar Road, Jaffna.
ariamjaffna@gmail.com
021 222 5372
No:48-3B1/1 Dharmarama Road, 2nd Lane,Colombo - 6
variam@sltnet .lk
011 250 6194 , 011 259 8326
(சி/22033) (11,18)



## யூரோ கிண்ணக் கலவரம்: ரஷ்ய ரசிகர்களுக்குச் சிறை

நடைபெற்றுவரும் யூரோ கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தின் போது கலவரத்துக்குக் காரணமாக இருந்த ரஷ்ய ரசிகர்களுக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. அண்மையில் இடம்பெற்ற ரஷ்யா–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், இரு நாட்டு ரசிகர்களும் மோதிக் கொண்டனர். இதில் 35பேர் படுகாயமடைந்தனர். விசாரணையின் போது பெறப்பட்ட வீடியோ ஆதாரங்களில் கலவரத்துக்கு ரஷ்ய ரசிகர்களே காரணம் என்று தெளிவானது. இதனையடுத்து அந்த ரசிகர்களைக் கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றில் ஆதாரங்களுடன் முன்னிலைப்படுத்தியபோது அவர்களுக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. (ம)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No,15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
0770365728, 0777585913, 0777222422, 071429935
Batch 1: 20.06.2016
Batch 2: 22.06.2016
Batch 3: 25.06.2016
Batch 4: 27.06.2016
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**சாரதி தேவை**
லேடன் லொறி ஓடக்கூடிய அனுபவமுள்ள சாரதி தேவை.
மாதம் ஐம்பதாயிரத்திற்கு மேல் சம்பளம் வழங்கப்படும்.
துர்க்கா கிறேசர்,புத்தூர்
தொடர்பு: 077 3398775

**தமிழ் ஊடகப் பரப்பில்**
**புதிய உதயம்**
**உண்மைகளை உரத்துச் சொல்ல... !**
புதுவிதி
PUTHU VITHI
**இன்று முதல் வாரந்தோறும் உங்கள் கரங்களில்...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.